ஜுலை – ஆகஸ்ட் 1984

விலை ரூ. 4-00

# திருக்கோயில்






அட்டை முதற்பக்கம்:

திருச்சி மாவட்டம் சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில், 1984 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நிகழ்ந்த, ஆலய மேம்பாட்டுத் திட்டம், ரூபா ஏழுகோடி வைப்புநிதித் திட்டம் ஆகியவற்றின் துவக்கவிழாக் காட்சி.




இவ்விழாவில், பொம்மபுர ஆதீனம் மயிலம் தவத்திரு சிவஞான பாலைய சுவாமிகள், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க இராமசாமி அடிகளார், கோவை கௌமாரமடம் -சிரவை ஆதீனம் தவத்திரு. சுந்தரசுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குதல்.

முகப்பு

ஆலய மேம்பாட்டுத் திட்ட
விழாத் துவக்கக் காட்சி

# திருக்கோயில்


ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

| மாலை : 26 | திருவள்ளுவர் ஆண்டு 2015, ரத்தாஷி ஆண்டு-வைகாசி, ஆணி<br>ஜூலை, ஆகஸ்ட் 1984 விலை ரூ. 4-00 | மணி : 7, 8 |
|---|---|---|


## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

***திருக்கோயில்*** திங்கள் இதழின் சந்தாதாரர் களாகச் சேர விருப்பமுள்ளவர்கள்,

**ஆணையர் அவர்கள்,**
**அறநிலைய ஆட்சித்துறை,**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரையுள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக ஆணையர் அலுவலகத்திற்கே பணம் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாளுக்கு நாள் உயர்ந்துவரும் தாள்விலை, அச்சகக் கட்டணம், அஞ்சல்தலைக் கட்டணம் காரணமாக, 1983 ஜனவரி முதல் ''திருக்கோயில்'' திங்கள் இதழின் ஆண்டுச்சந்தா உள்நாட்டிற்கு ரூ.15 லிருந்து ரூ.24 ஆகவும், இலங்கை மலேசியா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ.25 -லிருந்து ரூ.36 -ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

**ஆதலின், திருக்கோயில் இதழின் ஆண்டுச் சந்தா 1983 ஜனவரி மாதம் முதல், பின்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது:**

| | | |
|---|---|---|
| **உள்நாடு** | ரூ. | 24.00 |
| **வெளிநாடு** | ரூ. | 36.00 |

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும் பொழுது மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் (Pin Code) எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## பொருளடக்கம்


ஆலய மேம்பாட்டு வைப்புநிதித் திட்டத் துவக்க விழாவில் சிறப்புரை
—மாண்புமிகு இராம. வீரப்பன், அறநிலைய அமைச்சர்

ஆலயமேம்பாட்டுத் திட்டவிழாவில் வரவேற்புச் சிறப்புரை
—திரு. கு. ஆளுடையபிள்ளை, அறநிலைய ஆணையர்

தலைமைச் சிறப்புரை
—மாண்புமிகு ஆர். சௌந்தரராஜன், உள்ளாட்சித் துறை அமைச்சர்

ஆதீனத் தலைவர்களின் அருள் வாழ்த்துரைகள்

சாமம் சான்ற ஞானப் பனுவல்
—ந. ரா. முருகவேள்

சிந்தனைக்கு நான்கு திருக்குறள்கள்
— டாக்டர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம்

ஆகமத்தில் சொல்லப்பட்ட பொருள்
— திரு மு. அருணாசலம்

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்
—திரு டாக்டர் இரா. கலைக்கோவன்

பால்வரை தெய்வம்
—திரு க. வெள்ளைவாரணனார்



இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# ஆலய மேம்பாட்டு வைப்புநிதித் திட்டத் துவக்க விழாவில் சிறப்புரை*

மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள்
அறநிலைய அமைச்சர்

(1) முன்னுரை: திட்ட விளக்கம்:

இந்தியத் திருநாட்டிலுள்ள மாநிலங்களில் தமிழகத்தில்தான் மிக அதிகமான திருக்கோயில்கள் உள்ளன. அவைகளில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியவர்களால் பாடல்பெற்ற புனிதமான திருக்கோயில்கள் பெருமளவில் உள்ளன. இம்மாதிரி, இறைஉறையும் மிகப்பெரிய கோயில்களைக்கட்டி முடித்த முந்தைய மாமன்னர்களும், குறுநிலத் தலைவர்களும் மிக அதிக அளவில் சொத்துக்களை;அவைகளின் பராமரிப்பிற்காக அளித்துச் சென்றனர். காலப்போக்கில் இந்தச்சொத்துக்களிலிருந்து வரக்கூடிய வருமானம் குறைந்து விட்டது. மேலும் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களால் இத்திருக்கோயிகளைச் சீரிய முறையில் பராமரிக்க இயலாது போயிற்று.

சில திருக்கோயில்களில் விளக்கேற்றி அன்றாட வழிபாடு செய்தல், மற்றும் அர்ச்சகர், ஓதுவார் மற்றும் முக்கியப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சொற்ப சம்பளம் கொடுத்தல் போன்றனவற்றிற்குக்கூடத் தேவையான நிதி வசதி இல்லாமல் இருக்கின்றன. பலதிருக்கோயில்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. இவைகளைப் பராமரிக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

இந்தச் சூழ்நிலையில், புனிதமான இந்தத் திருக்கோயில்களில் குறைந்தது தினமும் ஒரு நேர வழிபாடாகிலும் நடத்துவதற்கும், அர்ச்சகர்கள் ஓதுவார்கள் போன்ற குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்கள் நலனைக் காப்பதற்கும் வசதியாக, நிதி ஒன்றினைஏற்படுத்தத் திட்டம் ஒன்றினைத் தமிழக அரசு தீட்டியுள்ளது. மேலும் கிராமப் புறங்களில் போற்றத்தக்கதாகவும், புகழ்வாய்ந்ததாகவும் உள்ள கிராமத் திருக்கோயில்களைக் கட்டவும், புதுப்பிக்கவும், ஊரகங்களில் கோரிக்கைகள் எழுகின்றன. தமிழகச் சட்டப்பேரவையில், வரவு செலவுத் திட்டத் தொடரில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை பற்றிய 1984-85ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின் போது, திருக்கோயில்களின் முன்னேற்றத்திற்காகவும் திருக்கோயில் பணியாளர்களின் உதவிக்காகவும் மூன்று தனித்தனி நிதி அமைப்பது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்றுவகை நிதிகளுள் ஒன்று தமிழகத்தில் உள்ள திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து மாற்றம் செய்யப்படவுள்ள ரூ. 5 கோடியினைக் கொண்டனவாகும். மூலதனம் கரையாது கட்டாகப் பேணப்படும். அதன் பேரில் வரப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு தொன்மையான, நலிந்துநிற்கும் திருக்கோயில் சந்நிதியில் விளக்கேற்றி ஒரு கால வழிபாடாகிலும் முறைப்படி செய்ய ஏற்பாடுகள் செய்யப்படும். முதல் கட்டமாக இந்த நிதியினை அமைக்கும்பொருட்டு, திருக்கோயில்களிலிருந்து இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையருக்கு ரூ. 2.5 கோடி நிதிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து நிதிமாற்றம் செய்யப்படும் ஒரு கோடி ரூபாயினைக் கொண்டு இரண்டாவது நிதி அமைக்கப்படும். மாதம் ரூ. 100-க்கும் குறைவாக ஊதியம் பெறும் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் மற்றும் நாதஸ்வர வித்வான்கள் போன்ற திருக்கோயில் பணியாளர்களுக்கு உதவி புரிய இந்த நிதியிலிருந்து கிடைக்கப்பெறும் வட்டித்தொகை பயன்படுத்தப்படும்.

---

* 1984 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நடைபெற்ற 'ஆலய மேம்பாட்டுத் திட்டம்' 'ரூபா ஏழு கோடி நிதி வைப்புத் திட்டம்' ஆகியவற்றின் துவக்கவிழாவில் மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய சிறப்புரை. — ஆசிரியர்

மூன்றாவது நிதிக்குப் பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் உபரி நிதியிலிருந்து ரு.1 கோடியினை ஒதுக்கி, அதன் மூலம் கிடைக்கும் வட்டி வருமானம், கிராமப் புறங்களில் உள்ள திருக்கோயில்களைப் புதுப்பித்தல் மற்றும் பழுதுபார்த்தலுக்காகப் பயன்படுத்தப்படும்.

**

(2) **நன்றியுரை:**

நம்முடைய வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய தமிழகத்தினுடைய தலைவர்களாகவும், தமிழ்ச் சமுதாயத்திலே ஆன்மீக நெறியைக் காப்பவர்களாகவும், நம்முடைய காலத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற குரு மகாசந்நிதானங்களே, மேடையிலே வீற்றிருக்கின்ற சமயச் சான்றோர்களே, தமிழ்ப் பெரியோர்களே, இந்தச் சிறப்பு மிக்க விழாவுக்கு வருகை தந்திருக்கின்ற தமிழ்ப் பெருமக்களே, தாய்மார்களே, நண்பர்களே, பத்திரிகைத் துறை நண்பர்களே, பல்வேறு பணிகளைப் புரிந்து, இந்த விழாவைச் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கின்ற திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர்அவர்களே, அறநிலையத்துறைஆணையர் அவர்களே, அறநிலையத்துறை-வருவாய்த் துறை-பொதுப்பணித் துறையைச் சார்ந்தஅரசு அதிகாரிகளே, நண்பர்களே!

நீண்ட நேரம் ஆகிவிட்ட நிலையில், நான் நன்றி கூறுகின்ற அந்த உணர்வோடு உங்கள் முன்னாலே நிற்கின்றேன். கடந்த மூன்று மணி நேரங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, இந்த நிகழ்ச்சியைக் குறித்து, சமயச் சான்றோர்கள், சமயத் தலைவர்கள், தமிழ் அறிஞர்கள் மிகச் சிறப்பாக எடுத்துரைத்திருக்கிறார்கள். ஒரு 300 ஆண்டு காலத்தில் தமிழகம் கண்டறியாத, கேட்டறியாதஒருநிகழ்ச்சி. ஆன்மீகத்துறை வரலாற்றிலே இல்லாத ஒரு நிகழ்ச்சி, தமிழகத்தினுடைய தளநாயகர், காலம் தந்திருக்கின்ற அருமைச் செல்வமாக விளங்குகின்ற மாண்புமிகு **தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவர்** அவர்களுடைய காலத்திலே. நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்பதை, மனம் திறந்து சான்றோர்கள் பாராட்டியிருக்கிறார்கள்.

காலத்தினுடைய தூதுவராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், இன்றைக்கு இந்த நாட்டிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். காலம் இட்டுக் கொண்டிருக்கிற கட்டளைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுடைய இதய நாயகனாக வீற்றிருக்கின்ற அவர்கள், ஏழை மக்களுக்கும் எளியவர்களுக்கும், இந்த நாட்டு மக்களிலே உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்கிற பேதாபேதம் இல்லாமல், மனித சமுதாயத்திற்கு ஒருநிகரற்ற தொண்டராக, தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு திருத்தொண்டை நடத்திக் கொண்டிருக்கிற அந்த மாமனிதனின் காலத்தில், இன்றைக்குத் தமிழ்ச் சமுதாயம், இழந்த பெருமையை, இழந்த புகழை, இழந்த சிறப்பை, மீண்டும் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும், பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும், அதற்கு அவர்கள் அடித்தளம் அமைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும், இங்கே சான்றோர்கள் மிகச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அரிய பெரிய சிறப்புமிக்க நிகழ்ச்சியை, வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிற, எழுதிக் கொண்டிருக்கிற, அந்த வரலாற்று நாயகர், வேறு பல அலுவல்களால் இங்கே வரமுடியாமல் போன சூழ்நிலையை, எண்ணி எண்ணி நான் வருந்திக் கொண்டிருந்தாலும், இந்தப் பகுதி மக்கள் அப்படிப்பட்ட ஒரு மிகச் சிறந்த நாட்டின் நாயகனுக்குத் தங்களுடைய நன்றியைத் தெரிவிக்கின்ற அந்தச்சூழ்நிலையை நாமெல்லாம் இழந்து இருந்தாலும், இங்கே நல்லவர்கள், சான்றோர்கள், வணக்கத்திற்குரிய திருமடங்களின் தலைவர்கள் அனைவரும், இவ்வளவு நேரமாக இங்கே உட்கார்ந்து உங்களுக்கு நல்ல அறிவுரைகளை எடுத்து வழங்கியதோடு, இன்றைக்குப் புதிய வரலாற்றை உருவாக்கிக் கொண்டு இருக்கின்ற வரலாற்று நாயகர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தங்களுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்ததற்கு, அவர்களுக்கெல்லாம் முதல்வரின் சார்பிலேயும், தமிழக அரசின் சார்பிலேயும், அறநிலையத் துறையின் சார்பிலேயும், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே வரமுடியாத அருட்சான்றோர்கள், அறநெறியைக் காப்பாற்றிக் கொண்டிருக்கின்ற பெரியவர்கள், தங்கள் வாழ்த்துக்களை அனுப்பியிருக்கிறார்கள். வழங்கியிருக்கிறார்கள். ஆலயங்களின் சார்பிலே தமிழக முதல்வருக்குப் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், அவர்களுடைய ஆசிகளையும் இங்கே வழங்கியிருக்கிறார்கள். இந்தப்பாராட்டுக்கள் அனைத்தும் அந்த மூலவருக்கு, முதல்வருக்குப் போய்ச் சேரவேண்டிய ஒன்று. எங்களைப் போன்ற உற்சவ மூர்த்திகள், அவருடைய வெளித்தோற்றமாக உலா வருகின்றோமே தவிர, வணக்கத்திற்குரிய நாயகர்-மூலவர், மாண்புமிகு முதல்வர்-டாக்டர் புரட்சித் தலைவர்தான் என்பதை, இந்த நாட்டு மக்கள் மிகத் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஆலயங்களின் சார்பிலேயும், அருள்நெறியைப் பரப்பிக் கொண்டிருக்கிற வணக்கத்திற்குரிய திருமடங்களின் சார்பிலே

யும், சான்றோர்கள் இங்கே அளித்திருக்கின்ற இந்த ஆசியுரைகளையும், வாழ்த்துக்களையும், அவர்கள் இங்கே கொடுத்து இருக்கின்ற மலர் மாலைகளையும், பொன்னாடைகளையும், அனைத்தையும் அப்படியே, இந்த நாட்டு மக்களுடைய காணிக்கையாகப் புரட்சித் தலைவரிடத்திலே கொண்டுபோய்ச் சேர்க்கின்ற அந்தப் பணியை, அவருடைய தொண்டனாகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்ற, நான் நிறைவேற்றுவேன் என்று தெரிவித்துக் கொள்கின்றேன்.

நீண்ட நேரம் ஆகிவிட்டது. அருமையான நாட்டிய நிகழ்ச்சி நடைபெற இருக்கின்றது. அதற்குப் பிறகும், நீங்கள் விரும்பினால் நல்ல திரைப்படமும் நடத்தப்பட இருக்கிறது. அதற்கிடையே நம்முடைய அருள்மிகு சமயபுரம் அம்மன் திருவுலாவும் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நீங்கள் கண்டுகளித்துச் செல்ல வேண்டுகின்றேன்.

இங்கே பெரியவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியை நன்கு நடத்திக் கொண்டிருக்கிற உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், இங்கே வருகை தந்திருக்கின்ற பெருமக்கள், சான்றோர்கள், வணக்கத்திற்குரிய ஆதீனத் தலைவர்கள் அனைவருக்கும், மீண்டும் ஒருமுறை எங்களுடைய நன்றியைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன்.

வணக்கம்.

---

## இறைவா எங்கள்உயிர் எம்.ஜி.ஆர்., விரைவில் நலம் அடையச் செய்க!

உலகமெலாம் படைத்துக்காத் தருள்புரியும்
இறைவா! நீ, ஒப்பில் லாஎம்
தலைவர்!தமி ழகமுதல்வர்! தகைசால் 'பொன்
மனச்செம்மல்'! எளியோர் தங்கள்
நிலைசிறக்கப் பெரிதுழைப்போர்! 'புரட்சிநெறிப்
பெருந் தலைவர்'! நிகரில்'வள்ளல்'!
வலவர்!எங்கள் உயிர்! **எம்.ஜி.ஆர்.** விரைவில்நலம்
அடைந்து, எமைவாழ் விக்கச் செய்க!

—ந.ரா. முருகவேள்

# ஆலய மேம்பாட்டுத் திட்ட விழாவில்
# வரவேற்புச் சிறப்புரை! *

திரு. கு. ஆளுடையபிள்ளை, ஐ. ஏ. எஸ்.,
ஆணையர், அறநிலையத்துறை

**முன்னுரை :**

(1) **அறநிலையப் பணிகள் :**

தென்னிந்தியக் கலைச் செல்வங்களாக விளங்கும் தமிழகத் திருக்கோயில்களின் நிர்வாகத்தினைக் கண்காணிக்கும்பொறுப்பினைத் தமிழ்நாடு அரசு ஏற்று, கடந்த சில ஆண்டுகளாகச் சட்டத் திருத்தங்கள் மூலமாகவும் ஆணைகள் மூலமாகவும் நிருவாகச் சீர்திருத்தங்கள் பல உண்டாக்கி, திருக்கோயில்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது.

இத்துறையின் ஆளுகையின்கீழ், ஆண்டு வருமானம் ரூ. 10,000க்குக் கீழ்ப்பட்டு 32659 நிறுவனங்களும், ரூ. 10000க்கு மேல் ரூபாய் ஒரு லட்சத்திற்குள்பட்டு 1375 நிறுவனங்களும், ஒரு லட்சத்திற்கு மேற்பட்டு 196 நிறுவனங்களும் ஆகமொத்தம் 34230 நிறுவனங்கள் உள்ளன.

இவற்றில் 2572 நிறுவனங்கள் 1977ஆம் ஆண்டுக்குப்பின், இத்துறையின் ஆளுகைக்குக் கீழ்க்கொண்டுவரப்பட்டவையாகும். மொத்த நிறுவனங்கள் 34230இல் நிருவாகச் செலவுக்காக உதவித்தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் வசூல் செய்யப்படுபவை 25930. எஞ்சியுள்ள 8300 நிறுவனங்கள் ஆண்டுவருமானம் ரூ. 200க்குட்பட்ட சிறிய கோயில்களாகும்.

**அசையாச் சொத்துக்கள் மற்றும் வருமானம்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக உள்ள நன்செய் புன்செய் வகையறா நிலங்கள் 5.25 லட்சம் ஏக்கரிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆண்டு வருமானம் ரூ. 7 கோடி ஆகும். சாகுபடிதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், கடன் ஆகியவற்றின் காரணமாக மேற்கண்ட நிலங்களிலிருந்து 1392ம் பசலி முடிய வரவேண்டிய குத்தகைப்பாக்கி ரூ. 31.5 கோடியை உடனடியாக வசூல்க்க இயலாத நிலையில் உள்ளது. திருக்கோயில்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் மனைகள் ஆகியவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆண்டுவருமானம் சுமார் ரூ. 1.75 கோடியாகும். இவ்வினத்தில் 1392ம் பசலி முடிய வரவேண்டிய பாக்கி ரூ. 3.25 கோடியாகும்.

**முதலீடுகள்:**

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு முன் ரூ.4.69 கோடியாக இருந்த கோயில் உபரிநிதி முதலீடுகள் 1984ல் ரூ. 28.22 கோடியாக உயர்ந்துள்ளது.

**திருப்பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள்:**

கடந்த ஆறு ஆண்டுகளில் ரூ. 10 கோடி மதிப்புள்ள 704 திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீடுகளும் ரூ 8¼ கோடி மதிப்புள்ள 643 இதர கட்டுமானப்பணிகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன.

**குடமுழுக்கு விவரங்கள்:**

தமிழ்நாட்டில் திருக்கோயில்களில் அதாவது 1978 முதல் 84ம் ஆண்டுவரை மொத்தம்

---

* 1984 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நடைபெற்ற ''ஆலய மேம்பாட்டுத் திட்டம்'' ''ரூபா ஏழு கோடி நிதி வைப்புத் திட்டம்'' ஆகியவற்றின் துவக்கவிழாவில், அறநிலையத் துறை ஆணையர் அவர்கள் நிகழ்த்திய வரவேற்புச் சிறப்புரை. —ஆசிரியர்

455 திருக்கோயில்களில் குடமுழுக்கு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

**ஆபரணங்கள் மற்றும் விலை மதிப்புள்ள பொருள்கள்**

திருக்கோயில்களுக்குச் சொந்தமாக பொன் வெள்ளி நகைகள் மற்றும் விலையுயர்ந்த பொருட்களின் தற்போதைய நிலவரப்படி மொத்த மதிப்பு ரூ. 49 கோடியாகும்.

தமிழகத்தில் 9 திருக்கோயில்களில் தங்கத் தேர்கள் உள்ளன.

**உற்சவச் சிலைகள் பாதுகாப்பு:**

திருமேனிகள் தொல்பொருள் முக்கியத்துவம், கலைச்சிறப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இவற்றை அடையாளப் பதிவு செய்ய 'எக்ஸ் ரே' மற்றும் 'கேமரா' சாதனங்கள் வாங்கவும் வழிபாட்டில் இல்லாத இத்தகைய திருமேனிகளை ஒன்று சேர்த்து நவீன பாதுகாப்பாக வைக்கவும் தஞ்சை மாவட்டத்தில் சுமார் ரூ. 85 லட்சம் மதிப்பீட்டில் ஆய்வு மற்றும் பாதுகாப்புக் கூடம் அமைக்க மதிப்பீடுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இந்த வகைக்கு 1983-84ல் நிதி ஆண்டில் ரூ. 10 லட்சம் அரசு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**சமூக நலப்பணிகள்:**

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் சார்பில் 6 கல்லூரிகள், 10 மேல்நிலைப்பள்ளிகள், 2 தொழிற்பயிற்சிப் பள்ளிகள், 9 நடுநிலை ஆரம்ப மற்றும் மெட்ரிக் பள்ளிகள் 13 ஆகமப் பாடசாலைகள், 3 நாதஸ்வரப்பள்ளிகள், 22 மருத்துவமனைகள், ஒரு ஊமையர் செவிடர் பள்ளி, 37 அன்பு இல்லங்கள், 3 முதியோர் இல்லங்கள், 202 நூலகங்கள் மற்றும் 106 கல்யாண மண்டபங்கள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

வழிபடுவோர் வசதிக்காக முக்கிய திருக்கோயில்களில் சகல வசதிகளும் கொண்ட நூற்றுக்கணக்கான அறைகள் குடில்கள் மற்றும் இலவச விடுதிகள் கட்டப்பட்டுள்ளன.

**கம்பர்கோட்டம்**

இத்துறையின் சார்பில் தஞ்சை மாவட்டம் தேரழுந்தூரில் 17.3.84 மற்றும் 18.3.84 தேதிகளில் மிகச் சிறப்பான முறையில் கம்பர் விழா நடத்தப்பட்டது. இதே போன்று இனி ஆண்டுதோறும் பங்குனி உத்தரம் நாளன்று கம்பர் விழா தேரழுந்தூரில் நடத்த அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வகைக்கு ரூ. 2.5 லட்சம் அளவில் ஒரு நிலையானவைப்பு நிதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. கம்பர் பிறந்த ஊரான தேரழுந்தூரில் ரூ. 20 லட்சம் மதிப்பீட்டில் 'கம்பர்கோட்டம்' அமைப்புப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்த வகைக்கு அரசு மானியம் ரூ.8 லட்சமும், ஆலயங்களின் உபரிநிதியிலிருந்து ரூ. 12 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. வெளி

**வெளிநாடு மற்றும் பிற மாநிலங்களுக்கு நிதி உதவி**

தமிழ்நாட்டில் திருக்கோயில்களின் உபரி நிதியிலிருந்து இலங்கை அருள்மிகு திருக்கேதீஸ்வரர் திருக்கோவில் திருபணிக்கு ரூ. 1.25 லட்சம் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர தற்சமயம் கலிபோர்னியா, சான் பிரான்ஸிஸ்கோவில் கட்டப்பட்டுவரும் இந்துக் கோவில்களுக்கு ரூ. 3,21,370 மதிப்புள்ள கற்சிலைகள், வெண்கலச்சிலைகள், செப்பு கலசங்கள் மற்றும் சோடசோபசார சாமான்கள் ஆகியவைகளை வழங்க ஏற்பாடாகி வருகிறது. பாரதத்தின் இதர மாநிலங்களில் கட்டப்பட்டு வரும் திருக்கோயில்களுக்கு தமிழகத்திலுள்ள திருக்கோயில்களின் உபரிநிதியிலிருந்து ரூ. ரூ.3,65,000 நிதிஉதவி வழங்கப்பட்டுள்ளது.

**(2) வரவேற்புரை:**

அறநிலையத்தின் இத்தகைய ஆக்க அரும் பணிகளுக்கெல்லாம் சிகரமாக, 'பொன்மனச் செம்மல்' மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் உருவாக்கி அளித்துள்ள ஆலயமேம்பாட்டுத் திட்டம், ஏழுகோடி ரூபா வைப்புநிதித் திட்டம் ஆகியவை, தலைசிறந்து விளங்குகின்றன.

இந்த விழாவிற்கு, ஆன்மீக அரங்கில், தலைமை ஏற்றிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற இருக்கும் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களே, மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் ஆன்மீகத் துறையிலே தலைவர்களாக விளங்கும் பெருமக்களே, பல திருக்கோயில்களிலிருந்து இங்கு ஆசிகூற வந்திருக்கும் தக்கார் பெருமக்களே, மற்றும் அறங்காவலர் குழு உறுப்பினர், தலைவர் பெருமக்களே, மற்றும் அறிஞர் பெருமக்களே, புலவர் பெருமக்களே, அரசவைக் கலைஞர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திருச்சிராப்பள்ளி நகரிலே தாயுமானவர் உறையும் திருக்கோயிலுக்கு, ஒரு

தனிச் சிறப்பு உண்டு. இறைவன் தாயுமாகி அருள்பாலித்திருக்கின்றார். சமயபுரம், திருச்சிக்கு அருகில் உள்ள ஒரு பெரிய திருக்கோயில். அண்மையிலே, அது ஒரு தனி நிர்வாகத்தின்கீழ் வந்து இயங்க ஆரம்பித்திருக்கின்றது. இந்தத் திருக்கோயிலிலே, இன்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சியில், எப்படி ஒரு தாய் தனது நலிந்த குழந்தைகளுக்குத் தனியே அன்பு செலுத்தி, அவற்றைப் பராமரிப்பாளோ, அது போன்று நலிந்த திருக்கோயில்கள், பல்வேறு வகையான சிரமங்களைத் தாங்கிக் கொண்டு இருக்கும் திருக்கோயில்கள் சீர்மை பெறவும், சிறப்புப் பெறவும், திருப்பணிகள் செய்து முடிக்கவும், ஒழுங்காக வழிபாடுகள் நடைபெறவும், பல்வேறு வகையான நல்ல முன்னேற்றங்களைக் காணவும், ஆலய மேம்பாட்டு நிதித் துவக்க விழா நடைபெறுகின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறைஅமைச்சர் அவர்களும், இந்த நலிந்த திருக்கோயில்களுக்குத் தாயாக அமைந்து, பரிவாக ஒரு நல்ல திட்டத்தை ஏற்படுத்தி, மிகச் சிறப்பான முறையிலே, அத்திட்டத்தை இன்று துவக்குவதற்கு, இங்கு ஏற்பாடு செய்கியிருக்கின்றது. இந்தக் கூட்டத்திற்குத் தலைமையேற்றிருக்கும் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களை, உங்கள் சார்பாகவும் அறநிலையத்துறையின் சார்பாகவும், வருக வருக என்று மிக்க அன்புடன் வரவேற்கின்றேன். இந்தக் கூட்டத்திலே சிறப்பாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, எங்களையெல்லாம் ஊக்குவித்து வரும் மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களை, வருக வருக என்று வரவேற்கின்றேன்.

இங்கே பல்வேறு தமிழ்நாட்டுச் சைவ மற்றும் பெரும் திருமடங்களின் பிரதிநிதிகளும், தலைவர்களும் வந்திருக்கின்றார்கள். தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார், பேரூர் ஆதீனத்திலிருந்து வந்திருக்கின்றார்கள், அவர்களைக் கரம் கூப்பி வணங்கி வருக வருக என்று வரவேற்கின்றேன். தவத்திரு. சுந்தர சுவாமிகள், கௌமார மடாலயத்தை ஸ்தாபித்து, அதைச் சிறப்பாக நடத்திப் பல்வேறு வகையான திருப்பணிகளைப் பல்வேறு மாவட்டங்களிலே சிறப்பாகச் செய்து வருகின்றார்கள். அவர்களை வருக வருக என்று வரவேற்கின்றேன். தவத்திரு. சிவஞான பாலய சுவாமிகள் மைலத்திலிருந்து வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு எங்கள் நல்வரவு உரித்தாகும். வாளமர்கோட்டையிலே மிகச் சிறந்த முறையிலே சுந்தரேசுவர சுவாமி திருக்கோயில் அமைத்து, பல்வேறு வகையான திருப்பணிகளைச்செய்து வரும் தவத்திரு காத்தையா சுவாமிகள் எங்களுடைய அழைப்பிற்கிணங்கி இங்கு வருகை தந்திருக்கின்றார்கள். அவர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

வடலூரிலே வள்ளலார் புகழ் பெருக்கி அவருடைய நிலையங்களைப் பாதுகாத்துத் தக்காராக விளங்கி வரும் தவத்திரு. ஊரன் அடிகள், எங்கள் அழைப்பிற்கிணங்கி வந்தமைக்கு நன்றி கூறி அவர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன். தமிழ் பேசும் உலகமெல்லாம் சென்று தமிழ் பரப்பி, அறநெறி வளர்த்து வரும் திருமுருக. கிருபானந்த வாரியார் சுவாமிகள் இங்கு வந்திருக்கின்றார்கள். அவர்களுடைய வரவுக்கு நன்றி செலுத்தி, அவர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன். திருச்சி நகர் என்றாலே, 'முத்தமிழ்க்காவலர்' டாக்டர் கி.ஆ.பெ. அவர்கள் பெயர், எல்லோருக்கும் நினைவு வரும், அவர்கள் அன்புடன் இங்கு வந்து ஆசி கூற இருக்கின்றார்கள். அவர்களுடைய வரவும் நல்வரவாகட்டும். அதே போன்று கவிதாமணி அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார் அவர்கள் இங்கு வந்து இதில் பெருமளவு பங்கு கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய வரவு நல்வரவாகுக. பேராசிரியர் புலவர் திலகம் கீரன் அவர்கள், தங்களுடைய இன்றியமையாப்பணி வெளியூரில் இருக்க, வேண்டிய பணியையும் தள்ளி வைத்து, இங்கு வந்திருப்பதற்கு நன்றி கூறி அவர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன். அதே போன்று இராமநாதபுரத்திலிருந்து புலவர் முனியாண்டி அவர்கள், வருகை தந்திருக்கின்றார்கள். அவர்கள் வரவு நல்வரவு ஆகுக என்று கூறி, அவர்களையும் வருக வருக என்று வரவேற்கின்றேன்.

மயிலை முனிவர் தவத்திரு. சுந்தரராம குருஜி அவர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களையும் வருக வருக என்று எல்லோர் சார்பிலும் வரவேற்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. விசுவநாதன் அவர்கள், இந்தக் கூட்டத்திற்குப் பெருமளவிலே கடந்த 10 நாட்களாக உழைத்து ஏற்பாடு செய்து, இங்கு வருகை தந்து வாழ்த்துரை வழங்க இருக்கின்றார்கள். அவர்களுக்கும் நல்வரவு கூறி, அவர்களை வருக வருக என்று வரவேற்கின்றேன். பல திருக்கோயில்களின் தக்கார்கள் வந்திருக்கின்றார்கள். 70 திருக்கோயில்கள் இந்த நிதிக்கு வேண்டிய காசோலைகள் கொடுத்திருக்கின்றன. அந்தக் கோயில்களின் பிரதிநிதிகள் அனைவருக்கும், எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து, அவர்கள் இங்கு அனுப்பியுள்ள பிரதிநிதிகளைச் சிறப்பாக வருக வருக என்று வரவேற்கின்றேன்.

அதிலும் குறிப்பாக இரண்டு கோடி அளவிலே மிகப் பெரிய தொகையை அளித்து, இந்த நிதி துவக்கப் பெரும் ஆதரவு தந்த பழனி கோயில் தக்கார், டாக்டர் இராதா தியாகராஜன் அவர்களை, மிகச் சிறப்பான முறையிலே வருக வருக என்று வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இங்குக் கூடியுள்ள ஆன்மீகப் பெருமக்கள், இந்த ஆன்மீக அரங்கிலே ஆன்மீக மறுமலர்ச்சி தமிழ்நாட்டில் எவ்வளவு சீரும் சிறப்புமாக இன்று நடைபெற்று வருகின்றது, எப்படி அது இன்னும் மேல்நோக்கி நடைபெற வழிவகைகள் வகுக்கலாம் என்றெல்லாம் கருத்துக்களைக்கூற வாய்ப்பு இந்தக்கூட்டத்திலே இருக்கின்றது.

முக்கியமாக, இன்னும் சிறிது நேரத்திலே வருகை தர இருக்கும் தருமை ஆதீனத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களும், தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களும் இங்கு வந்து ஆசி கூற இருக்கின்றார்கள். அவர்கள் வருகையையும் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்து, வருக வருக என்று அவர்களை வரவேற்று, இந்த வாய்ப்பளித்த அனைவருக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்,

வணக்கம்

---

## எற்றைக்கும் திருவருள் உடையோம்!

*''சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்,*
*இனிஎதிர் காலத்தின் சிறப்பும்,*
*இன்றுஎழுந் தருளப் பெற்றபேறு இதனால்,*
எற்றைக்கும் திருவருள் உடையோம்!''

— சேக்கிழார் சுவாமிகள்

# தலைமைச் சிறப்புரை *

மாண்புமிகு ஆர். சௌந்தரராஜன் அவர்கள்

உள்ளாட்சித்துறை அமைச்சர்

இன்றைய தினம், அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலில், அறநிலையத் துறையின் வரலாற்றிலேயே, ஒரு பெரும் சிறப்பிடம் பெறத் தகுந்த, நிகழ்ச்சி நடைபெறுகின்றது. இங்குக் கூடியுள்ள மக்களின் உள்ளங்களில் எல்லாம் ஒரு புதிய எழுச்சியும், கிளர்ச்சியும், மகிழ்ச்சியும் பூரித்துப் பொங்கி நிலவுகின்றன.

இதற்குக் காரணம், நமது தமிழக அரசின் அறநிலையத்துறையின் சார்பில், அருள்நலம் சுரக்கும் ஆலயங்களைப் பராமரிக்க வேண்டும்; மக்களுக்கு அமைதியையும் ஆன்மீக சுகத்தையும் தருகின்ற ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டும்; மக்களின் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் வாழ்க்கை நலங்களையும் வளர்க்கின்ற ஆலய அருள்நிலையங்களைப் பேணிப் போற்ற வேண்டும் என்கின்ற, ஒரு பெரிய இலட்சியத்துடன், ஆலய மேம்பாட்டுத் திட்டமும், அதன் பொருட்டு ரூபா ஏழு கோடி வைப்புநிதித் திட்டமும் உருவாக்கப்பெற்று, இன்றைய தினம் சமயபுரம் கோயிலில் துவக்கி வைக்கப்படுகின்றன.

இந்தத் திட்டத்தைச் சிறந்த முறையில், தன்னுடைய கரத்தாலே துவக்கி வைக்க இருக்கின்ற—இந்தத் திட்டம் உருவாவதற்கு மூலக் கருவாக நின்ற, என்னுடைய பாசத்திற்கும் மிகுந்த அன்பிற்கும் உரிய அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **அண்ணன் ஆர்.எம்.வீ.** அவர்களே! இந்த மேடையிலே அமர்ந்து தங்களுடைய அருளாசிகளை வழங்குவதற்காக எழுந்தருளியிருக்கின்ற வணக்கத்திற்குரிய திருமடங்களின் தலைவர்களே! பெருமதிப்பிற்குரிய கிருபானந்தவாரியார் அவர்களே! வடலூர் வள்ளற்பெருமானின் சன்மார்க்க நெறியைப் பரப்பி வளர்ப்பதற்காக அரும் பெரும் தொண்டுகளாற்றி வருகின்ற தவத்திரு. ஊரன் அடிகள் அவர்களே! மற்றும் இங்கே வருகை தந்திருக்கின்ற புலவர் பெருமக்களே! அறநிலைய ஆணையர், திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகிய பெருமக்களே! பெரியோர்களே, தாய்மார்களே, மாணவச் செல்வங்களே, ஆன்மீகப் பெருமக்களே! சமயப் பெருஞ் சான்றோர்களே!

இந்த நல்ல பெரிய சிறந்ததொரு விழாவிலே கலந்து கொண்டு, தலைமையேற்கின்ற ஓர் அரும்பெரும் வாய்ப்பை இங்கே எனக்கு வழங்கியிருக்கின்றீர்கள். 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு'. இது சாதாரணமாக நம்முடைய படிப்பைப் பொறுத்த வரையிலேயாகும். ஆனால் ஆன்மீகத் துறை என்பதனை, ஒரு கைம்மண் அளவேனும் எல்லோரும் கற்றுணர்ந்தார்களா என்று, நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஆன்மீகத் துறையிலே முத்தெடுக்க வேண்டுமென்று முயன்ற ஞானிகள் எத்தனையோபேர்! நாடு துறந்து, வீடு துறந்து வனத்திற்கு ஏகி, அங்கே கிழங்கு கனிகளைத் தின்றுகொண்டு பரம்பொருளைக் காணவேண்டுமென்று அலைந்தவர்களுடைய எண்ணிக்கை, அளவில் அடங்காது, அவரவர்கள் தங்களுடைய பார்வைக்கு அந்தப் பரம்பொருள் எவ்வாறு தெரிந்ததோ, அவ்வாறு அந்தப் பரம்பொருளைப் பற்றிப் பாடி விட்டுப் போயிருக்கின்றார்கள். அவைகள்தான் நமக்கு

* 1984 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நடைபெற்ற 'ஆலய மேம்பாட்டுத் திட்டம்' 'ரூபா ஏழு கோடி நிதி வைப்புத் திட்டம்' ஆகியவற்றின் துவக்கவிழாவில், உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய தலைமைச் சிறப்புரை.

—ஆசிரியர்

இருக்கின்ற மிகப் பெரிய சான்றுகள், கலைச் செல்வங்கள்! இறைவனைக் காணவேண்டுமென்று தேடியவர்கள், ஒவ்வொரு நேரத்திலே அந்த இறைவனை அவரவர்கள்உணர்ந்தபடி, அவரவர்களுக்குத் தேவையான வடிவத்திலே கண்டு, அவ்இறைவனுடைய வடிவத்தைப் பாடியிருக்கின்றார்கள்.

மூன்று தமிழ்ச் சங்கங்களுக்குப் பிறகு, இன்றைக்கும் தமிழன்னை இளமைகுன்றாமல், இலக்கிய வளம் குன்றாமல், இலக்கணம் குன்றாமல் விளங்கி வருகின்றாள் என்றால், அவ்வாறு அந்தத் தமிழை வளர்த்த பெருமை நம்முடைய தமிழ்நாட்டிலே இருந்த ஆழ்வார்களையும் நாயன்மார்களையும் சாரும் என்பதை, மிகவும் பெருமையோடு இங்கே எடுத்துச் சொல்லுவேன். காரணம், தமிழை வளர்ப்பதற்கு ஒவ்வொரு கால கட்டத்திலே ஒவ்வொருவர் வந்திருக்கின்றனர். பண்டைய சேர சோழ பாண்டிய மன்னர்கள் கட்டிக் காத்த தமிழ், நாயன்மார்களும் ஆழ்வார்களும்காத்து வளர்த்த தமிழ், இடைக்காலத்திலே விளங்கிய புலவர் பெருமக்களால் காக்கப் பெற்றது. அந்தப் புலவர்களுடைய காலத்திற்குப் பின்னாலே, தமிழன்னையின் வடிவத்தை இறைனுடைய வடிவத்தோடு சேர்த்தார்கள். காரணம் இறைவனுக்கே தமிழ்மொழியின் மீது அவ்வளவு பற்று! தில்லையிலே ஆடு நடனம்கின்ற கூத்தப் பெருமான், மாணிக்கவாசகருடைய திருவாசகத்தை, மாணிக்க வாசகரைத் திரும்பவும் கூறும்படி செய்து, அதனைத் தம்முடைய கையினாலே எழுதிக் கொண்டார். இந்தப் பெருமை தமிழுக்குத்தான் உண்டு.

இதைப்போலவே வைணவத்திலே எடுத்துக் கொண்டால், திருப்பாணாழ்வார் பாடிய தமிழைக் கேட்டு, அரவணைத் துயின்ற அரங்கேசன் நிமிர்ந்தெழுந்து அமர்ந்து, அவரைத் தோளில் சுமந்து வரும்படி, லோகசாரங்க மகாமுனிவருக்குக் கட்டளையிட்டருளினார் என்பது வரலாறு. இவைகளெல்லாம் தமிழின் அருமை பெருமைகளையும், அளவற்ற தெய்விக மாட்சிமைகளையும் விளக்கும் சான்றுகளாகும்.

இத்தகைய பெருமை மிக்க தமிழுக்குச் சிறப்பிடம் அளித்து, அதனைப் போற்றி வளர்த்தவை, ஆலயங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. ஆலயம் என்ற சொல்லையும் அதன் பொருளையும், நாம் நன்கு உணர்தல் வேண்டும். 'ஆ' 'லயம்' என்னும் இரண்டும் சேர்ந்து, ஆலயம் என்று அமைந்துள்ளது. 'ஆ' என்பது உயிரெழுத்து. ஆ என்பது, ஆன்மா அல்லது உயிரைக் குறிக்கும். எதிலேயும் ஒரு லயம் இருக்க வேண்டும். சுருதி லயம் என்பார்கள். தாளத்தை எடுத்துக் கொண்டால் தாளலயம் என்பார்கள். இப்படி ஒவ்வொன்றுக்கும் ஒருவகை லயம் உண்டு.

ஆகவே நம்முடைய உயிர் இருக்கிறதே, அந்த உயிரும் லயமாக இருக்க வேண்டும். அந்த உயிர் லயமாக இல்லையென்றால் மனிதன் தனது வாழ்க்கையிலே தடம்புரண்டு விடுகின்றான். ஆகவே வாழ்க்கையிலே லயம் ஏற்பட வேண்டுமென்றால், ஆலயத்திற்குப் போக வேண்டும் என்ற உணர்விலேதான், ஆலயத்தை ஏற்படுத்தினார்கள்.

ஒரு காலத்திலே மனித சமுதாயத்தினுடைய, அதாவது நம்முடைய மேம்பாட்டிற்காகத்தான் ஆலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த நாட்டிலே முறைவழுவாமல் இருந்த நெறிகள் இரண்டு. ஒன்று சமூக நெறி, மற்றொன்று சமய நெறி. சமூக நெறி, கீழே இறங்கும்போது, சமய நெறி மேலே வரும். சமயநெறி தாழும்போது சமூகநெறி மேலே வரும். ஆக இரண்டுக்கும் இடையிலே தோன்றியதுதான் சட்டநெறி. ஆனால் சமயநெறி, சமூக நெறியைப் போலச் சட்டநெறியை அவ்வளவு சீக்கிரமாக ஒத்துக்கொள்ள முடியாது. சமயம் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வரும். சமூகம் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளே வரும். ஆனால் சட்டமானது, மதில்மேல் பூனை போலத்தான் என்றைக்கும் இருக்கும். எந்தப் பக்கத்திலே குதிக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவேதான் ஒரு காலத்தில் சட்டத்திற்குக் காட்டிலும்,சமூகக் கட்டுப்பாட்டிற்கும், சமய மரபுகளுக்கும், மக்கள் தலை வணங்கினார்கள்.

மனிதனுக்குப் பண்பாட்டையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தருகிற இடமே, சமூகமும் சமயமும் தான். ஒழுக்கத்னுடையஉயர்வுகளை, பண்பாட்டின் மேன்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், சமூகத்தையும் சமயத்தையும் நாம் நன்கு தெரிந்து புரிந்து கொள்ள வேண்டும். சமயமும் சமூகமும் இரண்டு தனித்தனி இணை நேர்க் கோடுகள் (Parallel lines). இவையிரண்டும் ஒன்றையொன்று சந்திக்காமலும், ஒன்றோடொன்று மோதாமலும், ஒன்று மற்றொன்றினால் கவ்வப்படாமலும், தனிப்பட்ட முறையிலே தத்தம் நெறிகளில் முறையாக இயங்கி வந்த காலத்தில்தான், நம்முடைய நாட்டில் மக்கள் இல்லாமை இல்லாமல் வாழ்ந்தார்கள்; செல்வச் செழிப்பில் திளைத்தார்கள். அடுத்தவர்களுக்குத் துன்பம் தராமல், இயன்ற உதவிகளைச் செய்து வாழ வேண்டும் என்ற இலட்சியம் உடையவர்களாக வாழ்ந்தார்கள்.

ஆனால் அத்தகைய நிலைமைகள் யாவும் காலப் போக்கிலே மாறின. காரணம் ஒருசிலருடைய கட்டுப்பாட்டுக்குள்ளே, அதிகாரத்திற்குள்ளே, இவைகள் இயங்க நேர்ந்தன. மக்கள் மத்தியிலே பரவி நிற்க வேண்டியது, மக்கள் உலவுகின்ற தோட்டமாகவும், நுகர்கின்ற தென்றலாகவும் இருக்க வேண்டியது,

ஒரு சிலருடைய வீட்டுச் சொத்தாக மாற்றப்பட்டு, அவர்களின் அதிகார ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்நிலையில்தான், சமயத்திலிருந்தும் சமூகத்திலிருந்தும் மனிதன் பிரிய ஆரம்பித்தான். ஆண்டான் - அடிமை என்ற பேதங்கள் தோற்றுவிக்கப்பட்ட காரணத்தினால்தான், அத்தகைய உணர்வுகள் நமக்கு ஏற்பட்டன. நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம், சமயமும் சமூகமும் மக்களுக்கு இதயமும் துடிப்பும்போல் இருக்க வேண்டும். எப்படி இதயம் துடித்தால்தான், மனிதன் உயிர்வாழ முடியுமோ, அப்படி நம்முடைய இந்து சமயம் உயிர்வாழ வேண்டுமென்றால், சமயமும் சமூகமும் உயிர்த்துடிப்புடன் இயங்குதல் வேண்டும். அவற்றிற்கு இரத்த ஓட்டம் ஏற்பட்டாக வேண்டும். அத்தகைய இரத்த ஓட்டத்தை ஊட்டக்கூடிய இதய நாளங்களாக, நம்முடைய இந்து சமயத்தில் ஆலயங்கள் இருக்கின்றன. அந்த ஆலயங்களிலே இருக்கின்ற ஆண்டவன் நம்முடைய வாழ்க்கை வளம் பெறுவதற்காக, நம்மை வாழ வைப்பதற்காகவே. எழுந்தருளியிருக்கின்றார். எல்லோரும் சமம், மக்களுக்குள் எத்தகைய உயர்வு தாழ்வும் இல்லை என்ற நிலையில்தான், ஆலயங்கள் உருவாக்கப்பட்டன. எந்த பேதமும் அங்கு இல்லை. பேதத்தைக் கடந்த இடம், இறைவன் எழுந்தருளியிருக்கும் இடம். அங்கே யாராக இருந்தாலும் போகலாம். இல்லாவிட்டால் நந்தனை உள்ளே விடுவார்களா? திருப்பாணாழ்வாரை அனுமதித்திருப்பார்களா? எல்லாவகையான பேதங்களையும் ஜாதிகளையும் கடந்த இடம், இறைவன் இருக்கின்ற இடம். அப்படிப்பட்ட நிலையை இடைக்காலத்திலே மாற்றிவிட்டார்கள். அப்படி மாற்றிய காரணத்தினாலேதான், பல்வேறு பிரச்சினைகள் இந்த நாட்டிலே எழுந்தன.

ஆனால் ஒன்றைச் சொல்லுவேன். தமிழர்களுடைய வரலாறும், தமிழ் மன்னர்களுடைய வரலாறும், இன்றைக்கு எங்கே உள்ளன? பல வரலாறுகள் மறைந்துவிட்டன. பல இலக்கியங்களைக் கடல் கொண்டு போய்விட்டது. ஐம்பெருங் காப்பியங்கள் என்பவற்றின் சிறப்பைக்கூட, • இன்றைக்கு முழு அளவிலே நம்மாலே அறிந்து கொள்ள முடியவில்லை. சேரர் சோழர் பாண்டியர் பல்லவர் முதலிய பல மன்னர்கள், நம் தமிழ்நாட்டை ஆண்டதாகத் தெரிகிறது. ஆனால் அவர்களைப் பற்றிய விரிவான, விவரமான சரித்திர விளக்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

ஆனாலும் அத்தகைய நிலைமைகளைப் போக்கிக் கொள்ளுவதற்கு ஆன்மீகம் நமக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. பல ஆலயங்களிலே கிடைக்கும் கல்வெட்டுக்களினாலே, நம்நாட்டு வரலாறுகள் தெரிகின்றன. உதாரணமாகத் சொல்ல வேண்டுமானால், இங்கு நம்முடைய சமயபுரத்தையே எடுத்துக் கொள்வோம். இந்த சமயபுரத்திற்குப் பக்கத்திலே ஓர் உச்சயினி காளிகோயில் இருக்கிறது. விக்கிரமாதித்தன் காடாறு மாதம் வந்தபோது, வழிபட்டதாகச் சொல்லப்படுகிற இறைவி, இந்தக் கோயிலில் எழுந்தருளி இருக்கின்றாள். அவ்வாலயத்திற்குப் பக்கத்திலே அகழ்வாராய்ச்சி செய்தபோது; பழைய கால நாணயங்கள் கிடைத்தன. அவைகள் சந்திரகுப்தர்காலத்து நாணயங்களாகவும், விக்கிரமாதித்தனுடைய காலத்து நாணயங்களாகவும் இருப்பதை, ஆராய்ச்சி அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தகைய பற்பல சிறப்புமிக்க ஆலயங்கள், நம்முடைய மூதாதையர் காலத்திலேயும், பண்டைய தமிழ் மன்னர்களுடைய காலத்திலேயும் சிறப்புற அமைத்து வளர்க்கப் பெற்றன. காலச்சுழற்சியின் காரணத்தினாலும், கால ஓட்டத்தினுடைய வேகத்தினாலும், இடைக்காலத்திலே ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களின் காரணமாகவும்; இயற்கை விளைவுகளின் காரணமாகவும், இந்த ஆலயங்களினுடைய நிலைமைகள் குன்றத் தொடங்கின. இவற்றின் பண்டைய பெருமைகளையும் இன்றைய நிலைமைகளையும் எண்ணிப் பார்த்து, இந்த ஆலயங்களெல்லாம் காக்கப்பட வேண்டும்; சீரமைக்கப்படவேண்டும்; திருப்பணிகள் செய்யப் பெற வேண்டும்; இந்த ஆலயங்களிலே நடக்கிற வழிபாடுகள், விழாக்கள் எல்லாம் முறையாக நடத்தப்படவேண்டும்; ஆலயங்கள்தான் நம்முடைய நாட்டின் நல்வாழ்விற்கு நிலைக்களனாக விளங்குகின்றன என்பதனை உணர்ந்து, நம்முடைய தமிழக அரசும், அறநிலையத்துறையும் தீவிரமாகப் பல திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்தி வருகின்றன.

அவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்த திட்டங்கள்தான், நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் **அண்ணன் ஆர். எம். வீ.** அவர்களால், இன்று இங்குத் தொடங்கி வைக்கப்பட இருக்கின்ற ஆலய மேம்பாட்டுத் திட்டமும், அதன் பொருட்டு ஏற்படுத்தப் பெற்றுள்ள ஏழுகோடி ரூபா வைப்புநிதித்திட்டமும் ஆகும். இப்படி ஒரு திட்டம் உருவாகாதா? இப்படி ஒரு திட்டத்தை நம்முடைய காலத்திலேயே நாம் காணமாட்டோமா? என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருந்தவர்களுடைய உள்ளத்திலேயெல்லாம் இன்று ஆனந்தமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டுள்ளன. இனி ஆலயங்களெல்லாம் செழிக்கும்; சிறக்கும்; பண்டைப் பெருமைகளைப் பெறும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

இத்தகைய ஓர் அரும்பெரும்திட்டத்தைத் தீட்டிச் செயற்படுத்துவதற்கு முனைந்து முன் வந்துள்ள அறநிலைய அமைச்சர் மாண்புமிகு **அண்ணன் ஆர். எம். வீ.** அவர்களையும், அறநிலைய ஆணையர் திரு. ஆளுடையபிள்ளை அவர்களையும், தமிழ்நாட்டு மக்கள் அனைவருடைய சார்பிலும் நான் உளமாரப் போற்றிப் பாராட்டி மகிழ்கின்றேன்.

இந்தத் திட்டங்களும், இன்னும் இதுபோன்ற மற்றும் பற்பல சிறந்த திட்டங்களும், நல்லமுறையில் செயற்படுத்தப்பட்டு வெற்றி பெறுவதற்கு, எல்லாம் வல்ல சமயபுரம் அருள் அன்னையின் திருவடிகளை வாழ்த்தி இறைஞ்சி அமைகின்றேன்!

வணக்கம், நன்றி.

# சென்னபசவேசுவரர்

பசவேசுவரரின் சகோதரியாகிய நாகலாம்பாள் என்பவரின் புதல்வர் சென்ன பசவர். கல்யாணி நகரத்தில் அமைந்திருந்த 'அனுபூதி மண்டபம்' என்னும் சமய சங்கத்தில் சிறந்து விளங்கி வந்த, சான்றோர் பெருமக்கள் ஆகிய பசவர் அல்லமர் சித்தராமர் என்னும் மூவரையும் அன்புடன் போற்றிப் பின்பற்றியவர் இவர். வீர சைவத்திற் பெரிதும் போற்றப்படும் ''ஷட்ஸ்தலம்'' என்னும் சிறந்த சமுதாய அடிப்படைக் கொள்கையினைப் போதித்துப்பரப்பியவர் சென்னபசவேசுவரரேயாவர். சாதி வேறுபாடுகளைக் களைந்து, மக்களிடையில் உயர்வு தாழ்வற்ற சமய உணர்வினை வளர்க்க, இவர் பெரிதும் முயன்றார். ''மக்களுள் ஆயிரத்தில் ஒருவனே சத்தியன்; இலட்சத்தில் ஒருவனே பக்தன்; கோடியில் ஒருவனே சரணன் (அடியவன்) ஆவான்'' என்பது, இவர் தம் அருளுரைகளில் ஒன்று.

கடவுள் ஒருவரே என்பது வீர சைவத்தின் கொள்கை. இலிங்கத்தைச் சிவபிரானின் சிறப்பு அடையாளமாகக் கொண்டு, அதனை உடலில் பிரிவற அணிந்து கொண்டு அன்புடன் வழிபடும் முறையினை வற்புறுத்துவதனால், இதற்கு இலிங்காயதம் எனவும் பெயர் வழங்கும். ''உலகம் உள் பொருளே, பிறர் சிலர் சொல்வது போல வெறும் பொய்த் தோற்றம் அன்று. பிராம்மண சத்திரிய வைசிய சூத்திரர் என்னும் வருணபேதங்களும், பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம், என்னும் ஆச்சிரமபேதங்களும், அவ்வவற்றிற்கெனத் தனித் தனியே வகுக்கப்பட்டுள்ள கடமைகளும் பிறவும், ஞான மோட்ச சாதனங்கள் அல்ல. மக்கள் அனைவரும் உடன் பிறப்பாளர், இறைவனே உயிர்களுக்கெல்லாம் தந்தை. எவ்வுயிர்க்கும் ஊறு செய்யாது, இரக்கம் காட்டிப் போற்றுதல் அனைவருக்கும் கடமை'' என்பது வீர சைவக் கொள்கை.

இலிங்கதாரண சந்திரிகை, வேதாந்தசாரம், வீரசைவ சிந்தாமணி, சித்தாந்த சிகாமணி, பிரபுலிங்க லீலை முதலியன, வீரசைவப் பெருநூல்கள் ஆகும். பக்திக்குப் பசவரும், வைராக்கியத்திற்கு அல்லமரும், ஞானயோகத்திற்குச் சென்ன பசவரும், கருமயோகத்திற்குச் சித்தராமரும், சிறந்த எடுத்துக்காட்டுகளாவர் [illegible]. வீரசைவ மகளிருள், அக்கமாதேவி நீலாம்பிகை மகாதேவியம்மை, இலக்கம்மை, முக்தாயியம்மை என்பவர்கள், மிகவும் குறிப்பிடத்தக்க சிறப்புடையவர்கள் ஆவர்.

—ஆசிரியர்.

# ஆதீனத் தலைவர்களின்

# அருள் வாழ்த்துரைகள்*

## தருமபுர ஆதீனத்தலைவர்

## சீலத்திரு. சண்முகதேசிகர்

அருள்நலம் சான்ற அருளாளர்களே, பொருள் நலம் சான்ற ஆட்சியாளர்களே, ஆன்றோர்களே, சான்றோர்களே, அன்னை நல்லோர்களே!

நமது நாட்டின் சுதந்திரம் பெற்று 37 ஆண்டுகள் ஆகின்றன. 37 சுதந்திர தினத்தில் இல்லாத ஒரு தனிச்சிறப்பு, 38-ஆவது சுதந்திர தினத்திலே நமக்குக் கிடைத்து இருக்கிறது. இந்த வாய்ப்பை நல்கிய, உள்நின்று உணர்த்திய பரமேசுவரனுக்கு, முதலில் நன்றிமிக்க வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதனைச் செயலாக்குகின்ற இன்றைய ஆட்சியாளர்களை, அதிலும் 'பொன்மனச்செம்மல்' என்று போற்றப்படுகின்ற **எம். ஜி. ஆர்.** அவர்களையும், அவர் தூதனாக நின்று இயங்குகின்ற இராமச்சந்திர தூதன் இராம. வீரப்பன் அவர்களையும், 'அரங்கராஜனாக' இங்கே வீற்றிருக்கின்ற உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்டுகின்றேன். 38 என்ற எண், எண்ணியற் சோதிடத்தில் (numerology), 3ம், 8ம், சேர்ந்தால் 11. பதினொன்று என்பது சோதிடத்திலே இலாபத்தானம் என்று குறிப்பிடுவார்கள்.

38-வது சுதந்திர தின விழாவில், முன்பு அரும்பாக இருந்தது இன்று மலர்ந்து, பயன் தர முன்வந்து இருக்கிறது. ஏனென்றால், நம் எண்ணம் சுத்தமாக இருக்குமானால், நம்முடைய வாழ்வும் சுத்தமாக இருக்கும். நம்முடைய செயல் தூய்மையாக இருக்குமானால், நம்முடைய வாழ்வும் சுத்தமாகிப் பெருமைப் படத் தக்கதாக இருக்கும். மனம் மொழி மெய்-மனம் வாக்கு காயம் இந்த மூன்றும் நல்லனவே செய்யுமானால், நம்மை யாரும் கெடுத்துவிட முடியாது.

இதனை எல்லாம் நன்கு உணர்ந்துதான் ஆட்சியாளர்கள் 'சத்தியமேவ ஜெயதே'—'வாய்மையே வெல்லும்' என்று கோபுரத்தின் உச்சியில்கூட, எழுதி வைத்திருக்கிறார்கள். இந்தக்கால நிலையிலும், இவர்கள் எல்லாம் நல்லன செய்ய வேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். ஆனால் அதற்கு வழி தெரியாமல் இருந்திருக்கிறார்கள். இப்போது வழி கண்டு கொண்டு இருக்கிறார்கள். அதிலே முதல் வழி, ரூபா ஏழு கோடி. அதிலே ஒரு அமைப்பு! இந்த 38-வது சுதந்திர தினவிழா, இனி நமக்கு, இந்த நாட்டுக்கு, ஒரு லாபத்தைக் கொடுக்கும். அவர்கள் முதலில் நினைத்தது ரூபா ஐந்து கோடி. அது இப்போது ஏழு கோடி ரூபாயாக ஆகி இருக்கிறது.

ஏழு கோடி மந்திரங்கள் என்பது போலே, இவர்கள் ரூபா ஏழுகோடியை வைப்புநிதியாக அமைத்தார்கள். திருவருள்தான், அவர்களை அமைக்கச் செய்து இருக்கிறது. எதுவும் நமக்குத் தெரியாது. நடந்தபிறகுதான் நமக்குத் தெரியும். இதிலிருந்து திருவருள் வழியேதான் ஆட்சி நடக்கிறது என்பதற்கு. இது ஒரு உதாரணம்.

அருள் கண்ணுக்குத் தெரியாது. பொருள் கண்ணுக்குத் தெரியும். ஆனால் தெரிந்ததைக் கொண்டுதான் தெரியாததை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இப்போது புகை எழுகிறது தெரிகிறது. அங்கே நெருப்பு இருப்பதைப்

---

* 1984 ஆகஸ்டு 15ஆம் தேதியன்று நடைபெற்ற 'ஆலய மேம்பாட்டுத் திட்டம், 'ரூபா ஏழு கோடி நிதி வைப்புத் திட்டம்' ஆகியவற்றின் துவக்க விழாவில், ஆதீனத் தலைவர்களின் அருள் வாழ்த்துரைகள்.
—ஆசிரியர்

புகை காட்டுகிறது. அதுபோல அருளுக்கும் பொருளுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாம் புரிந்து கொள்ளவில்லை என்றால் அதற்காக அது நம்மை விட்டு ஓடிவிடாது. அது நம்மோடு தொடர்பு உள்ளதுதான், அதற்கு உதாரணம் சொல்லப்போனால்; அருள் இருக்கிறதே, அன்பு ஈன்ற குழந்தை அது. திருவள்ளுவர் 'அருள் என்னும் அன்பு ஈனும் குழவி' என்கிறார். 'அன்பு என்பது தாய். அருள் என்பது அன்பாகிய தாய் பெற்றெடுத்த குழந்தை' என்று அதற்குப் பொருள். அருள் எதனாலே உண்டு என்றால், பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு. பொருள் இருந்தால்தான் அருள் நிலைக்கும், பொருளுக்கு ஆதார சுருதியாக இருப்பது எது, அருள். பொருள் கண்ணுக்குத் தெரியும், அருள் கண்ணுக்குத் தெரியாது.

உதாரணமாக, நம்முடைய உடம்பிலே உயிர் இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாது. உடம்பின் அசைவினாலேதான் உயிர் இருப்பதைத் தெரிந்து கொள்கிறோம். மூளை இருதயம் ஈரல் இவைகள் எல்லாம் கண்ணுக்குத் தெரியாது. இவைகள் எல்லாம் உடம்பின் உள்ளுக்குள்ளே இருக்கிறது. இவைகள் எல்லாம் சரியாக வேலை செய்தால்தான், கைகால்கள் எல்லாம் சரியாக இயங்க முடியும்; வேலை செய்யும். இவைகளெல்லாம் சரியாக இயங்கி உணவைச் செரித்து, இரத்தமாக மாற்றி இருதயத்திற்கு அனுப்புகின்றன. இருதயத்திலே இருந்து இரத்தம், மூளை மற்றும் அனைத்து இடங்களுக்கும் செல்கிறது. மூளைதான் டைரக்டர், இயக்குநர். அவர் உத்திரவு போடுகிறார். அதனால்தான் கைகால்கள் எல்லாம் இயங்குகின்றன. அதுபோல அருள் நிலைக்க வேண்டுமென்று சொன்னால், பொருள் நல்ல முறையிலே ஆட்சிசெய்ய வேண்டும். பொருள் இன்றி அருள் இல்லை. இதனையே மணிவாசகர் 'முனிவரும் மன்னரும் முன்னுவபொன்னால் முடியும்' என்று கூறுகின்றார். முனிவராக இருந்தாலும் சரி, மன்னராக இருந்தாலும் சரி, இந்த இரண்டுபேருக்கும் பொருள் இன்றியமையாதது. ஆட்சியும் பொருளின்றிச் செய்ய முடியாது. அருளும் பொருள் இன்றிச் செய்யமுடியாது.

ஆகவே அறநிலையங்களுக்குப் பொருள் முக்கியமானது என்று உணர்ந்த பெரியோர்கள் அதற்கு நிலையான பொருளை வைக்கநினைத்தார்கள். நில்லா உலகத்தில் நிலையாக இருப்பதைச் செய்தார்கள். நிலையாக இருப்பதற்கு ஒரு குடிசை போட்டலாம். சாதாரணச் செங்கற் கட்டடம் கட்டலாம். ஆனால் கருங்கற்களால் கட்டினார்கள். வாரியார்சுவாமிகள் சொல்லியது போல, நிலையான இறைவனுக்கு நிலையாக உள்ள கருங்கற்கட்டிடம் கட்டினார்கள்.

இதில் மடம்; கோயில் இரண்டும் இறைவனுக்கே உள்ளன. மடம் வேறு, கோயில் வேறு அல்ல. நிலையாக உள்ள இறைவனுக்கு நிலையான முறையிலே கோயில்கள் கட்டினார்கள், நம் முன்னோர்கள். நிலையான கட்டிடம் கட்டினால் மட்டும் போதுமா? அதற்கு நிலையான சொத்து வைக்க வேண்டும் என்றும் எண்ணினார்கள். தாவரம், சங்கமம் என்பது இரண்டு. தாவரம் என்பது அசையாதபொருள். சங்கமம்என்பது அசையும் பொருள். எனவே அன்றைய முடிமன்னர்களும் சரி, குடிமன்னர்களும் சரி, நிலத்தினை அவற்றுக்குச் சாசனம் செய்து வைத்தார்கள். அதோடு விடவில்லை. அவற்றிற்கு ஏதேனும் இடையூறு ஏற்பட்டால் அதனையும் களைந்தார்கள்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லவேண்டுமானால்; இராசேந்திர சோழன், இராசராச சோழனின் மகன். இருவரும் எவ்வளவுபெரிய பக்தர்களாக இருந்திருக்கிறார்கள். அந்த இராசேந்திர சோழன் நல்ல சிவபக்தன். கங்கை கொண்ட சோழபுரத்தினைக் கட்டியவன். 'அப்பனுக்குப் பிள்ளை சளைத்தவன் இல்லை' என்ற முறையிலே, அந்தக் கோயிலை அழகுறக் கட்டி இருக்கிறான். அவனுக்குப் பல மனைவிமார்கள். அதில் இரண்டு மூன்று மனைவிமார்களுடன், வேலூருக்குப் பக்கத்திலே உள்ள திருவல்லம் என்ற ஊரில் இராசேந்திரன் முகாமிட்டிருந்தான். 'தீக்காலிவல்லம்' என்றும் கல்வெட்டிலே உள்ளது. அவனுடைய மனைவிமார்களில் இருவர், அங்கே உள்ள ஒரு பெருமாள் கோயிலுக்குப் பத்து ஏக்கர் நிலத்தினை வாங்கி, அந்தக் கோயிலுக்குக் கொடுத்தார்கள்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அங்கே சென்று, அந்தக் கோயில் நிலத்திலிருந்து வருமானம் வருகிறதா, அது சரியாகப் பராமரிக்கப்படுகிறதா, அதிலிருந்து வரும் வருமானம் பெருமாளுக்குப் பயன்படுகிறதா என்றெல்லாம் பார்ப்பதற்குச் சென்றிருந்தார்கள். அப்போது அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். முதல் வருஷம் வந்தது. மற்ற ஆண்டுகளில் மழையில்லை, தண்ணீர் இல்லை, விளைச்சல் இல்லை, ஏரிகள் வறண்டுவிட்டன. நீர்க்கால் வாய்கள் சரியில்லை, அதனால் விவசாயம் செய்யவில்லை என்று சொன்னார்கள். அது கேட்ட மனைவிமார்கள், கோயிலிலே தேவாரம் பாடிக் கொண்டிருந்த தமது கணவனான மன்னனிடம் சென்று, விவரத்தினைக் கூறிக் கால்வாய்களைப் பராமரிக்கத் தேவையான பணத்தினைக் கொடுத்து, அந்த நிலத்தினைச் சரிவர விளைவிக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

அதுபோல வெள்ளையர்கள் நம்மை ஆண்டபோதுகூட, ஏற்கனவே மன்னர்களால் கொடுக்கப்பட்ட நிலங்களைச் சரியாகப் பண்படுத்தி, நல்ல வருவாய் வரவேண்டும் என்பதற்

காக, அவர்கள்கூடப் பணம் கொடுத்தார்கள். அதற்குப் பெயர்தான் ''தஸ்திக் அலவன்ஸ்'- 'மோகினி இனாம்' என்று பெயர். இவைகள் எல்லாம் ஏற்கெனவே பட்டா கொடுக்கப் பட்டவைதான்.

ஆகவே நாம் தர்மத்தினைச் செய்தால், அது நம்மைக் காக்கும். தர்மத்தினை எவன் ஒருவன் செய்கிறானோ, அவனை அந்தத் தர்மமே காக்கும். அப்படியில்லை என்றால், அந்தத் தர்மமே நம்மை அழித்துவிடும். நம்முடைய கடமையை நாம் சரிவரச் செய்தால் அதுவே நம்மைக் காக்கும். இல்லையானால் அதுவே நம்மை அழித்துவிடும். இந்த நாடு நன்றாக வளப்பட வேண்டுமானால், உருப்பட வேண்டுமானால், நாம் எல்லோரும் நமது கடமையைச் செய்து, நன்றாகச் செயல் படவேண்டும். நல்லவராக இருக்கவேண்டும்; வல்லவராக இருக்க வேண்டும். நமது கடமைகளை நன்றாகச் சரிவரச் செய்பவராகஇருக்க வேண்டும்.

தெய்வப்புலவர் திருவள்ளுவர், ''முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும்' என்கிறார். இறைவன் ஆட்சி மூலமாக இயக்குகின்றான். அந்த வகையில் இன்றைய தினம் ஆட்சிப் பொறுப்பேற்று முதலமைச்சராகத் திகழ்கின்ற'பொன் மனச் செம்மல்' 'புரட்சித் தலைவர்' **எம்.ஜி. இராமச்சந்திரன்** அவர்களும், அவர்களின் இதயக்கனியாக விளங்குகின்ற அறநிலைய அமைச்சர் **இராம. வீரப்பன்** அவர்களும், இந்த திட்டத்தினைச் சிறபபாக நிறைவேற்றிவிடுவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. அவர்கள் செய்கின்ற எல்லாச் செயல்களுக்கும் நாங்கள் பக்கபலமாக இருப்போம்.

கோயில் நிலத்தினைப் பற்றி மட்டும் இங்குச் சொல்ல வேண்டும். நிலத்தினை ஏழைகளிடமிருந்து பெறவேண்டியதில்லை. அவன் உழைத்துச் சாகுபடி செய்தால் பரவாயில்லை. தற்போது 20-, 25, 30 கலம் வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் 5 கலம்கூட வரவில்லை என்று சொல்கிற சோம்பேறியிடம், நிலம் இருந்து என்ன செய்வது? அதனை நன்றாக உழைத்து உற்பத்தியைப் பெருக்கக்கூடிய மற்றொரு• ஏழையிடம் கொடுக்கலாம்!

தமிழக அரசு இந்த அருமையான திட்டத்தைக் கொண்டு வந்ததற்கு, நாம் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆண்டவன் அருளாலே, இந்த ஆட்சியும், ஆட்சியாளர்களும் நீடு இனிது வாழ்ந்து; நல்லன எல்லாம் நாளும் செய்து வாழ வேண்டுமென்றுவாழ்த்தி அமைகின்றேன்.

—————

# தவத்திரு குன்றக்குடி அடிகளார்

போற்றுதலுக்குரிய தருமையும் கமலையும் விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருக்கின்ற தருமைக் குரு முதல்வர் அவர்களே, மற்றும் அருள்நலம் சார்ந்த அடியார் பெருமக்களே, பேரன்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சான்றோர்களே, சகோதரர்களே, சகோதரிகளே! இந்த இனிய விழாவில் கலந்து கொள்கிற வாய்ப்பை வழங்கிய திருவருளுக்கும் அதற்குத் துணையாக இருந்த அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றி, பாராட்டு, வாழ்த்துக்கள்!

விழாவுக்குத் தலைமை, பாராட்டுதலுக்குரிய உள்ளாட்சி அமைச்சர் அவர்கள். மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைப்பவர்கள் பாராட்டுதலுக்குரிய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள். நூற்றுக்குநூறு சங்ககாலத்திற்கும், சோழர் காலத்திற்கும் பொருத்தமான பொருத்தம். காரணம் சோழர் காலத்திலேயே உள்ளாட்சித்துறையும் அறநிலையத்துறையும் இணைந்து இருந்தன. அறநிலையத்துறை ஆட்சியாளரின் கோயிலுக்குள்ளேதான், உள்ளாட்சி மற்ற எல்லாம் இருந்தன. அங்கேதான் பஞ்சாயத்துக்கள் நிகழ்ந்தன. எல்லா நல்ல செயல்களும் நிகழ்ந்தன. எனவே பழைய வரலாற்றை நினைவுபடுத்துவதுபோல, இரண்டு அமைச்சர் பெருமக்கள், இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் கலந்து கொள்கிறார்கள்.

திருக்கோயில் கட்டுமானங்கள், திருக்கோயில் வழிபாடு முதலியவைதமிழ்நாட்டுக்குச் சொந்தமான கலை. இன்னும் தெளிவாகச் சொன்னால் தமிழ் என்றால் சமயம், சமயம் என்றால் தமிழ். சேக்கிழார் '' அவையில் செழும் தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வென்று விளங்க'' என்று சொன்னார்கள். நல்ல தமிழராக இருக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்குக் கடவுள் நம்பிக்கையும், திருக்கோயில் வழிபாடும் இல்லாமல் இருக்க முடியாது. அதுதான் பழந்தமிழனுடைய வரலாறு.

கடல்கொண்ட தென்குமரி நாட்டிலேயே மிகப் பெரிய திருக்கோயில்கள் இருந்திருக்கின்றன. இன்றைக்குப் பிரஞ்சு தேசத்தார் நிலத்தடியில், கடலுக்கடியில் செய்த ஆய்வில், பல திருக்கோயில்களின் படிமங்கள் இருப்பதைக் கண்டிருக்கிறார்கள். திருக்கோயில் என்றால் எப்படிப்பட்ட திருக்கோயில், சங்ககாலத்தில் ஓர் அரசனைப் பார்த்து, ஒரு புலவர் பாடுகின்றார்: ''உன்னுடைய அரசின், குடை, யார் முன்னாலும் தாழ்ந்தது இல்லை, உன் கைகள் யார் முன்னாலும் கும்பிட்டது இல்லை. ஆனால் மூன்று கண்களை உடைய முக்கட் செல்வர் ஆகிய சிவபெருமானின், பெருநகரம்

போன்று பரந்து விரிந்து விளங்கும் திருக்கோயில் இருக்கிறதே, அந்தத் திருக்கோயில் முன்னே செல்லும்போது மட்டும், உன்னுடைய கொற்றக் குடை தாழ்க'' என்று.

''பணியியர் அத்தை நின்குடையே, முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலம் செயற்கே''

என்று புறநானூறு என்னும் சங்க நூலில் அப்புலவரின் பாடல்வரிகள் வருகின்றன. ஆக, நகரம் அனைய பெரிய பெரிய திருக்கோயில்களைத் தமிழகம் கண்டது. இந்தத் தமிழகத்தினுடைய வாழ்வு முழுவதும், வளம் முழுவதும், இந்தத் திருக்கோயிலுக்குள்ளே தான் நிகழ்ந்தன.

அதனால்தான் நமது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லுகிறார்கள். பழைய வரலாற்றைப் புதுப்பிக்க வேண்டுமென்று. சில நாடுகளுக்குப் புதிய வரலாறு தேவை. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், பழைய வரலாறுகளைப் புதுப்பித்தாற்போதும். இந்த இடைப்பட்ட காலத்தில் வந்து சேர்ந்த தீமைகளை நீக்கி, களைகளைக் களைந்து, சோழர் காலத்துச் சமுதாய அமைப்புகள் எப்படி இருந்தது என்பதைக் கூர்த்த மதியோடு பார்த்து, அமைச்சர் அவர்களுக்கு அடக்கத்தோடு நினைவூட்ட விரும்புகின்றேன். இராசராச சோழன் விழா வருகிறது. தமிழுக்கும் தமிழ்நெறிக்கும் புத்துயிர் கொடுத்தவன் இராசராசசோழன். அதையொட்டித் தமிழ்நெறி எது? தமிழகத்துவாழ்வு நெறி எது? நம்முடைய கோயில்கள் நம்முடைய வாழ்க்கையில் ஏற்றுக்கொண்ட பங்கு என்ன? இவைகளைப் பற்றி நன்றாகத் திறனாய்வு செய்து இராசராசசோழனுடைய விழாவை, தமிழகத்தினுடைய தமிழ்ச் சமய மறுமலர்ச்சி விழாவாகத் தமிழகம் கொண்டாடி ஒரு புத்துயிர் பெறவேண்டும்.

திருக்கோயில்களைக் கட்டிய அரசர்கள், தாம் கட்டியதைப் பற்றிப் பெருமையே கொள்ளவில்லை. ஒரு உருக்கமான வரலாறு. தென்கோடியில் தென்காசி என்ற திருத்தலத்தில், மிகப்பெரிய கோயில் ஒன்று இருக்கிறது. அதை ஒரு பாண்டியப் பேரரசன் கட்டினான். அந்த மிகப்பெரிய கோயிலை எடுத்து முடித்த பிறகு, அதில் அவன் ஒரு கல்வெட்டு வெட்டிவைத்தான். இந்தக் காலத்தில் வெட்டப்படுகின்ற கல்வெட்டுக்கள் போல அல்ல. அந்தக் கல்வெட்டின் வாசகம்: 'எதிர்காலத்தில் இந்தக் கோயிலிலிருந்து ஒன்றிரண்டு கற்கள் தற்செயலாகக் காலத்தின் சூழ்நிலையால் விழ நேருமானால், அந்தக் கற்களை அப்போது இங்கு யார் வந்து எடுத்து வைப்பார்களோ, அவர்களுடைய திருவடிகளை இப்போதே என் தலைமீது வைத்து வணங்குகிறேன்.'' ஒரு பெரிய கோயிலை எடுத்தவன், அதில் விழப்போகும் ஒன்றிரண்டு கற்களை எடுத்துவைப்பவன் திருவடிகளை வணங்கினான், ஒரு புறம் அவனுடைய அடக்க உணர்வு தெரிகிறது. இன்னொரு புறம் அன்புகூர்ந்து பொறுத்துக் கொள்ளுங்கள். நம்முடைய கையாலாகாத்தனத்தைப் பற்றிக் கவலைப்பட்டு இருக்கிறான் போலத் தெரிகிறது. இந்த மாபெரும் திருக்கோயிலினை வருங்காலச் சமுதாயம்காப்பாற்ற வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் போலத் தெரிகிறது. அந்தக் கவலையின் விளைவால் அப்படி எழுதி வைத்தான். அவன் அவ்வளவு நன்றாக எழுதி வைத்த பிறகும்கூட, நாம் அதைக் கவனிக்கவில்லை.

நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்களுக்கு, செட்டிநாட்டினுடைய சில பழக்க வழக்கங்கள், சில பழமொழிகள் நன்றாகத் தெரியும். அந்த நாட்டில் கோயில் திருவிழாத் திருமுகம் எழுதுவார்கள்! கோயிலிலிருந்து, சண்டீசர் எழுதுவதாக மரபு. சண்டீசர் திருமுகத்தில், ''அறம் செய்தானே செய்தான். அறம் காப்பான் திருவடிகள் அறம் செய்தானின் சிரசின்மேல்'' என்று முதலில் எழுதுவார்கள். அறம் செய்தலைவிட, அறம் காப்பது பெரிது. அதுவும் நம்முடைய நாட்டுக் கோயில்களைக் காப்பது என்பது, மிக எளிமையான காரியம். கற்கள் கிடைக்காத சீமையிலேகூட, கருங்கல் கோயில்களைத்தான் கட்டினார்கள். சராசரி உணர்ச்சி இருந்தால்கூட, இந்தக் கோயில்களைக் காப்பாற்றி இருக்கலாம். செடிகள், மரங்கள் முளைக்காமல் கோயிலைத் தூய்மையாக வைத்திருந்தாலே, கோயிலைக் காப்பாற்றி இருக்க முடியும். நமக்கு அந்த அக்கறை இல்லாமல் போய்விட்டது.

ஔவைப் பிராட்டியார் கூறிய பழமொழிகளைப் புதுப்பிக்க வேண்டும். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றால் என்ன பொருள்? எந்த ஊரில் கோயில் இருக்கிறதோ, அங்கு சமூகம் ஒற்றுமையாக இருக்கும். எந்த ஊரில் கோயில் இருக்கிறதோ அந்த சமூகத்திற்கு உத்திரவாதம் இருக்கும். எந்த ஊரில் கோயில் இருக்கிறதோ, அங்கே மக்கள் பழிபாவத்திற்கு அஞ்சுவார்கள். இத்தகைய ஒரு சமய உணர்வின் மறுமலர்ச்சி சார்ந்த வாழ்க்கையை நாம் உருவாக்க வேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் எல்லாத் திருக்கோயில்களையும் புதுப்பிக்க வேண்டும். அவற்றில் பூசைகள் நிகழச் செய்ய வேண்டும். திருக்கோயில்கள் ஏழையாக இருப்பது ஒரு பெரிய குறை அல்ல. ஆனால், அலட்சியத்தின் முத்திரை கோயில்களில் இருக்கக் கூடாது. காரணம் ஒருவனுக்கு அக்கறை இருக்குமானால், அவனுடைய உடை கந்தலாக இருந்தால்கூட, அது தூய்மையாக இருக்கும். எனவே, கோயில் இல்லா ஊரில் குடியிருக்கக்கூடாது என்று

சொல்வது போல, நாம் நாள்தோறும் கோயில்களுக்குச் செல்லுதல், ஒற்றுமையாகக் கூடி வாழக் கற்றுக் கொள்ளுதல் போன்ற நல்ல காரியங்களையெல்லாம் செய்யவேண்டும்.

இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டத்தினை நம்முடைய அறநிலைய அமைச்சர் அவர்கள் நீண்ட நெடுநாட்களாகச் சிந்தித்து, நம்முடைய பாராட்டுதலுக்குரிய முதலமைச்சர் 'பொன் மனச் செம்மல்' 'புரட்சித்தலைவர்' அவர்களுடைய இசைவைப் பெற்று, அறிவித்து இருக்கிறார்கள். எனக்கு ஒரு யோசனை சொல்லலாம் என்று தோன்றுகிறது. அருள்திரு சுந்தர அடிகள் சொல்லியதுபோல், வாரியம் அமைத்தல்-கலந்து பேசுதல்-செய்தல் என்பது எல்லாம் ஒருபுறம் இருக்கட்டும், சிலவற்றைச் சில நேரங்களிலே சீக்கிரமாகச் செய்து விட்டால் தேவலாம்போலத் தோன்றுகிறது. நம்முடைய நால்வர் வரலாறு, அதுவும் குறிப்பாகத் திருநாவுக்கரசர் வரலாறு தமிழகத்திற்கு மிகப்பெரிய தெளிவு ஊட்டுகின்ற வரலாறு.

''நாம் யார்க்கும் குடியல்லோம்;
நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்''

என்பது, திருநாவுக்கரசர் பாடிய பாடல். இந்தப் பாடலை ஒரு தடவை அல்ல, இரண்டு தடவை அறிஞர் அண்ணா அவர்கள் என்னிடத்தில் பாடிக் காட்டினார்கள். ஆக இந்த நாட்டிலே பிறந்த மிகப்பெரிய மனிதர்களைக் கூடச் சென்று கவர்ந்த இந்தப் பாடலைப் பாடிய திருநாவுக்கரசர், சமணத்திலேயிருந்து சைவத்திற்கு வந்த திருவதிகைத் திருக்கோயிலினை நாம் திருப்பணி செய்தாக வேண்டும்.

தமிழகத்தினுடைய, தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தினுடைய, சமூகச் சீர்திருத்தத்தினுடைய தளம் அது. அவர் சாதிகளை எதிர்த்தவர். குலம் கோத்திரங்களை எதிர்த்தவர். அதைத் தமிழகத்தினுடைய மிகப் பெரிய திருத்தலமாக நாம் ஆக்கலாம். எப்படி நாம் கிராமப்புறங்களையெல்லாம் தத்து எடுத்துக் கொள்கிறோமோ, அதைப் போல மிகப்பெரிய திருக்கோயில்களை, குறிப்பாக பழனிக்கோயில் இந்தத் திருவதிகைக் கோயிலினை ஒரு ஆண்டுக்குத் தத்து எடுத்து, அதை நன்றாகத் திருப்பணி செய்து, அந்த ஆண்டிலேயே அதற்குக் கும்பாபிஷேகம் செய்தால், நலம்.

அதேபோலத் திருவெண்ணெய் நல்லூர் சுந்தரரை ஆண்டுகொண்ட இடம். அதுவும் அப்படித்தான் இருக்கிறது. நம்முடைய பாராட்டுதலுக்குரிய ஆணையர் அவர்கள், சென்ற சில திங்களுக்கு முன்பு, அந்தத் திருக்கோயிலுக்குச் சென்று வந்திருக்கிறார்கள். அவர்களும் அங்கு உள்ள நிலைமையைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட பழம்பெருங்கோயில்களுக்கெல்லாம் திருப்பணிகள் செய்ய வேண்டும். எனவே இது ஒரு புதிய வரலாற்றுத் திட்டம். பழைய காலத்திலே அரசர்களுக்கு நிலம்தான் இருந்தது. நிபந்தம் கொடுத்தார்கள். இப்போது நிலம் அமைச்சர் அவர்களிடத்திலே இல்லை. இருக்கிற நிலத்திலேயிருந்து எப்படி குத்தகையை வசூலிக்கலாம் என்பது அவருடைய கவலை. இருக்கின்ற பணத்தை எங்கேயாவது இருந்து முயன்று திரட்டிக் கொடுக்கலாம் என்று நினைக்கிறார்கள்.

நான் தெளிவாகவும் உணர்ச்சி பூர்வமாகவும் சொல்ல ஆசைப்படுகிறேன். நாலரை கோடித் தமிழர்கள் வாழ்கிறோம். இதிலே மூன்றில் ஒரு பங்குத் தமிழர்களாவது, ஒரு ரூபாய் வீதமாகவாவது, சராசரியாகக் காணிக்கை அனுப்பி, இந்தத் திட்டத்தினை நாம் வரவேற்க வேண்டும். நம்முடைய பங்கு அதிலே இருக்க வேண்டுமென்று, இயன்ற அளவிற்கு உதவி செய்ய வேண்டும். அப்போதுதான் அமைச்சர் பெருமான் அவர்களுக்கு மனநிறைவும், மகிழ்ச்சியும் ஏற்படும். நாம் நல்ல காரியத்தைத்தான் செய்து இருக்கிறோம் என்று திருப்தி அடைவார்கள். அதைப் போலவே அவர்கள் கொண்டு வருகிற பல்வேறு திட்டங்களுக்குப் பொதுமக்கள் ஆகிய நாம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். நம்முடைய நாட்டு விவசாயிகள், தங்களுடைய கோயில், தங்களுடைய சமூகத்தைப் பாதுகாக்க இருக்கிற கோயில் என்ற நல்ல எண்ணத்தோடு, கடுமையான சட்டங்கள் மூலமாக இல்லாமல், அன்புடன் மனமாற்றம் மூலமாகவே குத்தகைத் தொகையை வழங்க முன்வரவேண்டும். கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலுமாக நம்முடைய சமூக அமைப்பு விளங்குவதற்குரியவாறு நடைபெறும் என்று நம்புகிறேன். அப்படி இல்லை என்று சொன்னால், அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

காரணம் ஒரு நாட்டினுடைய கலை, அந்த நாட்டினுடைய ஆட்சியின் பாதுகாப்புக்குரியது. அந்த நாட்டின் ஆன்மீகமும், செல்வமும் அப்படித்தான். எனவே, மிகப் பெரிய விழாவை எடுத்து, ஏழு கோடி ரூபாய் திருக்கோயில் மேம்பாட்டு நிதியாகச் சேர்த்து இருக்கிறார்கள். அண்மையிலே அவர்கள் தூத்துக்குடிக்கு வந்து ஒரு அருமையான உரை

நிகழ்த்தினார்கள். அதிலே திருக்கோயிலிலே பூசை செய்கிறவர்கள், பணி செய்கிறவர்கள் குறைந்த சம்பளம் வாங்கி இடர்ப்படுவது எல்லாம் நினைத்து, உருகிக் கவலைப்பட்டார்கள். அவருடைய நல்ல மனதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. அதுமட்டும் போதாது. அவர்கள் செய்கின்ற பணிகளுக்கு எல்லாம் நாம் பெரிதும் உவந்து ஒத்துழைப்புத் தந்து உதவிபுரிதல் வேண்டும்.

இந்தத் துறைக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மனம் வைத்தால் நிறையச் செய்ய முடியும். சுறுசுறுப்பானவர்கள். அவர்களை ஒருமணி நேரம் பிரசங்கம் செய்யுங்கள் என்று சொன்னால், தத்துவச் சொற்பொழிவாகப் பேசுவார்கள். அவ்வளவு அழகாகப் பேசுவார்கள். எனவே, இவர்கள் இரண்டுபேரும் நம்முடைய பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் அவர்களுடைய மனப்போக்கை நன்றாகக் கணித்துக்கொண்டு, தமிழகத்தினுடைய பண்பாட்டை, தமிழர் நாகரிகத்தை, நாகரிக மையமாக இருந்த திருக்கோயிலை, திருக்கோயிலைச் சூழ்ந்து வளர்ந்த கலைகளை, திருக்கோயிலினைச் சூழ்ந்து வளர்ந்த சமுதாயத்தைக் காப்பாற்றுகிற பெரும்பணியில் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விருவரையும் மனமொழி மெய்களால் இறைவனை நினைத்துச் சிந்தித்து, மீண்டும் மீண்டும் பாராட்டி, நான் வாழ்த்துகிறேன்! நன்றி, பாராட்டுகள்.

—————

## திருப்பனந்தாள் சுவாமிகள்

## முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்

ஆத்திக அன்பர்களின் உள்ளம் குளிரவும் உலக நலம்செழிக்கவும், பல்வேறு இறைபணிகளுக்காக ஏழு கோடி வெள்ளிப் பொற்காசுகளை வைப்பு நிதியாக வைக்கும் திருநாள் நடைபெறுவது, அறிந்து மகிழ்ச்சி. தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள், 'பொன்மனச்செம்மல்' என்பதை, மேலும் உறுதிசெய்வதாக, இந்தப் பணி அமைந்து இருக்கிறது. அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்த நிலையிலிருந்து விடுபட்ட இந்த சுதந்திரத் திருநாளில், ஏழைமை நிலைமைக்கு அடிமைப்பட்டிருந்த இத்திருக்கோயில்கள், இத்திட்டத்தின் மூலம் விடுதலை பெறுகின்றன என்று, என் மகிழ்ச்சியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறான் என்றாலும், திருக்கோயிலின் வாயிலாகவே அடியார்களுக்கு அருள் செய்திருக்கிறான். இதற்கு நம் சித்தாந்த சாத்திர நூல்கள், பசுவின் உடல் எங்கும் பால் நிறைந்திருப்பினும், காம்பின் வழியாகவே சுரத்தல் போல என்று உவமை கூறும். காம்புகளிலே எல்லாக் காம்புகளிலும் சமமாகச் சுரக்காதவாறுபோல, சில பல திருக்கோயில்களிலே வழிபாடும் அருட்பேறும் மிகுதியாகி, ஆத்திக அன்பர்கள் பெருந்திரளாக வருவர்,. இதனாலேயே சில திருக்கோயில்களில் நிதிநிலை மேம்பட்டு உள்ளது.

நிதிநிலை வளம் குறைந்த கோயில்களிலும் பூசைகள், திருப்பணிகள், ஊழியர் சேவை முதலியவை சிறப்புற நடைபெற உதவுகின்ற, இந்த மாபெருந்திட்டம், வரலாறு காணாத திட்டம், தொடங்கியிருப்பதற்கு நமது புரட்சித் தலைவர் அவர்களையும், அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்! இவர்களுக்குச் சமய உலகம் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளது என்று கூறுவது, மிகை அல்ல. இப்பெரிய செயல்களில் சில பல அம்சங்களை, நம் ஸ்ரீ காசிமடம் நிரந்தரமாகச் செய்து கொண்டு வருவதைப் பலர் அறிவர். பல திருக்கோயில்களுக்கு திருவிளக்கு நிதிகளும், தேவார நிதிகளும், பூசை நிதிகளும் ஆகிய பலவழிகளில், பல லட்சக்கணக்கான தொகைக்கு அறக்கட்டளைகள் வைத்து, அப்பணிகட்குப் பயன்படுத்தி வருகின்றோம்.

திருக்கோயில்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ள, மாதவம் செய்திட்ட தென் தமிழ்நாட்டில் ஒரு சில நிறுவனங்கள், தம் முழுத் திறமையையும் திரட்டி இப்பணியைச் செய்தாலும், முழுத் தேவையையும் நிறைவேற்ற முடியாது. அரசு ஒன்றினாலேயே இயலும் என்று, நாம் பலகாலம் கருதியது உண்டு. பக்திநெறிப் பயிர் தழைக்கத் தக்க ஏற்பாடுகளைச் செய்ய, என்றைக்கும் தயக்கம் காட்டாத, நம் புரட்சித்தலைவர் ஆட்சியில் மட்டுமே, இது செய்ய இயலும் என்பது, இப்போது நமக்குப் புலனாகிறது. இத்திட்டத்தினைப் பெருமையோடும் பூரிப்போடும் மகிழ்ச்சியுடன் வாழ்த்துகிறோம்.

இப்பெரும் பணி நிகழக் காரணமான டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும், அறநிலைய ஆணையர் உள்ளிட்ட அனைவருக்கும், எல்லா வளங்களும் விளைய, எல்லாம் வல்ல செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

—————

## பொம்மபுர ஆதீனம் மயிலம் சிவஞான பாலைய சுவாமிகள்

இங்கே வீற்றிருக்கின்ற குருமகா சந்நிதானங்கள் அவர்களே, உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களே, அறநிலையத்துறை அமைச்சர் அவர்களே, ஆணையர் அவர்களே, சான்றோர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, குழந்தைகளே!

இன்றைய நாள் ஒரு சிறப்புடைய நாள், பொன்னாள். வாழ்க்கையிலே ஒரு திருப்பு முனை நாள் ஆக அமைந்திருக்கிறது. நாம் சுதந்திரம் வாங்கிப் பல ஆண்டுகள் ஆகி இருந்தாலும்கூட, அந்தச் சுதந்திர நாளை எவ்வாறு கொண்டாடுவது எப்படிக் கொண்டாடுவது என்று இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அவர் சொன்னதுபோல இறை அருளோடுகூடச் சமய அறிவும், அதோடு கூடச் சமுதாய அறிவும் வளர வேண்டும் என்பதற்காக, அந்தஇரண்டையும் பிணைத்து இருக்கிறார்கள்.

சுதந்திரம் வாங்கியதற்குப் பிறகு எப்படி இருந்தால், நாடு செழிக்கும் என்று சிந்தித்து, நமது தமிழக அரசு இந்த நல்ல நாளிலே இதைத் தொடங்கியிருக்கிறது. நமது அறநிலைய அமைச்சர் அவர்கள், எங்கெங்கே எந்தெந்த இடத்திலே என்னென்ன குறைபாடுகள் தோன்றுகின்றன, அந்தக் குறைபாடுகளை எவ்வாறு நிவர்த்தி செய்ய முடியும், அவ்வாறு நிவர்த்தி செய்வதற்கு என்னென்ன வழி வகைகளைச் செய்தால், இந்தக் குறைகளை நிவர்த்திக்க முடியும் என்றெல்லாம் சிந்தித்துச் சிந்தித்து, இவ்வாறு ஒரு பெரிய திட்டத்தை வகுத்து, முதலமைச்சர் அவர்களுக்குக் கூற, அவர்களும் இசைவு தந்து ஆதரவு அளித்துள்ளார்கள்.

இன்று இங்கே தொடங்கப் பெறுகிற ஆலய மேம்பாட்டுத்திட்டமும், ஏழு கோடி ரூபா வைப்புநிதித் திட்டமும், இறைவனின் திருவருள் துணையால், மிகச் சிறப்பாக நடைபெறவேண்டும்; நடைபெறும் என்பதுதிண்ணம். எந்தத் திட்டமானாலும் அதன் பலனை அனுபவிக்கின்ற மக்கள், அந்தத் திட்டத்திற்குப் பூரண ஒத்துழைப்புக் கொடுத்தால்தான், அது செம்மையாக அமையும். பிற மாநிலத்தில் உள்ளவர்கள்கூட, இதை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு இனிமேல் இயங்குவார்கள். அவ்வளவு சிறப்பானதொரு திட்டம் இது. இதற்குத் தேவையான பணத்தைக் கோயில்கள் மட்டும்தான் கொடுக்க வேண்டும் என்பதில்லை. தனி நபர்களும் கொடுக்கலாம். ஏனென்றால் இது சமுதாயத்தோடு சேர்ந்த ஒரு திட்டம். வெளிநாட்டிலிருந்து வந்திருப்பவர்களுக்குக்கூட, இங்கே காட்டுவதற்குக் கோயில் கோபுரங்களைத் தவிர ஏதும் இல்லை. அவர்கள் அப்படி பார்க்கின்றபோது ஒருநாள் முழுக்கப் பார்க்கிறார்கள். மறுநாளும் பார்க்கின்றார்கள். மறுமுறையும் வரவேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

கோயில்களில் கற்களால் செய்யப்பட்ட சிற்பங்கள் எல்லாம், கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் செய்யப்பட்டதாக அறிகிறோம். அதுவும் ஒவ்வொரு கோயிலுக்கும் சிற்பங்கள் வேறுபடுகின்றன. பல கோபுரங்களில் வித்தியாசம் இருக்கின்றது. அதேபோல கருங்கல் திருப்பணியில்கூட வித்தியாசங்கள் இருக்கின்றன. சத்த நாதங்கள் எல்லாம் வருகின்றன. சுரங்கள் எல்லாம் அந்தத் தூண்களிலே ஒலிக்கின்றன. அவைகளை எல்லாம் கலைக்கண்ணோடு பார்க்க வேண்டும். அதற்காகத்தான் கோயில்களில் அருளையும் கலையையும் வைத்திருக்கிறார்கள். ஆயிரங்கால் மண்டபம் போன்ற, பல பெரிய மண்டபங்களைக் கட்டியிருக்கிறார்கள். அங்கே அனைவரும் ஒன்று சேர்ந்து தியானித்து, தமக்குள்ள குறைகளை இறைவன்பால் முறையிட்டு, மன அமைதி பெறுகிறார்கள்.

இத்தகைய கோயில்கள் நல்லமுறையிலே அமையவேண்டும் என்பதற்காக, நமதுமாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள், ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இன்னும் அவர்கள்இந்த நிலையிலே, எவ்வளவோ செய்யக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் அனைவரும் அவர்களுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அறநிலைய ஆணையர் அவர்களுக்கும், இதற்கு மூலகாரணமாக இருக்கின்ற முதலமைச்சர் அவர்களுக்கும், இவ்விழாவிற்குத் தலைமை ஏற்றுள்ள அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மயிலம் முருகப்பெருமானின் திருவருள் உண்டு என்று கூறிக்கொண்டு, எனது உரையை முடிக்கிறேன்.

---

## பேரூர் ஆதீனம் தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்

அருள் உருவாம் மகாசந்நிதானங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்து, இங்கு இந்த மாபெரும் விழாவைச் சிறப்பாக நடத்துகின்ற, இந்த பொறுப்பில் தலைமை தாங்கியிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் சௌந்தரராசன் அவர்களுக்கும், அறநிலையத்துறையை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்ற, பாராட்டுதலுக்குரிய அன்புமிகுந்த அருமை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களுக்கும், மற்றுமுள்ள பெரியோர்

களுக்கும், தாய்மார்களுக்கும், சான்றோர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்து, இந்த அருமையான நல்ல ஏற்பாடுகள் செய்து இருக்கின்ற, இந்தத் துறையையும், இந்த அருமையான ஏற்பாட்டுக்குக் காரணமாக இருக்கின்ற அரசையும் வாழ்த்தக் கடமைப்பட்டு இருக்கின்றோம்.

நம்முடைய பாராட்டுதலுக்கும் மதிப்பிற்கும் உரிய ''பொன்மனச்செம்மல்'' அவர்கள் ஒரு புதிய வரலாற்றை இப்போது தொடங்கி இருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் எழுந்ததாகிய ஓர் எழுச்சி, மீண்டும் உண்டாக வேண்டுமென்ற உணர்வோடு, இந்த அமைப்பு உருவாகியிருக்கின்றது. இதை நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இராசராச சோழன் தோன்றிய காலத்தில் அவன் இந்த நாட்டினுடைய பல்வேறு வகையான எழுச்சி மிக்க கலைத் திறன்களை எல்லாம் வெளிப்படுத்தி, இந்த நாட்டை வாழ்வித்தான். அவனுடைய பேராட்சி, கடல் கடந்த நாடுகளுக்கும் சென்றது. ஆன்மீக எழுச்சியை உருவாக்கி, மக்களை நல்வாழ்வில் செலுத்துவதற்கு உரியதாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். அந்த மன்னன்தான், இந்த நாட்டில் எவ்வாறு சமயத்துறை வளர வேண்டும் என்பதற்கான திட்டங்களை வகுத்தான்.

அப்படி ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்த வரலாற்றை ஏற்படுத்துகின்ற முறையிலே, இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு அரசு, இந்த அருமையான திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக, மீண்டும் திருக்கோவிலிலே ஒரு புத்துணர்வு உருவாக வேண்டும். இந்தத் திருக்கோவிலிலே இருக்கின்ற திருப்பணிகள் செழுமையுற வேண்டும். அதே நேரத்தில், வாழ்வாங்கு வாழ்கின்ற மக்கள் உள்ளத்தைப் பக்குவப்படுத்த உயரிய தாக அமைய வேண்டும். அத்தகைய சிறப்புக்குரியதாகத்தான் இந்தத் திருப்பணித் திட்டம், ஆலய மேம்பாட்டுத் திட்டம் தொடங்கப் பட்டிருக்கிறது.

நம் பாராட்டிற்குரிய அமைச்சர்சௌந்தர ராஜன் அவர்கள், சமூகநெறி சமயநெறி, என்ற இரண்டுமே, இந்தச் சமுதாயத்தை வளர்ப்பதற்கு உரியவை. சமூகநெறியும், சமயநெறியும் தான், இந்த மக்களுடைய உள்உணர்வை வளர்த்துக் கொடுப்பதற்கும், நெறிப்படுத்துவதற்கும், நெறிப்படுத்திக் கொடுப்பதற்கும் உரியவை. சட்டநெறி எந்த நேரத்திலேயும் நமக்கு முழுமையாகப் பயன்படுதற்கு உரியதாக இருக்கமுடியாது என்பதை, மிக அழகாகக் கூறினார்கள். ஒரு சமூகத்தை வளர்ப்பதற்கு உரியதாக இருப்பது சமயம். சமயத்தின் மூலமாகத்தான், ஒரு சமூகம் சிறந்த முறைமையிலே விளங்கமுடியும் என்பதைத்தான் ,நம் நாட்டு நால்வர்கள், ஆழ்வார்கள், ஆகியோர்கள் காட்டிச் சென்று இருக்கிறார்கள். அவர் வழியிலே வந்த அரச பரம்பரைகளும் காட்டியுள்ளன. அந்த வகையில் நம் சமூகத்தை அழைத்துச் செல்வதற்கு உரிய ஒரு வாய்ப்பை நம்முடைய சமயம் உருவாக்க வேண்டும்.

மக்களைத் திருக்கோவிலுக்குள்ளே அழைத்துச் செல்லுகின்றதாகிய, ஒரு பொறுப்புணர்வை நாம் உருவாக்கியாக வேண்டும். கோவில், மக்களோடு தொடர்புடையதாக வளர்வதற்கு உரிய வாய்ப்புகள் பெருக வேண்டும். சில மக்கள் தனியாக அவர்கள் அமைத்துக் கொண்ட சிறு தெய்வக்கோவில்களைத் தங்களுடைய வழிபாட்டுக் கோயிலாகக் கருதி வழிபடுகிறார்கள். அதேநேரத்தில் நம்முடைய மன்னர்களால் கட்டப்பட்டு, நம்முடைய அருளாளர்களால் பாடப்பட்ட திருக்கோவில்களை, அவர்கள் ஏதோ அரசாங்கக்கோவில் என்பதாகக் கருத்தில் கொண்டு, அதிலே ஈடுபடமுடியாமல் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலை மாறவேண்டும். அப்படி மாறவேண்டுமென்றால், மக்களுக்கும் கோவிலுக்கும் உரிய ஒரு தொடர்பு உண்டாக வேண்டும்.

மக்களுக்கு, இது நம்முடைய கோவில், வாழ்விக்கின்ற இடம். ஆன்மாவை வளர்த்துக் கொடுக்கின்ற இடம் என்கிற உணர்வுகளைத் தருவதற்குரிய சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். அப்படி உருவாக்குவதற்குரிய பொற்காலம் மலருகின்ற மலர்ச்சியாக இந்த மேம்பாட்டுத்திட்டம் அமைந்திருக்கிறது.

இன்றைக்கு ஏழுகோடியாக அமைந்திருக்கின்ற இந்தத் திட்டம், பல்வேறு வகையிலே மக்களுடைய மிகச் சிறந்த உதவிகளின்மூலமாகவும், அறநிலையத் துறையின் உதவிகள் மூலமாகவும், பெருகி வளர்ந்து, கலைகளையும், சமய நுண்ணுணர்வுகளையும், வளர்த்துக் கொடுப்பதற்கும், திருக்கோவில்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும், சமயத் தொண்டர்களை உருவாக்கித் தருவதற்கும் உதவியாக இருக்க வேண்டும். அப்படி இருப்பதற்கு எல்லாம்வல்ல இறைவனுடைய திருவருள் துணைபுரியவேண்டுமென்று வேண்டுகின்றேன்.

இந்த அருமையான ஏற்பாட்டைச் செய்திருக்கின்ற தமிழக அரசையும், இந்தப் பணிகள் மேலும் மேலும் வளர்வதற்குரியதாக, அறநிலையத்துறையைச் செம்மையாக நடத்திச் செல்கின்ற அறநிலைய அமைச்சரையும் பாராட்டுகின்றேன்.

இன்றைக்கு நமக்கு அருமையான ஆணையர் கிடைத்திருக்கிறார்; ஆணையருக்குரிய ஒரு பாரம்பரிய அமைப்போடு

கூடிய ஆணையர் கிடைத்திருக்கிறார்; செந்தமிழ் நெறியையும், சிவ நெறியையும் போற்றி வளர்படுத்துகின்ற ஒரு ஆணையர் கிடைத்திருக்கின்றார். அவருடைய பணிகள் மேலும் மேலும் வளரவேண்டும் என்று வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

## சிரவையாதீனம் தவத்திரு சுந்தர சுவாமிகள்

வணக்கத்திற்கும் போற்றுதலுக்கும் உரிய குருமகா சந்நிதானங்கள் அவர்களே! பாராட்டுதலுக்கும் அன்பிற்கும் உரிய விழாத் தலைவர், உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு சௌந்தரராஜன் அவர்களே! இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்களே! ஆணையர் உயர்திரு ஆளுடையபிள்ளை அவர்களே! அறிஞர் பெருமக்களே, அன்புப் பெருமக்களே! தாய்மார்களே, செல்வர்களே, செல்வியர்களே!

நம்முடைய நாட்டுக்குச் சிறப்பு திருக்கோயில்கள் என்பது, எல்லோருக்கும் தெரியும். ஏனைய மேலைநாட்டார்கள் எல்லாம் கண்டு வியக்கின்ற அளவில், ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே, தமிழகம் மாபெரும் கோயில்களை எல்லாம் எடுத்து இருக்கிறது. நமக்கும், நம் நாட்டிற்குமே தனிச் சிறப்பான பாரம்பரியக் கலைச் செல்வங்களாக விளங்குகின்ற இந்தக் கோயில்களையெல்லாம் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்று, நம்முடைய அறநிலைய அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள்.

நம்முடைய பாராட்டுதலுக்கும் மரியாதைக்கும் உரிய தமிழக முதல்வர், 'பொன் மனச் செம்மல்' புரட்சித் தலைவர் அவர்களின் கருத்திற்கிணங்க, நம்முடைய அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு இராம.வீரப்பன் அவர்கள், இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டத்தை வகுத்து இருக்கிறார்கள். தமிழகத்திலே சில திருக்கோயில்களுக்கு நிறைந்த வருமானம் உள்ளது. அதே நேரத்தில் பல கோயில்களுக்கு வருமானம் இல்லை என்பது தெரியும்.

இந்தத் திட்டம், குத்தகைப் பொருள் வேண்டாம், இதுவே போதும் என்னும் பொருளிலே அல்ல. சில கோயிலிலே மிகுதியாக இருக்கிறது, அதை இல்லாத சில கோயிலுக்குக் கொடுப்பது என்பது எப்போதுமே உள்ளஒன்று. சில கோயிலிலே இருக்கிற மிகுதியான பொருளை, வேறு கோயிலுக்குக் கொடுப்பது என்றால் முன்னே எல்லாம் அவர்களுக்கு வேண்டியவர்களுக்கோ, பக்கத்திலே இருக்கிற கோயிலுக்கோ வசதியாக இருந்தாலும் கூட, இன்னும் கொஞ்சம் வளமாவதற்குக் கொடுப்பார்கள். பூசையே இல்லாமல் இருக்கிற, திருப்பணியே செய்ய முடியாத நிலையில், கீழே விழுகின்ற நிலையில் இருக்கிற கோயில்களைப் பாதுகாக்க வேண்டும், மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலே, அதை ஒரு வாரியமாக அமைத்து, எங்கே எவ்வளவுதேவை என்று தெளிவுபடுத்திக் கொடுக்கவேண்டுமென்ற அமைப்பிலே தான், இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறதென்று நினைக்கிறேன்.

முடிமன்னர் ஆட்சிக் காலத்திலே எத்தனையோ திருக்கோயில்களைக் கட்டினார்கள். ஆனால் இருக்கின்ற திருக்கோயிலிலிருந்து இல்லாத திருக்கோயிலுக்கு உதவுகின்ற முறையினைத் திட்டம் வகுத்துச் செய்யாத ஒரு செயல், தற்போது சமயபுரத்திலே எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின்பு செயல் படுத்தப்படுகின்றது. இதுவரைக்கும் நடக்காத ஒன்று, எந்த ஆண்டிலேயும் நடக்காத ஒன்று, இந்த ஆட்சியிலே மட்டும், நம்முடைய 'பொன்மனச் செம்மல்' 'புரட்சித் தலைவர்' ஆட்சிக் காலத்தில்-பாராட்டுக்குரிய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் வீரப்பன் அவர்கள் காலத்தில் - நடைபெறுகிறது. இதிலே ஒரு பெரிய சிறப்பு, அவர்களுக்குத் துணையாக அறநிலைய ஆணையர் திரு. ஆளுடையபிள்ளையும் இருக்கிறார்கள்.

தக்கார்கள் பல கோயில்களில் இருக்கிறார்கள். அவர்கள் கையிலிருந்து தக்க வண்ணமாக வந்து கொண்டிருக்கிறது. இதனை தொடர்ந்து ஆண்டுதோறும் செய்ய வேண்டும். ஒவ்வொரு ஊரிலேயும், அந்தந்தப் பகுதியில் உள்ள திருக்கோயில்களுக்கு உதவி செய்ய, இதற்கென ஒரு வாரியம் அமைத்து, அக்குழு பரிந்துரை செய்யும் திருக்கோயில்களுக்குச் செலவு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் பாடல் பெற்ற திருக்கோயில்களுக்கு முதலில் திருப்பணி செய்ய வேண்டும். அதனால் மற்ற கோயில்களுக்குத் திருப்பணி செய்யக்கூடாது என்பது கருத்தன்று.

கோவில் நிலங்களிலிருந்து குறைந்த அளவு குத்தகையாயினும் கோயிலுக்குச் சேர வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகப் பெருமான் செய்த திருப்பணி இன்றும் இருக்கிறது. அதற்காக அவர் அரசனுடைய பணத்தை எடுத்து, முடிமன்னன் பணத்தை எடுத்து, பிரம்படி பட்டு, திருப்பணிகள் செய்தார். நாம் அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. நாம் முயற்சி மட்டும் எடுத்தால் போதும்.

நமது அறநிலைய அமைச்சர் அவர்கள், கோயில்களைப் பாதுகாக்கின்ற பொறுப்பிலே இருக்கிறார்கள். அவர்கள் 'பொன்மனச் செம்மல்' 'புரட்சித் தலைவர்' அவர்களின் கண்ணுக்குக் கண்ணாகப் பணியாற்றுகிறார்கள். இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டத்தைத் திறம்படச் செயலாற்றவுள்ள அவர்களை, எல்லோரும் வாழ்த்தியது போல, நாமும் வாழ்த்துகின்றோம்.

திருக்கோயில் வைப்பு நிதி ரூ. 7 கோடி 700 கோடியாக வளர்ந்து, மேலும் வளர்ந்து, சமுதாயம் முழுவதற்கும் பயன்படும் வகையில் இந்த ஆலய மேம்பாட்டுத் திட்டம் விளங்க வேண்டும் என்று, எமது வழிபடு கடவுளான வெற்றிவேற் பெருமானுடைய செந்தாமரைத் திருவடிகளை மீளநினைந்து வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

வ ண க் க ம்.

---

## அருண்மொழியரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

ஞானமே வடிவாகிய வயலூர் எம்பெருமானுடைய திருவருளாலே, இந்தச் சிறந்த விழாவுக்குத் தலைமை தாங்கியிருக்கின்ற அவைத் தலைவர், அறநிலையத்துறை அமைச்சர், ஆணையர், மகாமுனிவர்கள், பெரியோர்கள் எல்லோருக்கும் என்னுடைய பணிவான வணக்கம்!

இறைவனைக் காணவேண்டுமானால் அகமுகப் பார்வை இருக்க வேண்டும். இந்தப் புறமுகக் கண்ணுக்கு இறைவனைக் காண முடியாது.

''வானத்தில் மண்ணில் பெண்ணில்
மைந்தரில் பொருளில் ஆசை
தான்அற்றுத் தனையும் அற்றுத்
தத்துவம் உணர்ந்த யோகர்,
ஞானக்கண் கொண்டே யன்றி
நாடரும் சோதி''

என்றார் பரஞ்சோதி முனிவர். அந்தப் பரம்பொருளை, ஊனக்கண்ணுக்கும் காணும்படியாகப் பெரியவர்கள் வைத்ததுதான், ஆலயங்கள். இந்த உடம்புக்கு 'மெய்' என்று ஒரு பெயர். இது மெய்யா? ''நேற்று இருப்பார் இன்று இல்லை, இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பார் என்று எண்ணவோ திடமில்லை'', ''நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்பனும் பெருமை உடைத்து இவ்வுலகு''. ஆதலின் இது பொய் உடம்பு.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்பது தொல்காப்பியம். இந்த உடம்புக்குப் பல பெயர்கள் உண்டு. தேகம் தகிக்கப்படுவது என்று அர்த்தம். என்றைக்கிருந்தாலும் ஒரு நாளைக்குச் சுட்டுவிடுவார்கள்.

''விட்டுவிடப் போகுதுஉயிர், விட்டவுடனே
சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்''.

தகிக்கப்படுவதனாலே தேகம், கட்டப்படுவதனாலே யாக்கை. உயிர் உடுப்பதனாலே உடம்பு. இந்த உடம்புக்கு 'மெய்' என்று ஒரு பெயர். இலக்கணம் மட்டும் படித்தவர்கள் சொல்லுவார்கள், இது மங்கல வழக்கு என்று. ஆனால் இது அல்ல பொருள். இறைவன் ஒருவன்தான் மெய்ப்பொருள். சூரியன் அழியும், சந்திரன் அழியும், ஏழு கடல்களும் அழியும், அட்டகுலாசல பர்வதங்கள் அழியும், மகாமேருகிரி அழியும். யாவும் அழியும். இறைவன் அழியமாட்டான். அதனால்தான் சுவாமியை மயானத்தில் இருக்கிறார் என்று சொல்லுகிறோம். ஏன் மயானத்திலே இருக்கிறார். எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துப் போகிற இடம். ஒரு கட்சிக்கு ஒரு மயானமா உண்டு? அப்பா நீங்கள் எல்லோரும் எங்கே ஒற்றுமையாய் வருகின்றீர்களோ, அங்கேயே இருக்கிறேன் என்கிறான் இறைவன். அந்தப் பரம்பொருள் எங்கே இருக்கிறது. கயிலாயத்திலேயா?

''உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்,
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன்ஐந்தும் காளாமணிவிளக்கே''

உள்ளே இருப்பதை வெளியே தேடக் கூடாது. ஆயிரம் ஆண்டுகள் தேடினார்கள். கிடைக்கவில்லை. இறைவன் உள்ளுக்குள்ளே இருக்கிறான். ஒரு உதாரணம்: கட்டையைக் கடைந்தால் கனல் வரும். எங்கிருந்து வரும்? கட்டையினுள்ளே இருந்து வரும். பாலைக் கடைந்தால் நெய் வரும். எங்கிருந்து வரும்? பாலுக்குள்ளேயிருந்து வரும். இவைகளெல்லாம் கடைந்தால் வெளிப்படுமாப்போலே, இறைவன் உயிருக்குயிராக இருக்கிறான். அவன் தியானத்திலே வெளிப்படுவான். தெய்வம் உள்ளத்துக்கு உள்ளே இருக்கிறது. உடம்புக்குள்ளே உயிர், உயிருக்குள்ளே இறைவன். எதுபோல என்றால், டயருக்குள்ளே டியூப், டியூப்புக்குள்ளே காற்று. டயர் போன்றது உடம்பு. டியூப் போன்றது ஆன்மா. காற்றுப் போன்றது பரமான்மா. டயரும் டியூப்பும் தெரியும், காற்று கண்ணுக்குத் தெரியாது. அதுதான் மோட்டாரை இயக்குகின்றது. அது போலப் பரமான்மா கண்ணுக்குத் தெரியாது. ஆனால் அதுதான் உலகத்தை இயக்குகிறது.

மணப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டுவார்கள். பார்த்திருப்பீர்கள். என்ன கருத்து? எத்தனை வசதியிருந்தாலும், அதற்குப் பலகை துணை செய்தல் வேண்டும். நான் டிரெயினுக்குப்போகிறேன் என்றால், ஒரு நண்பர் டிக்கட் வாங்கித் தருகிறார். மற்றொருவர் தண்ணீர் கொண்டு வருகிறார். இவ்வாறு பலகை உதவி செய்யும். பலபேர் கை உதவி செய்தால்தான் காரியம் சுலபமாக முடியும். மணப்பெண்ணையும் மாப்பிள்ளையையும் பலகை தாங்குகின்றது. அந்தப் பலகையை எது தாங்குகின்றது? சங்கிலி. அந்தச் சங்கிலியை எது தாங்குகின்றது? உத்தரம். அந்த உத்தரத்தை எது தாங்குகிறது? சுவர். அந்தச் சுவரை எது தாங்குகிறது? அஸ்திவாரம். இந்த அஸ்திவாரம் கண்ணுக்குத் தெரியாது. கண்ணுக்குத் தெரியாத அஸ்திவாரம் இத்தனையும் தாங்குவதுபோல, அகில உலகத்தையும் தாங்கி, நம்மைக் காத்தருள்பவன் இறைவன். அவரை நினைக்கச் செய்வதுதான் ஆலயம்.

ஒருவன் இசைக் கச்சேரி செய்கின்றான். சுவரொட்டியில் முழுப்பெயரும் போடுவதில்லை. பாட்டு அரியக்குடி. ஊரா பாடுகின்றது? இராமாநுச ஐயங்கார். பிடில் கும்பகோணம், இராசமாணிக்கம்பிள்ளை. மத்தளம் பாலக்காடு, மணி ஐயர். பாட்டு முசிறி சுப்பிரமணிய ஐயர். இவைகளெல்லாம் இடவாகு பெயர். அதாவது இடத்தின் பெயரை, அவருக்கு வழங்குகின்றோம்.

ஒருவன் விறகு விற்கிறான். அவனை விறகு என்று கூப்பிடுகின்றோம். அவன் பெயர் விறகா? ஒருவன் விளக்குமாறு விற்கின்றான். அவனை எப்படிக் கூப்பிடுகிறோம். ஏ விளக்குமாறு என்று. அவனுக்குக் கோபம் வருமா? வராது. ஏன், அவன் அந்தப் பொருளைத் தாங்குகின்றான். எந்தப் பொருளை எவன் தாங்குகின்றானோ, அதன் பெயரை அவன் தாங்குகின்றான். இதற்குத் தானியாகு பெயர் என்பது பெயர். விளக்கு என்று எதற்குப் பெயர்? எரிகின்ற சுடருக்குப்பெயர். திரிக்கோ ஸ்டாண்டுக்கோ பெயர் இல்லை. எரிகின்ற சுடர்தான், இது கட்டையா கள்வனா, கிளிஞ்சலா வெள்ளியா? காலில்பட்டது சாணமா, சந்தனமா? என்று விளக்குகிறது. அதனால் அந்த சுடருக்கே விளக்கு என்று பெயர். ஆனால் நாம் அச்சுடர் எரிகின்ற தண்டை விளக்கு என்று கூறுகின்றோம். அதுபோல மெய்ப் பொருளான இறைவன் இந்த உடம்பிற்குள் இருப்பதனால், இந்த உடம்பைப் பெரியவர்கள் மெய் என்று வழங்கினர். ஆண்டவன் மனவாசகங் கடந்தவன். நமக்காக நம் உடம்பினுள்ளே எழுந்தருளியிருக்கின்றான். அவனை 24 மணி நேரமும் பூசை பண்ணி வழிபட்டாலும் போதாது. சுண்டல் போட்டால்தான் சில பேர் கோயிலுக்குப் போவார்கள்.

பாண்டிச்சேரியிலே கம்பன் விழாவில் அடியேன் பேசிக் கொண்டிருந்தேன். எதிரில் உட்கார்ந்திருந்தார் நீதிபதி இஸ்மாயில். அவர் பாதியிலேயே எழுந்து போய் விட்டார். நான் கூட்டம் முடிந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது திரும்பி வந்தார். சுவாமி, இன்று வெள்ளிக்கிழமை. தொழுகைக்காகப் பள்ளி வாசல் போனேன். என்னைத் தவறாக நினைத்துக் கொள்ளாதீர்கள் என்றார். தொழுகை செய்வதில் அவர் எவ்வளவு கவனமாகவும் கருத்தாகவும் இருந்திருக்கின்றார் பாருங்கள். அவ்வாறு ஒவ்வொருவரும் இருக்க வேண்டும்.

அத்தகையவர்கள் வழிபடும் இறைவன் எப்படி இருப்பான். யோகியாக இருப்பான், வீரப்பனாகவும் இருப்பான். முருகனை ''வீர வீர வீராதிவீரப் பெரியோனே'' என்கிறார் அருணகிரிநாதர். ஆரப்பா என்றால் வீரப்பா. ஏழுகோடி ரூபா என்றால் சாதாரணமா? திருப்பணி செய்கிற எனக்கல்லவோ தெரியும். ஒருநாள் முழுவதும் கடலூர் முழுவதும் சுற்றினேன். ரூ. 16 ஆயிரம்தான் வந்தது. இந்தத் திருப்பத்தூர் திருப்பணிக்காக 2 நாட்கள் சுற்றினேன். 35 ஆயிரம் ரூபாதான் கிடைத்தது. ஏழுகோடி ரூபா என்றால், அது எவ்வளவு பெரிய சாதனை. எனக்கு மூச்சே நின்றுவிடும் போல இருக்கின்றது. பழனியிலே இருந்து ஒரே தொகையாய் ரூ. 2 கோடி கொண்டு வந்து கொடுத்ததாக, சகோதரி டாக்டர் இராதா தியாகராசன் அவர்கள் சொன்னார்கள். ஏழு கோடி ரூபாயையும் திரட்டி விளக்கு எரியாத கோயில்களுக்கெல்லாம் விளக்கெரிய வைப்பது, பூசையில்லாத கோயில்களையெல்லாம் பூசை நடைபெற ஏற்பாடு செய்வது, திருப்பணி இல்லாமல் சிதைந்து கிடக்கின்ற பழம்பெரும் கோயில்களுக்கெல்லாம் திருப்பணி செய்வது என்றால், நாம் நம் தமிழக அரசையும் நன்றியுடன் பாராட்டிப் போற்ற வேண்டாமா? நம்முடைய 'பொன்மனச் செம்மல்' 'கொடை வள்ளல்' புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அரசு, பெரிதும் போற்றிப் பாராட்டி வாழ்த்தத்தக்க அரசு, எவ்வளவு போற்றினாலும் தகும்.

நல்லவேளை, நம்முதல்வர் இங்கு வரமுடியவில்லை. அவரை நேராக வைத்துக் கொண்டு பாராட்டினால், அது முகமன் அல்லது முகஸ்துதியாகி விடும். எங்கேயோ வேறு பல பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்தத் துறையிலே பெரிதும் நாட்டம் செலுத்தி, ஆழ்ந்த கருத்து வைத்து, தமிழகக் கோயில்களெல்லாம் பழுது இல்லாமல் சீரும் சிறப்புமாக இருக்க வேண்டும் என்று எண்ணி, இந்த அரிய பெரிய நல்ல திட்டத்தை வகுத்துக் கொடுத்து, நமது அறநிலையஅமைச்சர் அவர்களைச் செயற்படுத்துமாறு பணித்திருக்கின்றார்கள். அவர்களின் இந்தச் சீரிய

சிறந்த செயல் நம் தமிழக வரலாற்றிலேயே சமய வரலாற்றிலேயே, கோயில்களின் வரலாற்றிலேயே சிறப்பிடம் பெறத் தகுந்த, ஒரு அரும்பெரும் செயலாகும். இந்த ஏழுகோடி ரூபா, 700 கோடியாகப் பெருகி வளர வேண்டும் என்று, நான் வழிபடும் வயலூர் முருகனின் திருவருளை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

இப்போது வாளமர்கோட்டையிலே, காத்தைய்ய சுவாமிகள், ஒரு பெரிய திருப்பணி செய்து வருகின்றார். 35 ஆண்டுகளாகச் சோறு தின்னாமல் திருப்பணி செய்கின்றார். அவரோ துறவி, வெள்ளைவேட்டி கட்டுகின்ற துறவி. அவர்கள் கொண்டு வந்து 10 ஆயிரம் ரூபா கொடுக்கிறார்கள் என்று சொன்னால், நாமெல்லாம் வெட்கப்படவேண்டும். நாமும் நமக்கு இயன்ற தொகையை வழங்க முன் வர வேண்டும். வாளமர்கோட்டை காத்தைய்ய சுவாமிகள் அவர்கள் திருவடிக்கு எனது தாழ்மையான வணக்கங்கள். அவர் ஒருலட்சம் சந்நியாசிக்குச் சமம். இன்னும் பல பெரிய வர்கள் பேச வேண்டியிருப்பதனால், சிறியேன் அதிக நேரம் பேசி அவர்கள் நேரத்தை அபகரிக்கக்கூடாது என்று அஞ்சி, இந்த அளவிலே என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கின்றேன். எல்லோருடைய திருவடிக்கும் வணக்கம்.

*

## பக்தியின் ஒன்பது வகைகள்

பாகவதம், நாரத பக்தி சூத்திரம் ஆகிய நூல்கள் பக்தியினைப் பின்வருமாறு 9 வகைப் படுத்தி விளக்கிக் கூறுகின்றன.

1. யாதனம் — கோயில்கள் எடுப்பித்தல், திருநந்தவனம் அமைத்தல் முதலிய திருப்பணிகள் செய்தல்.
2. சிரவணம் — இறைவனின் வரலாறும் பெருமையும் பற்றிக் கூறும் நூல்களைத் தக்கவர்கள் சொல்லக்கேட்டு மகிழ்தல்.
3. கீர்த்தனம் — இறைவனின் திருநாமங்களை உச்சரித்தல், இசையுடன் பாடல்களைப் பாடுதல்.
4. அர்ச்சனம் — நீராட்டிப் பூச்சூட்டி நிவேதனம் படைத்துப் பூசித்தல்.
5. ஸ்துதி — இறைவனைப் புகழ்ந்து தோத்திரப் பாடல்களை இயற்றுதல் அல்லது பாடுதல்.
6. வசனம் — இறைவனின் அருட்பெருமைகளை எடுத்துப் பலருக்கும் கூறி விளக்குதல்.
7. வந்தனம் — இறைவனை அஷ்டாங்கம், சாஷ்டாங்கம் முதலிய வகைகளிற் பணிந்து வணங்குதல்.
8. ஸ்மரணம் — இறைவனை எப்பொழுதும் மறவாமல் இருத்தல்
9. தியானம் — சுகாசனம் முதலிய நிலைகளில் அமர்ந்து, மனத்தை ஒருமுகப் படுத்தி, அன்பு செலுத்தி இறைவனை வழிபடுதல்.

—ஆசிரியர்

# "காமம் சான்ற ஞானப் பனுவல்"

"சித்தாந்த கலாநிதி"
திரு ந. ரா. முருகவேள், M.A., M.O.L.

முன்னுரை :

திருவாசகம் போலவே, திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலும், மாணிக்கவாசக ராற் செய்யப் பெற்றதாகும் என்பதனைப் பெரும்பாலோர் அறியார். இவை இரண்டும் முறையே சிவம் தமிழ் என்பனவற்றிற்குரிய சிறப்பு நூல்களாய், வாதவூரடிகளின் அன்பு நலனையும், அறிவுத்திறனையும் விளக்கும் மாட்சிமை மிக்கு வயங்குகின்றன. திருச்சிற்றம்பலக் கோவையாரின் அளப்பருஞ் சிறப்பினை யெல்லாம், விளக்கமுறச் சுருங்கிய முறையிற் குறிப்பிடும் ''காமஞ்சான்ற ஞானப்பனுவல்'' என்னும் அரும்பொருட் சொற்றொடர், குமர குருபர அடிகள் அருளிச் செய்த சிதம்பர மும் மாணிக்ககோவையின்கண்,

''கடங்கலுழ் கலுழிக் களிறல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு,
இருநிலம் அகழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை,
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்,
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
**காமம் சான்ற ஞானப் பனுவற்குப்**
பொருள்எனச் சுட்டிய ஒருபெருஞ் செல்வ!''

எனவரும் பாடற்கண் வருவதாகும். அதன்கண் குமரகுருபரர், மாணிக்கவாசகர், தாம் அருளிச் செய்த திருவாசகம் திருச்சிற்றம்பலக்கோவை யார் என்னும் இருபெரு நூற்கும் உண்மைப் பொருளாவார் அம்பலவாணரே எனச் சுட்டிச் சென்றமையினையும், பாண்டிய வேந்தனுக்கு மாலும் அயனுமே காணமாட்டாத இறைவனை வேதப் புரவியின்மேல் வாதுவனாகப் போதரக்காட்டி அவனை உய்வித்த சிறப்பினையும் புகழ்ந்தெடுத்துப் பாராட்டி, மாணிக்கவாசகரைச் ''செந்நாப்புலவன்' எனச் சிறப்பித்தும், திருவாசகத்தினைப் 'பைந்தமிழ்' எனப் போற்றியும், திருச்சிற்றம்பலக்கோவையாரை 'ஐந்திணையுறுப்பின் நாற்பொருள் பயக்கும் காமம் சான்ற ஞானப் பனுவல்' என விதந்து கூறியும், மகிழ்ந்தின்புறுகின்றார்.

தொடர் **அமைப்பின் சிறப்பு :**

திருச்சிற்றம்பலக் கோவையார் என்னும் நூலானது, 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலநெறி வழக்கம்' 'தழீஇக், குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் ஐந்திணைக்கும் உரிய முதல் கரு உரிப்பொருள்கள் யாவும் அமைய இயற்றப்பட்டதாகலான் '**ஐந்திணை யுறுப்பின்**' என்றும்; தன்னை ஓதுவார்க்கு இன்பம் தலைக்கீடாக அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கினையும் ஒருசேரப் பயப்பித்திலின் '**நாற் பொருள் பயக்கும்**' என்றும்; எத்திறத்தானும் உய்யுநெறி தலைப்பாடாத கடையாய மக்களையும் கடைத்தேற்றிப் 'பேதையைக் காதல் காட்டிக் கைவிடுக்க' என்னும் முறைமைபற்றிப் பல பிறப்பிடையும் ஆணும் பெண்ணுமாய்ப் பயின்று போகந்துய்த்துப் போந்த அவர் தமக்குத் தூலாருந்ததி நியாயமாக, அவர்கள் தாமுப்பெறும் இணைவிழைச்சினுள்ளே மிக்க தொன்று காட்டிக் கடுத்தின்னாதானைக் கட்டிபூசிக் கடுத்தீற்றியவாறு போல, உய்தி நெறி எய்துவித்தற் பொருட்டு, ஒப்புயர்வற்ற காதற்றலைமக்கள் இருவர்மேல் வைத்து, அவர் தம் காதலின்ப அன்பு வாழ்க்கையின் வளர்ச்சித் திறனைப் பலபடியாகத் தொடர் கதைபோல அமைத்துக் காமச்சுவை கனிய இயற்றப் பெற்றுண்மை கருதிக் 'காமம் சான்ற' என்றும்; அங்ஙனம் காமம் சான்ற இயல்பினைப் போல மேனோக்காகக் காண்போருக்குத் தோன்றினும், அதனை ஊடுருவிக் காணவல்ல நுண்மாண் நுழைபுலம்மிக்க அறிவுமதுகை வாய்க்கப் பெற்றோர்க்கு;குறிஞ்சிபாலை முல்லைமருதம் நெய்தல் (நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப் படக்கம்)என்னும் ஐம்பாடுகள் எய்தும் உயிர்நிலை களைக் குறிக்கும் எனவும், சிவனும் உயிரும் முறையே தலைவியும் தலைவனுமாம் எனவும், பாங்கன் பாங்கி செவிலி நற்றாய் என்

போர் முறையே திருவருளும் உயிரறிவும் மறைப்பாற்றலும் இறைவியுமாம் என்றும் இனிதுணர்ந்து கொள்ளுதற்கு, ஏற்ப இயைந்து விளங்கும் நலங் குறித்து ''ஞானப்பனுவல்'' என்றும், குமரகுருபர அடிகள் இதனை அழகுறப் பாராட்டி மகிழ்ந்தனர்.

இந்நூல் தூய காமச் சுவையோடு மிக மேலாய ஞானப் பொருளும் பொதிந்துள்ளமையினை,

''தில்லை மூதூர்ப் பொதுவினில் தோன்றி
எல்லையில் ஆனந்த நடம்புரி கின்ற
பரம காரணன் திருவரு ளதனால்,
திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வ ராயினர்; ஆதலின்,
அறிவன்நூற் பொருளும், உலகநூல் வழக்கும்
என,
இருபொருளும் நுதலி எடுத்துக் கொண்டனர்;
ஆங்கவ் விரண்டனுள்,
ஆகமநூல் வழியின் நுதலிய ஞான
யோகநுண் பொருளினை யுணர்த்துதற்கரிது''

என வரும் பேராசிரியர் உரைப்பாயிரம்தானும் வலியுறுத்தும் ''திருக்கோவையாருண்மை'' என்னும் பெயரால் வழங்கும் அரும்பெறல்நூல், இதன் ஞானப் பொருளினை நன்கினிது விரித்து விளக்குவதாகும்.

**புதுமையும் புரட்சியும் :**

தமிழிலக்கியங்களின் வரிசையிலும் வரலாற்றிலும், திருவாசகம் திருக்கோவையார் என்னும் இரண்டும், ஒரு பெருஞ் சிறப்பு முதலிடம் பெறுவனவாகும். இவ்விரண்டும் சங்க நூல்களுக்கும், பிற்கால இலக்கியங்களுக்குமிடையே ஓர் எல்லைக்கல்போல விளங்கும் இயல்பின. பிற்காலக் கவிதைகள் பலவும் தோன்றுவதற்கு வழி வகுத்துக் காட்டிய கழிபெருஞ் சிறப்பினவாய், முற்காலச் சங்கத் தொகை நூல்களினின்றும் ஓரளவு வேறுபட்ட பொருளும் போக்கும் நடையும் அமைப்பும் உடையனவாய், இவ்விரண்டும் இலங்குகின்றன. தொல்காப்பியனார் கூறாத கட்டளைக் கலித்துறை, பலவகை விருத்தங்கள் என்னும் புதிய பாவினங்களை, முதன்முதற் பெருக வழங்கப் பாடியருளியவர் மாணிக்கவாசகரேயாவர். பிற்காலத் தெழுந்த கோவைநூல்கள் எல்லாம் கட்டளைக் கலித்துறைகளாலேயே அமைய நேர்ந்தமைக்குக் காரணம், திருக்கோவையாரின் அமைப்பேயாம். சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயாணம் முதலிய நூல்களும், பிறவுமெல்லாம் பெரிதும் விருத்தப் பாக்களாலேயே இயற்றப்படுவதற்குத் திருவாசகமே வழிகோலிக் கொடுத்தது எனலாம். எனவே ,மாணிக்கவாசகர் மொழி இலக்கியம் கவிதை முதலிய துறைகளில் ஒருவகைப் புதுமையையும் புரட்சியையும் விளைவித்த சான்றோர் ஆதல் தெளியப்படும்.

அதுமட்டுமோ! சங்ககாலப் புலவர்கள் இயற்கைக் காட்சியழகுகளைக் கலையுணர்வுக் கண் மட்டுமே கொண்டு கண்டு மகிழ்ந்து, நம்மனோர்க்கு அவற்றைத் தம்கவிதைகளில் அழியா ஓவியமாக அழகுறத் தீட்டிக் காட்டினர். மற்று நம் மாணிக்கவாசகரோ, வெறும் கலையுணர்வோடு மட்டுமின்றி, இறையருளுணர்வுக் கண் கொண்டு அவற்றைக் கண்டு, நம்மனோர்க்கு அவ்விறையருளுணர்வைத் தோற்றுவிக்கத் தம் இறையருளின்ப அனுபவ நலங்களைக் கவிதை மழையாகப்பொழிந்தார். சங்ககாலப்புலவர்கள் இவ்வுலகியற் காட்சி நிகழ்ச்சிகளையும், இவ்வுலகின்கண் வாழும் மாந்தர்தம் உள்ளத் துணர்ச்சிகளையுமே குறித்துப் பாடிச் சென்றனர். ஆயின், மாணிக்கவாசகரோ இவ்வெல்லாவற்றிற்கும் அடிப்படைப் பெருங்காரணமாக இலங்கும் இறைவனது திருவருட்டிறத்தினைக் குறித்துப் பலபடியாக விரித்துப் பாடி விளக்கியுள்ளனர்.

நமக்குத் தெரிந்தவரையில், முதன்முதல் தமது இறையருளின்ப அனுபவ நலத்தின் பெற்றியினைத் தாம் நுகர்ந்தவாறே தம் திருவாய் மலர்ந்து, கவிதைகளாகப் பாடி விளக்கிய சான்றோர் மாணிக்கவாசகரே எனலாம். தொல்காப்பியர் திருவள்ளுவர் நக்கீரரை யுள்ளிட்ட சான்றோர்கள், எவரும், பொதுவாக இறைவனைப் பற்றிச் சுட்டிப் புகழ்ந்திருப்பதல்லாமல் இறையருளின்ப அனுபவம் குறித்துத் தம் மாட்டு நிகழ்ந்த அனுபவச் செய்திகளாக ஏதும் பாடிற்றிலாமை ஈண்டுக் கருதியுணரற்பாலது. எனவே, இத்துறையிலும் ஒரு புதுநெறியை வகுத்தமைத்துவளர்த்தவர் மாணிக்கவாசகரேயாதல் தேற்றம். சங்ககாலச் 'செந்தமிழ்' மொழியினைத் 'தெய்வச் செந்தமிழ்' மொழியாகவும் மிக்குயர்ந்து மிளிருமாறு, முதன்முதற் செய்த சிறப்பு மாணிக்கவாசகர்க்கே உரியது. இவ்வாற்றால், மாணிக்கவாசகர் சங்ககாலத்தை யடுத்துத் தோன்றி முதன்முவலாக ஒரு பெரும் புதுமையினையும் புரட்சியினையும் தமிழகத்தில் நிகழ்வித்தவர் என்பது உணர்ந்துகொள்க!

**காதலுணர்ச்சியும், கடவுளுணர்ச்சியும் :**

மாணிக்கவாசகர் நிகழ்த்திய பலஅரும் பெரும் நற்செயல்களுள், ஒன்றை ஈண்டுக் குறிப்பிடுதல் பொருத்தமாகும். சங்ககாலத்தை அடுத்துத் தோன்றிய மாணிக்கவாசகர், தம் காலத்தில் சங்ககாலத் தமிழர்களின் நாகரிக வாழ்க்கை சிறிது சிறிதாகத் தேய்ந்து மங்கி மறையத் தொடங்கியமை கண்டு, அதற்கு உறுபெருங் காரணம் யாதென ஆராய்ந்து, சங்ககாலத் தூய விழுமிய காதலொழுக்கம், பின்

னர் நாளடைவில் தூய்மை இழந்து இழிதகவுற்றுப் 'பொய்யும் வழுவும்' மிக்குச் சீர்கேடுற்றொழிந்தமையே அதற்குக் காரணமென உணர்ந்து, மீண்டும் பழந்தமிழ்ச் சான்றோர்களின் நாகரிக வாழ்க்கைப் பண்பாட்டினை வளர்த்து நிறுவுதலே தம் கடமை எனத் தேர்ந்து, அங்ஙனம் செய்தல் வேண்டிப் பழைய சங்கச் சான்றோர் பாராட்டிய தூய விழுமிய காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியினையும் புகுத்திப் புணர்த்திப் பரப்புதல்தான் தக்கதொரு நெறியாம் எனத் துணிந்து, காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியினையும் இணைத்துப் பிணைத்துத் 'திருச்சிற்றம்பலக் கோவையார்' என்னும் இந்நூலைச் செய்தருளினர்!

எத்துணைதான் தூய விழுமிய காதலொழுக்கமாயினும், கடவுளுணர்ச்சியொடு கூடாதாயின், அது நாளடைவில் மக்களிடையே படிப்படியாக இழிந்து, ஒரு நாடும் மொழியும் மக்களும் நாகரிகமும் அழிந்தொழிவதற்குக் காரணமாதல் ஒருதலை. மிகப் பழைய கிரேக்க உரோம நாடுகளின் நாகரிகங்களெல்லாம், அடியோடு மாய்ந்து மறைந்து 'மருங்கறக்கெட்டு' அழிந்தொழிந்தமை, அம்மக்கள் வளம் நிறைந்த செல்வச் செழிப்பிலும், வரம்பிகந்த காமக்களியாட்டிலும் மயங்கிக் கடவுளுணர்ச்சியினை மறந்ததன் விளைவேயாம் என்பர் அறிஞர்கள். ஆதலின் அவ்வரும் பேருண்மையினை ஆய்ந்துணர்ந்து, அக் குறைபாட்டினைப் போக்கி நிறைவு செய்தல் குறித்துத் தம் மதிஇலச்சினையாகத் திருக்கோவையாரினை யாத்தருளிய, மணிவாசகர் செய்த பிறிதொரு செயலும் ஈண்டறிந்து மகிழற்பாலது!

'கோவை' என்னும் பெயர்க் காரணம்:

சங்ககாலப் புலவர் பெருமக்கள் விடுபூச்களைப் போலத் தனித் தனியாக ஒரொரு துறைபற்றியே அகத்திணைப் பாடல்கள் பாடிச் சென்றனர். தொல்காப்பியரும், தலைவன்கூற்று, தலைவிகூற்று, பாங்கன்கூற்று, பாங்கிகூற்று என்றிங்ஙனம் அவரவர் கூற்று நிகழ்தற்குரிய இடங்களையும், பிறிவற்றையும் கூறினரேயன்றி, இயற்கைப்புணர்ச்சி-இடந்தலைப்பாடு-பாங்கற்கூட்டம் - பாங்கியிற்கூட்டம்- முதலானவற்றையும், காட்சி-ஐயம்-தெளிதல்-நயப்பு முதலிய துறைகளையும் நிரல்பட வகுத்துக் கூறிற்றிலர். திருவள்ளுவர்தான், முதன்முதலில் தம் திருக்குறள் நூலுட் காமத்துப் பாலில் ஒரு தொடர்புபட, அவை தம்மைச் சிறிது வகுத்துரைத்தனர்! ஆசிரியர் நக்கீரனார் தமது களவியலுரையில் அதற்குப்பின் மேலும் சிறிது விளக்கம் தந்தார்.

என்றாலும், இஞ்ஞான்று வழங்கும் கோவை நூல்களிற் காணப்பெறும் நானூறு துறைகளையும், முதன்முதல் வரிசையாக்கி ஒழுங்குசெய்து கோவைப்படுத்தித் திருத்தமுறத் தந்தவர் மாணிக்கவாசகர் என்பது அறிதற்குரியது. அப்பெருஞ் சிறப்பினைக் கருதியே 'கோவையார்' என்னும் சொல், காரண இடுகுறியாக வேறுபிற எந்தக் கோவை நூலினையும் குறியாமல், மாணிக்கவாசகரது நூலினையே குறிப்பதாயிற்று என்பது! எனவே இன்னோரன்ன பலதிற நலமும் கருதியோர்ந்து, மாணிக்கவாசகரின் மாட்சியிமையினை மதித்துணர்ந்தமை பற்றியே, குமரகுருபரர் 'காமம் சான்ற ஞானப் பனுவல்' எனவும், 'பைந்தமிழ் நவின்ற செந்நாப்புலவன்' எனவும் பாராட்டினராதல் வேண்டும்!

காமச்சுவை:

இனி, இத்திருக்கோவையாரின் செய்யுட்சுவை நலம் எல்லாம், முற்ற எடுத்து மொழிதல் என்பது இயலாததாகலின், 'ஒருகுழிசிச் சொன்றிக்கு ஓரவிழ் பதமாம்' (தாலிபுலாகம்) என்னும் முறைமைபற்றி, ஒருசில பாடல்களை மட்டும் ஈண்டுக் காண்போம். 'எய்தலெடுத்துரைத்தல்' என்பது ஒரு துறை. ஒரு தலைவன் தலைவியைக் கூடிப் புணர்ந்து மகிழ்ந்தமையினைக் கூறுவது இதன் கருத்து. அத்துறை பற்றிப் பாடப் புகுந்த மாணிக்கவாசகர், தலைவன் தலைவியைப் புணர்ந்து மகிழ்ந்தான் எனக் கூறற்பாலதனைச் சிறிது மறைத்து, தலைவன் 'திரைகடலோடி' வாணிபம் செய்து பொருளீட்டினான் என்பது போலக் கூறுகின்றார்.

''புலவித் திரைபொரச், சீறடிப்
பூங்கலம் சென்னியுய்ப்பக்,
கலவிக் கடலுட் கலிங்கம்சென்
றெய்திக், கதிர்கொள் முத்தம்
நிலவி, நிறைமது ஆர்ந்து, அம்
பலத்துநின் றோன்அருள் போன்(று),
உலவிய லாத்தனம் சென்றெய்த
லாயின ஊரனுக்கே''

எனவரும் பாடல், ''புலால் நாற்றம் வீசி அலைகள் மோத, சிறிய அடிப் பகுதியினையுடைய, அழகிய மரக்கலத்தினை, அலைகளின் தலையிற் கொண்டு செலுத்தி, எல்லா ஆறுகளும் பொருள்களும் வந்து கலக்கும் கடலின்கண் சென்று, கலிங்க நாட்டினைஅடைந்து, முத்து வாணிகம் செய்து, ஈட்டிய பொருள்வளத்தால், மைந்துற்று மயங்கித் தலைவன் மதுவருந்தி மகிழாநிற்பவும், அம்பலவாணரது திருவருட் செல்வம் போல அழியாத பெருஞ் செல்வம்ன்னது அவனுக்கு எய்துவதாயிற்று'' என மேனோக்காக ஒரு பொருளும்;

''புலவி (ஊடல்) ஆகிய அலைவந்து மோதக், காதலியின் சிற்றடியாகிய அழகிய அணியினைத் தலைவன், தன் தலையிற் சூடுதலான் அப்புலவி நீக்கிக், கலவியாகிய கடலுள் துகிலைப் பற்றிச் சென்று, பற்களாகிய ஒளிமிகுந்த முத்தத்தின்

கட் பொருந்தி, தலைவியின் இதழ்களில் நிறைந்த நீராகிய மதுவைப் பருகி (அதர பானம் செய்து) மகிழும் தலைவனுக்கு, அம்பல வனது அருளையொத்து, என்றும் தளர்தல் இல் லாத முலைகள் சென்று பெறலாயின'' எனப் பிறிதொரு பொருளும் படப்'புலவி-கலவி-கலிங் கம்- முத்தம்-மது-தனம்' முதலிய சொற்கள், இரு பொருட்(சிலேடை) சிறப்புடன் அமைந்து, காமச் சுவை கனிந்து, எத்துணை அழகியதாய்த் திகழ்கின்றது! இதன்கண் அகப்பொருளும், அருட்பொருளும் ஒருங்கமைந்து விளங்குதல் காணலாம்.

சொற்பொருள் நுட்பங்கள்:

மேலும். தலைவன் தலைவியரது புணர்ச் சியின்கண் உள்ளமும் உடலும் உயிரும் உணர் வும் ஒன்றாகிக் கலத்தலின் அப்புணர்ச்சியைக் '**கலவி**' என்றும்; அக்கலவி இன்பத்தின் எல் லைக்குக் கரை காணாமையிற் '**கடல்**' என் றும்; கடலில் அலைபோலப் புணர்ச்சிக்கண் முன் நிகழ்வது புலவியாகலின் '**புலவித் திரை பொர**' என்றும்; புலவி நிகழ்ந்தவழித் தலை வன் தலைவியைப் பணிந்து நிற்றல், ''மனைவி உயர்வும் கிழவோன் பணிவும், நினையுங் காலைப் புலவியுள் உரிய'' என்று தொல்காப்பி யனார் கூறுதற்கேற்ப இயல்பாகலின், '**சீறடிப் பூங்கலம்** சென்னி உய்ப்ப' என்றும்; தலைவன் பணியவே தலைவி புலவி நீங்கப் புணர்ச்சி நிகழு மாகலின்,அதனைக் குறிப்பால் '**கலிங்கம்**(ஆடை நெகிழ்த்து) சென்றெய்தி' என்றும்; அது போழ்தத்துப்''பாலொடுதேன்கலந் தற்றேபணி மொழி வாலெயிறு ஊறியநீர்'' என்று வள்ளுவ னார் கூறுமாறு போல, இதழ்நீர் பருகல் இயல் பாகலின் 'கதிர் கொள்**முத்தம்** நிலவி, நிறை **மது** ஆர்ந்து' என்றும்; புணர்ச்சி நிகழுங்கால் 'சுவர்க்கவேதி' என்றும், 'சகஸ்ரவேதி' என்றும், விதந்து புகழ்ந்தோதப் பெறும் தனங்கள், போக நுகர்ச்சிக்குரிய துணைப் பொருளா கப் பொலிதலின், '**தனம்** சென்றெய்தலா யின' என்றும்; இங்ஙனம் காமச்சுவை கனியத் தொடுத்துரைப்பினும், கடவுளுணர்ச்சியைக் கலந்து புகுத்திப் பெருக்கச் ''சார்ந்தனன்சார்ந் தனன் சங்கிலி மென்தோள் தடமுலை, ஆர்ந் தனன் ஆர்ந்தனன் ஆமாத்தூர் ஐயன் அரு ளதே'' என்று சுந்தரர் கூறுமாறு போல, 'அம்பலத்தான் **அருள்**போன்று' என்றும்; மணி மொழியார் கூறும் திறம் எத்துணை அணிநலம் உடையதாய்த் திகழ்ந்தொளிர்கின்றது!

காமச்சுவை கனிந்ததாயினும், அருளுணர் வுடன் கலந்து சிறந்தொளிரும் அழகிய இப் பாடல்,

''பவழவாய் பரவை அல்குல்
என்றிவை பருகும் வேலான்,
கவழமார் களிற்றை ஒத்தான்!
காதலி கரும்பை ஒத்தாள்!
தவழ்மதுக் கோதை மாதர்
தாமரைப் பூவ தாக,
உமிழ்நகை வேலி னானும்
ஒண்சிறை மணிவண் டொத்தான்!''

எனவரும் சிந்தாமணிப் பாடல்கள்போல, வெளிப்படையாய் இடக்கர் அடக்கல் இன்றி இழிந்து செல்லாமல்,எத்துணை நுண்ணியதாக, மேம்பாடுடையதாக விளங்கித் திகழ்கின்றது!

ஞானப்பொருள்:

''உயிரென வியத்தல்' என்பது ஒரு துறை. இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியைக்கூடி இன்புற்றுப் பிரிந்து சென்ற தலைவன், பின்னர் மறுநாள் அப்பொழிலிடைப் போந்து அவளைக் கண்டு மகிழ்ந்து, தன்னுயிரென அவளை வியந்து கூறுதல் இதன் கருத்தாம். இக்கருத் தமைய,

''காணா மரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே!
யாஅம் காண்டுமெம் அரும்பெறல் உயிரே!
சொல்லும் ஆடும்! மென்மெல இயலும்!
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்,
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே!

எனப் பழம்பாடல் ஒன்று வரும். அதனைத் தழுவி, ''நேற்று அன்புடன் என்னைக் கூடிப் பின்னர், என்மனம் வருந்தப் பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்திற் சேர்ந்து, இன்பத்தைச் செய்தலின் அமிழ்தமாய், துன்பத்தைச் செய்த லின் அணங்காய், அரன்அம்பலம் போலும் ஒளியையுடையதாய், என் உள்ளத்தின் கண்ண தாய்ப், பெரிதும் வஞ்சனை யுடையதாய், இதோ என்னுயிர் வந்து நிற்கின்றது'' என்னும் பொருளமைய,

''நேயத்ததாய், நென்னல் என்னைப்
புணர்ந்து, நெஞ்சம் நெகப்போய்,
ஆயத்த தாய், அமிழ் தாய், அணங் காய்
அரன் அம்பலம் போல்
தேயத்த தாய், என்றன் சிந்தைய தாய்த்
தெரி யிற்பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றதென் மன்னுயிரே''

என்னும் அழகிய பாடலை மாணிக்கவாசகர் அருளிச் செய்கின்றார். தலைவன் தன் தலை வியை உயிரென வியத்தலாகவே அடிகள் இத னைப் பாடினர் போலத் தோன்றினும், ஊன்றி நோக்குவார்க்கு இறைவன் தமக்குச் செய்த திருவருளின் திறத்தினையே, சிறந்தெடுத்துப் பாடிப் பரவினராதல் தெளியப்படும்.

இதன்கண் ''என்பால் அருளுடையதாய், முன்னர்த் திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் வந்து என்னைக் கூடிப், பின்னர் என் உள்ளம் 'தீயில் வீழ்கிலேன் திண்வரை உருள்

கிலேன் செழுங்கடல் புகுவேனே' எனவருந்து மாறு பிரிந்து சென்று, தன் மெய்யடியார் கூட்டத்ததாய்,நினைக்குந்தொறும் அமிழ்தம் போல இன்பம் செய்து, கட்புலனாகாமையால் துன்பம் செய்து, தில்லையம்பலம் போலும் பல நல்ல தலங்களில் எழுந்தருளி என் மனத்தினும் நிலைபெற்று, இங்ஙனம் தான் ஒரு பொருளே பல பண்பும் செயலும் உடைமையின் வஞ்சனை மிக்கதாய், என் மன்னுயிராகிய முழு முதற் பெரும் பொருள், ஈண்டு வந்து தோன்றா நின்றது'' என இறையருட்டிறம் விளக்கும் பிறிதொரு பொருளும் அமைய, இப்பாடல் இயன்றுள்ளமை கண்டு கொள்க!

இங்ஙனமே, வேறு ஓர் இடத்தும் 'புனல் தரு புணர்ச்சி'யுரைத்துத் தோழிக்குக் குறை நேரும் தலைமகள் கூற்றாக,

''ஓங்கும் ஒருவிடம் உண்டு,அம்
பலத்தும்பர் உய்ய, அன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த்,
தழங் கும்அருவி
வீங்கும் சுனைப்புனல் வீழ்ந்து அன்று
அழுங்கப் பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கறி யேன்,
சிறி யேன் சொல்லும் வாசகமே''

எனவரும் பாடற்கண், அத்துறைக்குரிய பொருள் மட்டுமேயன்றிப் ''பிறவிக் கடலில் யான் விழுந்து கெடப்புகும் நிலையில், தாமே வலிந்து வந்து பிடித்தெடுத்து, அதனின்றும் என்னைக் காத்தருளிய பேருதவியாளராகிய இறைவனுக்குச் சிறியேனாகிய யான், நன்றியுரையாகச் சொல்வ தொன்றினையும் அறிகின்றிலேன்'' எனப் பிறிதும் ஒரு பொருள் படத், தம்மைப் பிறவிக் கடலின் வீழாமல் காப்பாற்றிய இறையருட் செய்தியினை விதந்துரைத்தல் கண்டு கொள்க!

''தணியனேன் பெரும்பிறவிப் பவ்வத்து, எவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு, பற்றுஒன்று
இன்றிக்,
கனியைநேர் துவர்வாயார் என்னும் காலாற்
கலக்குண்டு, காமவான் சுறவின் வாய்ப்பட்டு,
இனிஎன்னே உய்யுமாறு என்றுஎன்று எண்ணி,
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்
றேனை,
முனைவனே! முதல்அந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க
னேற்கே?''

எனவரும் திருவாசகப் பாடலைத் தழுவியே, இத் திருக்கோவையார் செய்யுள் அமைந்திருத்தல் ஒப்பிட்டுக் கருதி உணர்ந்து மகிழற்பாலது.

**கலையுணர்வும், கடவுளுணர்வும்:**

சங்ககாலப் புலவர்கள் கலையுணர்வுக் கண்கொண்டு பாடினராக, மாணிக்கவாசகர் இறையருளுணர்வுக் கண்கொண்டு பாடினர் என முன்னர்க் கூறினோம். அதனை இரண்டொரு சான்றுகளால் காண்போம்! சங்க காலப் புலவர்கள் கடல், மலை, காடு, வயல் முதலிய பலவற்றினையும் குறித்துப் பாடியுள்ளனர். நெய்தற்றிணை பற்றிப் பாடிய சங்கப் புலவர்கள் அனைவரும், கடலைப் பாடியுள்ளனர். அவர்களெல்லாம் கடலின் அலை, கழி, கடல் படுபொருள்கள், கடற்கரைக்கண் வாழும் பரதவர் வாழ்க்கை முதலியன குறித்தே, பாடிச் சென்றனர்! ஆனால் மாணிக்கவாசகரோ, கடலைப் பாடியினராயினும், அக்கடலையும் சிவமெனும் செம்பொருளாகவே கண்டு கருதிப் பாடினர்.

இச் செம்பொருட் காட்சி மாணிக்கவாசகர்க்குப் போலச் சங்கப் புலவர்க்குவாய்த்திலது ''கடலில் சங்குகள் உள்ளன. அவை முத்துக்களை ஈனுகின்றன. அவற்றைக் கழிவுகளின் வாயிலாக நாம் பெறுகின்றோம். கடலில் கங்கை முதலிய ஆறுகள் வந்து கலக்கின்றன. ஆரவாரம் மிக்க மரக்கலங்கள் இயங்குகின்றன. அத்தகைய இக்கடலானது தன்திருவடிக்கண் எமக்கு நிகழும் அன்பின் பற்றால், எமக்குக் கொடுக்கும் முத்தியினை யாம் பெறுமாறு, எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் வானத்தினையும் கடந்து நிற்கும் தான், ஒரு மானுட வடிவு கொண்டு எழுந்தருளிப் பொங்கும் புனற் கங்கையாற்றினைச் சடையிற் சூடி, ஆரவாரம் மிக்க பாறு (பருந்து, கழுகு) என்னும் பறவைகள் சூழ்கின்ற உயர்வு மிக்க தலையோட்டை ஏந்தும் சிவபெருமானை ஒத்துள்ளது''எனக் கடலைச் சிவபெருமானோடு ஒப்புடையதாகக் கண்டு, மென்மொழியும் வன்மொழியும் விரவக் கூறிய தோழிக்குத் தலைவி ''அறியாள் போன்று குறியாள் கூறல்'' ஆக.

''சங்கந் தரும்முத்தி யாம்பெற
வான்கழி தான்கெழுமிப்
பொங்கும் புனற்கங்கை தாங்கிப்
பொலிகலிப் பாறுலவு
துங்கம் மலிதலை ஏந்தலின்,
ஏந்திழை! தொல்லைப்பன்மா
வங்கம் மலிகலி நீர்,தில்லை
வானவன் நேர்வருமே''

எனப்பாடிய மணிமொழியாரது இறையருளுணர்வின் சிறப்பினை என்னென்போம்!

இங்ஙனமே, பெண்களின் கண்களைச் சங்ககாலப் புலவர்கள் முதல், இஞ்ஞான்றைக் கவிஞர்கள்வரை புனைந்து புகழ்ந்து பாடாதாரில்லை எனினும், ''தலைவியின் கண்கள் இறைவன்பால் தாம் வைத்த அன்புபோல அகன்றும், அவ்விறைவன் போக்கிய தம் தீவினைகளைப் போன்று கறுத்தும், தில்லையம்பலம் போன்று ஒளிமிகுந்தும், அப்பெருமான் தனது சிவந்த தோள்களில் அணியும் வெண்ணீற்றினைப்

போலச் செவ்வரி ஓடி வெண்மை மிக்கும், அவனது பூங்கழலின் 'பொருள் சேர்' புகழினைப் போல நீண்டும் உள்ளன'' (109)என்று, மணிமொழியார் கண்ணிற்கு இலக்கணம் காட்டிப் பாடியவாறு போல, அருளுணர்வு கலந்து பாடினோர் எவரேனும் உளரோ? இன்னோரன்ன கோவைத் திருப்பாடல்கள், ஆளுடைய அடிகளின் கலையுணர்வுவையும் அருளுணர்வையும் நலமுற விளக்கும் சான்றுகளாவனவாம்.

**சங்க நூற் பயிற்சி:**

மாணிக்கவாசகர் சங்க காலத்தை அடுத்துத் தோன்றியவர். சங்ககாலப்பண்பாட்டினை அழியாமற் காக்க விரும்பி முயன்றவர். அதற்காகவே காதலுணர்ச்சியோடு கடவுளுணர்ச்சியையும் ஒருங்கே பிணைத்துத் திருக்கோவையார் பாடினர் என முன்னர்க் கூறினமாதலின், அவர்தம் சங்கநூற் பயிற்சியின் பெற்றியினையும் இரண்டொரு சான்றுகளாற் காண்போம்.

**அகநானூறு:**

''பரத்தையர் சேரியினின்றும் போந்த தலைமகன், தன்பாற் புலவிகொண்ட தலைவியின்பால், 'நின்னை யன்றி' யான் பிறர் ஒருவரையும் அறியேன்' என்று பொய் கூறினானாக, 'இங்ஙனம் நீ பொய் கூறுவது எற்றுக்கு? இன்று காலை,யாவரும் விழையும் நம் பொலந்தொடிப் புதல்வன் தெருவில் தேர் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வழியே ஒருத்தி வந்தாள். வந்தவள், அவனோடு நின்னிடையுள்ள உருவ ஒப்புமைகள் பலவும் கண்டு களிகூர்ந்து, சுற்றுமுற்றும் பார்த்தாள். பின்னர்த் தன்னைக் காணுநர் யாரும் இலர் எனக் கருதி, அவனைக் 'குழந்தாய்! என்னுயிரே! வருக! 'என் என்று கூறி எடுத்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு, மிகவும் மகிழ்ந்து கொண்டிருந்தாள். அதுகாலைத் தற்செயலாக யான் குழந்தையைத் தேடிக்கொண்டு, அங்குச் செல்ல நேர்ந்தபோது, யான் அவளைக் கண்டேன்.

அவளும் என்னைக் கண்டுகொண்டாள். அதனால் அவள் நெஞ்சம் துணுக்குற்று, முகம் சிறிது மாறுபட்டு நாணி மயங்கி நின்றாள். காரணமின்றி என்னைக் கண்டு துணுக்குற்று நாணி மயங்கி நின்றமையின், 'அவள் யாவள்?' என நுண்ணிதின் ஓர்ந்து நோக்கித் தெளிந்து கொண்ட யான்,'குறுமகளே! ஏன் மயங்குகின்றாய்? நீ தானும் இவனுக்கு ஒரு தாயே ஆகற்பாலை. இங்கே வருக' என்று அவளை அழைத்தேன். அவளும் விரைந்தோடி வந்து என்னைத் தழுவிக்கொண்டு, களவுஉடம்படுநரிற் கவிழ்ந்து நிலங்கிளைத்து நாணி நின்றாள். அங்ஙனம் நின்ற அவளது நிலையும் இயல்பும் கண்டு, 'பொற்பும் கற்பும் மற்றும் பிற நற்பண்பும் உடைய இவள், நின் புதல்வனுக்குத் தாயாகும் முறைமையினளாதல் பொருத்தமுடையதேயாகும் என்று நினைத்து, உள்ளம் தெளிந்து மகிழ்ச்சியுற்று அவளை விரும்பிப் பாராட்டினேன். இவ்வாறு நினது பரத்தையை யான் நேரே கண்டறிந்து கொண்டுவிட்டேனாகவும், என்னிடம் நீ 'யான் யாரையும் அறியேன்' என்று பொய் கூறுவது எற்றுக்கு? என்னும் பொருளமைய, அகநானூற்றில் (16) சிறந்ததொரு பாடல் வருகின்றது. அதனையே அடியொற்றி முற்றிலும் தழுவி,

> ஐயுற வாய்நம் அகன்கடைக் கண்டு,
> வண்தேர்உருட்டும்
> மையுறு வாட்கண் மழவைத்
> தழுவ, மற் றுன்மகனே,
> மெய்யுற வாம்இதுன் இல்லே,
> வருகென வெல்கிச் சென்றாள்;
> மையுறு மான்மறி யோன்,
> புலி யூர்அன்ன காரிகையே''

எனத் திருக்கோவையாரின்கண் வரும் அழகிய அரும்பாடல், மாணிக்கவாசகரது சங்கநூற் பயிற்சியின் மேன்மையினையும் ஈடுபாட்டினையும் இனிது விளக்கும் சான்றாக நிலைபெறும்.

**கலித்தொகை:**

இஃதொன்றோ! தலைவனுடன் உடன் போக்குச் சென்ற தலைவியைத் தேடிக் கொண் செல்லும் செவிலித்தாய், சுர நெறியில் முக்கோற் பகவரை எதிர்ப்பட்டு, ''எறிக்கும் வெயிலினை மறைக்கும்குடையினை ஏந்திக்கொண்டு, அதன் நிழலில் ,கரகத்தையும் முக்கோலையும் தோளிலே வைத்துக்கொண்டு,புலனடக்கமுடையவராய் இறைவனையே நினைத்து செல்லும் இயல்பான ஒழுக்கமுடைய அந்தணர்களே! கொடிய இக்காட்டு நெறியிற் செல்லும் நீவிர், இவ்வழியே என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் அயலவர் அறியாமல் தம்மிற்றாமே கூடினவராய், இதுபொழுது அதனைப் பிறர் அறிந்துகொள்ளும் நிலையினராய், உடன்போக்கிற் சென்றனர். அத்தகையவர் இருவரை நீவிர் கண்டனிரோ!'' என வினவ, ''காணாதிருந்தேம் அல்லேம்; கண்டனம்! இக்காட்டில் ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய மாணிழை மடவரலுக்கு, நீர் தாய்போலக் காணப்படுகின்றீர்!

மலையிலே பிறக்கும் சந்தனம், பூசிக் கொள்பவர்களுக்கு அல்லது அம்மலைக்கு என்ன பயனைத் தரும்? நீரிலே பிறக்கும் வெண்முத்தும், மாலையாகத் தொடுத்து அணிந்து கொள்பவர்களுக்கல்லது அந்நீருக்கு என்ன நன்மையைச் செய்யும்? யாழிற் பிறக்கும் எழுநிலை இன்னிசை ,அதை எழுப்புவார்க்கும் கேட்பார்க்கும் பயனளிப்பதன்றி, அவ்யாழுக்கு யாது நலனை அளிக்கும்? அதுபோல நும்மகளும் பயன்படும் பருவத்தில் நுமக்குப் பயன்படாள்.ஆதலால் மிகுந்தகற்பினையுடைய அவள் பொருட்டுத் துன்புற்றுக் கவலை எய்துதல் வேண்டா. அவள் தன் தாய் தந்தையரினும் சிறந்த கணவனை வழிபட்டு அவன்

பின்னே சென்றனள். அவளது செயல் இம்மைக்கும் மறுமைக்கும் நலம் பயப்பதேயாகும்'' என முக்கோற் பகவர் மொழிவதாக, ஓர் அழகிய இனிய பாடல் (9), கலித்தொகையின்கண் வருகின்றது. அப்பாடலின் சொற்பொருட் சுவைநலங்களில் ஈடுபட்டு மகிழ்ந்து,

''சுரும்பிவர் சந்தும், தொடுகடல்
முத்தும், வெண்சங்கும் எங்கும்
விரும்பினர் பாற்சென்று மெய்க்கணியாம்;
வியன் கங்கைஎன்னும்
பெரும்புனல் குடும் பிரான், சிவன்
சிற்றம் பலம் அனைய
கரும்பன மென்மொழி யாரும்
அந் நீர்மையர் காணுநர்க்கே''

என மணிவாசகர் பாடியுள்ளமை கண்டு கொள்க! மற்றும், இக்கலித்தொகைப் பாடலினையே அடிப்படையாகக் கொண்டு, திருக்கோவையாரில் அதனை 241 முதல் 249 வரையுள்ள எட்டுப் பாடல்களாக விரித்துரைத்து நம்மை மகிழ்விக்கின்றார் மாணிக்கவாசகர் பெருமான்!

**சிலப்பதிகாரம்:**

இனி, சிலப்பதிகாரத்திற் சுவையெலாம் திரண்டு கனிந்து, இனிமை நிரம்பித் துளும்பி வழியும் பகுதி, கானல்வரி என்பதாகும். அப்பகுதியில் உள்ளம் உருக்கும் இசைநலமும், அகத்திணைப் பொருட்டுறைவளமும், செந்தமிழ்ச் சொல்லழகும் பிறவும் பெரிதும் பொங்கித் ததும்பிப் பொலிகின்றன. கலையுள்ளம் படைத்துக் கவிதைநலம் காணும் இயல்பினர்க்கு இதனிற் சிறந்த ஈடுபாடு, வேறு பிறிதெதன் கண்ணும் நிகழ்தல் இல்லை. இந்தக் கானல்வரிப் பகுதியில், தலைவனுக்குத் தலைமகளை மணம்புணர்விக்க உடன்பட்ட தோழி, தலைவியின்பாற் போந்து, தலைவன் அவளைக் காதலிக்குமாற்றையும், அது கைகூடாதொழியின் ஒருகால் அவன் பித்துற்று உயிர் துறப்பனோ என்னும்தன் ஐயவுணர்வையும் எடுத்துக் கூறி, அவளைத் தலைவனை மணக்குமாறு வற்புறுத்தும் முறையில், ''வலிதாகச்சொல்லிக் குறை நயப்பித்தது'' என்னும் துறையில்,

''புணர்துணையோ டாடும்
பொறியலவன் நோக்கி
இணர்ததையும் பூங்கானல்,
என்னையும் நோக்கி,
உணர்வொழியப் போன
ஒலிதிரைநீர்ச் சேர்ப்பன்,
வணர்சுரி ஐம்பாலோய்!
வண்ணம் உணரேனால்!''

என அழகியதொரு பாடல் வருகின்றது. ''வளைந்து கடைகுழன்ற கூந்தலையுடைய தலைவியே! நேற்று நம்கானற்சோலையிடத்தே நலம்பலவும் சிறந்த ஆண்மகன் ஒருவன் போந்தான். போந்த அவன் தன் துணையோடு பொருந்தி விளையாடும் நண்டொன்றினை உற்று நோக்கினான், அதனை நோக்கிக் கொண்டே என்னையும் உற்று நோக்கினான். அவன் 'நோக்கிய நோக்கம்' மிக எளிய இந் நண்டுகள் தாமும், தம்முள் ஒன்றனை ஒன்று விரும்பிப் புணர்ந்து இன்புறாநிற்க, நமக்கு இது கைகூடிற்றிலையே எனவும்; நண்டு தன் துணையோடு ஆடுதல் போல, யானும் தலைவியோடு கூடி இன்புறுமாறு நீயே அவளை என்னோடு சேர்ப்பித்தல் வேண்டும் எனவும் கூறும் குறிப்புப் போலத் தோன்றியது. அங்ஙனம் பல குறிப்புப்பட நோக்கிய அவன், சிறிது பொழுது கழிந்ததும், தன்னுணர்வு தன்னை நீங்க, மிகவும் வருந்திச் சென்றனன். சென்ற அவன், பின்னர் என்னாயினனோ? அதனை யான் அறிகின்றிலேன். அத்தகைய காதலர்க்கு அருள் செய்யா திருத்தல் நமக்குத் தகவன்று. செய்யாதொழியின், அவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளவும் கூடும்' என்பது அதன் பொருள். இப்பாடலைப் பலகாலும் சுவைத்து மகிழ்ந்ததன் பயனாகவே போலும், நமது வாதவூரடிகள்,

நீகண் டனைஎனின் வாழலை,
நேரிழை அம்பலத்தான்!
சேய்கண் டனையன், சென் றாங்கோர்
அலவன்தன் சீர்ப்படையின்
வாய், வண் டனையதொர் நாவற்கனி
நனி நல்கக்கண்டு
பேய்கண் டனைய தொன்றாகிநின்றான்
அப் பெருந்தகையே''

எனத் திருச்சிற்றம்பலக் கோவையாரின்கண் அருளிச் செய்தனராகல் வேண்டும்! 'புணர் துணையொடாடும் பொறியலவன் நோக்கி' என்றதனை 'ஓர் அலவன் தன் சீர்ப்பெடையின் வாய் நாவற்கனி நல்கக் கண்டு' என்றும்; 'என்னையும் நோக்கி' என்றதனை ஓராற்றால் தழீஇ 'நீ கண்டனை எனின் வாழலை' என்றும்; 'ஒலிதிரை நீர்ச் சேர்ப்பன்' என்றதனை 'அம்பலத்தான் சேய் கண்டனையன், பெருந்தகை' என்றும்; 'உணர்வு ஒழியப் போனான்' என்றதனை 'பேய்கண்டனைய தொன்றாகி நின்றான்' என்றும்; மணிவாசகர் அமைத்திருக்கும் அருமை அறிஞர்கட்கு ஆராப் பெருவிருந்தாகற்பாலது''
''அகலிலை நாவல் ஒண்துறை யுதிர்ந்த, கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டு, தன் தாழை வேரளைவீழ் துணைக்கு இடூஉம் அலவன்'' (அகம் 280) எனவும் பிறவாறும் வரும் சங்கநூற் பகுதிகளும் ஈண்டு அறிந்து மகிழற் பாலன.

இங்ஙனமே, தொல்காப்பியம்-திருக்குறள்-இறையனார்களவியலுரை - குறுந்தொகை - நெடுந்தொகை - நற்றிணை முதலிய சங்கநூற் சொற்பொருட் சுவைநலங்களையெல்லாம், கற்றுணர்ந்து ஈடுபட்டுத் திளைத்து மகிழ்ந்து, அவை தம்மைத் தழுவித் தம்நூலினை மணி

வாசகர் அழகுற யாத்திருக்கும் திறம், நம்ம னோர்க்குப் பயில்தொறும் கழிபெருங் களிப் பூட்டா நிற்கும். இவ்வாற்றால் அடிகளின் சங்க நூற் பயிற்சியினை ஒருவாறு உணர்ந்து கொள்க!

**உள்ளுறைப் பொருள்நலம்:**

சங்க நூல்களின் சிறப்பியல்புகளில், அவற் றின் உள்ளுறைப் 'பொருள்நலமும் ஒன்றாகும். உள்ளுறை யமைத்துப் பாடுதலில், நுண்மாண் நுழைபுலம் மீக்க சங்ககாலச் சான்றோர்களைப் போலப், பிற்காலப் புலவர்கள் திறமை பெற்றி லர். பிற்காலப் புலவர்களின் பாடல்களில் உள் ளுறைப் பொருள்நலம் காண்டல் பெரிதும் அரிதேயாம். தம் பாடல்களில் உள்ளுறைப் பொருள்நலம் செறியப்படும் கவிதைத் திறம், சங்க காலப் புலவர்களோடு பெரும் பாலும் மறைந்து விட்டதென்று கூறுதல் தவறாகாது! ஆனால், நம் மணிவாசகரோ சங்க காலப் புல வர்களோடொப்ப உள்ளுறை யமைத்துப் பாட வல்ல கவிதைத் திறம் மிக்க நல்லிசைப் புலவ ராவர்!

பொருள்வயிற் பிரிந்து ஒருவழித் தணந்த தலைமகன் வரவும்வரைவும் நீட்டிப்ப, ஆற்றா ளாய தலைவி, ''நீ தலைவன் வாராமைக்காக வருந்தற்க: வருந்துதியாயின், அது பிறர் ஐயுறு தற்கு ஏதுவாகித் தீங்கு பயக்கும் என்றுஆறுதல் கூறிய தோழியை நோக்கி, 'தலைவனைப் பிரிந் தும் மனம் வருந்தாமல் 'அரிதாற்றி அல்லல் நோய் நீக்கிப் பிரிவாற்றிப் பின்னிருந்து வாழ் வார் பலர்'. ஆனால் யானோ அது பெறுமா றில்லை. தலைவனது பிரிவை இமைப்பொழுதும் ஆற்றியிருத்தற்கு என்னால் இயல்கின்றிலதே! யான் என் செய்வேன்! இஃதறியாது என்னை ஆற்றியிரு என்று நீ தேற்றுரை புகல்வது, 'உருள்கின்ற மணிவட்டைக் குணில் கொண்டு துரந்ததுபோல்', எனக்கு மேலும் மிக ஆற் றாமையினையே விளைவிக்கின்றது'' எனமாறு கூறுதலாக வருகின்ற,

வந்தாய் பவரைஇல் லாமயில்
முட்டை, இளையமந்தி
பந்தா டிரும்பொழிற் பல்வரை
நாடன்பண் போஇனிதே!
கொந்தார் நறுங்கொன்றைக் கூத்தன்தென்
தில்லை தொழார் குழுப்போற்,
சிந்தா குலமுற்றுப் பற்றின்றி,
நையும் திருவினர்க்கே

என்னும் அரிய திருப்பாடலில் அமைந்துள்ள உள்ளுறைப் பொருள்நலம், கலையறிஞர்க்குக் கழிபெருவிருந்தாகும்.

இதன்கண், தலைவனது மலை நாட்டின் இயல்பினைக் கூறுவாள்போல, எத்துணை அழ குறத் தோழியின் வன்புறைக்கு எதிரழிந்து இரங்குகின்றாள் தலைவி! ''தோழியே! நின் செயல், நம் தலைவனின் மலைநாட்டில் மயில் கள் இடும் முட்டைகள், அவற்றால் அடைகாக் கப் பெறாது, பாறைகளின்மேல் தனித்துக் கிடப்ப ,மயிலின் ஈன்ற வருத்தமும், முட்டை யின் மென்மையும் அறியாத இளங்குரங்குக் குட்டிகள், அவற்றைக் கொண்டு பந்தாடுதல் போன்றன்றோ உளது?'' என்னும் குறிப்பமையப் பேசுகின்றாள். மயில் தலைவனாகவும்,முட்டை தலைவியாகிய தானாகவும் ,முட்டை அடை காக்கப் பெறாது தனித்துக் கிடத்தல் தலைவ னால் தண்ணளி செய்யப் பெறாது தான் வருந் துதலையும், இளமந்தி தோழியாகவும், அது பந்தாடுதல், தோழி தேற்றுதலும் அயலார் அலர் தூற்றுதலுமாகவும், பொருத்தமுற இயைத்து,உள்ளுறைப் பொருள்நலம் செறியத் தலைவியின் கூற்றில் வைத்துப் பாடிய மணிமொழியாரின் அணிதிகழ் இப்பாடல்.

''கான மஞ்ஞை அறைஈன் முட்டை
வெயிலாடு முசுவின் குருளை உருட்டும்
குன்ற நாடன் கேண்மை, என்றும்
நன்றுமன்! வாழி தோழி! உண்கண்
நீரொடு ஓராங்குத் தணப்ப,
உள்ளா தாற்றல் வல்லுவோர்க்கே''

எனவரும் குறுந்தொகைச் செய்யுளோடு ஒப்பு நோக்கி உணர்ந்து மகிழற்பாலது. இங் ஙனம் திருக்கோவையாரிற் சுவைகெழும வரும் உள்ளுறைப் பொருள் அமைந்த இனிய செய் யுட்கள் பலப்பல.

**முடிவுரை:**

இதுகாறும் கூறி வந்தவாற்றால், மாணிக்கவாசகரது திருவாசகம் போலத் திருக் கோவையாரும், ஒரு சிறந்த தெய்விகப் புனித நூல் என்பதும்; பலபெருஞ்சான்றோர்கள் தொன்னெடுங் காலமாக வழிவழியே, தம் உயிரினும் இனிய விழுமிய நூலாக அதனைப் போற்றிவந்துள்ளனர் என்பதும்; அதற்கேற்பக் குமரகுருபர அடிகள் அதன் சிறப்பினை ஆராய்ந்து வியந்து, ''காமம் சான்ற ஞானப் பனுவல்'' என்று போற்றிப் புகழ்ந்தமை பெரி தும் பொருத்தமாம் என்பதும்; தூய காமச் சுவை மலிந்து, ஞானப்பொருள் நிறைந்த இந் நூலை யாத்த மாணிக்கவாசகரின் குறிக்கோள் இது என்பதும்; அவர் சங்க நூற் பயிற்சியில் ஈடுபட்டுத் திளைத்து இன்புற்றவர் என்பதும்; சங்கநூல் வளங்களெல்லாம் திருக்கோவை யாரின்கண் விளங்கித் திகழ்கின்றன என்பதும்; பன்னிரு திருமுறைகளுள் பழுதற்ற உரை பெற் றதாக,இந்நூலுக்கு ஒரு பெருமை தந்த பேரா சிரியரின் உரைநலங்கள் இவை என்பதும்; ஒரு வாறு இயன்ற பெற்றி விளக்கப்பெற்றன. இத் தகைய தெய்விகப் புனிதச் செந்தமிழ் அமிழ்தக் கவிதைத் திருநூலைப் பலகாலும் ஓதிப்பயின்று, மக்களெல்லாம் இன்புற்று நலமெய்துக என வேண்டி, இறையருளை வாழ்த்தி அமைகின் றேன். செந்தமிழ் வெல்க! சிவநெறி செழிக்க!

# சிந்தனைக்கு நான்கு திருக்குறள்கள்

முத்தமிழ்க் காவலர்,
திரு டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், அவர்கள்,
D. Litt.

1 அப்பற்றைப் பற்றுக:

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

இதுவரை இக்குறளுக்குப் பொருள் கூற வந்தவர்கள் அனைவரும், ''இவ்வுலகப் பற்றை விடுவதற்கு இறைவனுடைய பற்றைப் பற்றுக'' என்றே கூறி இருக்கிறார்கள். இது பொருந்தவில்லை. இவ்வுரை உண்மையாகுமானால் குறள் அடியிற்கண்டவாறு இருப்பதே போதுமானது. அது,

''பற்றுக பற்றற்றான் பற்றினை,
பற்றுவிடற்கு''

என்பதே. குறளில் ''அப்பற்றைப் பற்றுக'' என்று மேலும் இரு பற்றுகள் காணப்படுகின்றன. அவற்றின் பொருள் யாதுஎனச் சிந்தனை செய்தாக வேண்டும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை'' என்று கூறிவிட்டு, மறுபடியும் அதையே திருப்பி ''அப்பற்றைப் பற்றுக'' என்று வள்ளுவர் கூறியிருக்கிறார் எனப் பொருள் காண்பது வள்ளுவருக்குப் பெருமை தராது. அது ''கூறியது கூறல்'' என்ற குற்றத்தின் பாற்படும். குறளில் அவ்விதம் காண்பதாகக் கூறுவது உண்மையைக் காண விரும்பாதவர்களின் கூற்றாக இருக்குமே தவிர, உண்மையாக இராது.

பரிமேலழகரும், அவரைத் தழுவிய பிறரும் எடுத்த எடுப்பிலேயே செய்த தவறெல்லாம் ''பற்றற்றான்'' என்பதற்கு ''இறைவன்'' என்று பொருள் கண்டதே யாகும். அதன் பொருள் ''இறைவன்'' அல்ல. ''துறவி'' என்பதே.

''இவ்வுலகப் பற்றைத் துறந்த துறவியை முதலில் பற்று. பிறகு அவன் பற்றியிருக்கிற இறைப்பற்றைப் பற்று. அப்போது இவ்வுலகப் பற்று எளிதில் விடும்'' என்பது, இக்குறளில் புதைந்து கிடக்கும் பொருளாகும். இப்பொருள் தான் சரி என்பதற்கு நமக்குக் கிடைத்த புறச் சமய நூல்களும் ஞானாசிரியனைப் பற்றியே இறைவனைப் பற்ற வேண்டும் எனக் கூறி இருப்பதேயாகும்.

பின் கிடைத்த அகச் சான்றுகள் இரண்டு.
1. இக்குறள், கடவுள் வாழ்த்தில் கூறப்பெற்ற ஒன்றல்ல. ஆகவே பற்றற்றான் என்பதற்கு ''இறைவன்'' என்ற பொருள் பொருந்தாது.
2. இக்குறள் ''துறவு'' என்ற தலைப்பிலேயே கூறப்பெற்றுள்ளது. ஆகவே பற்றற்றான் என்பது துறவியையே குறிக்கும்.

''துறவு'' என்ற தலைப்பில் இதனுடன் உள்ள மற்ற ஒன்பது குறள்களும் துறவியைப் பற்றியே கூறியிருக்கும்பொழுது இக்குறளை மட்டும் கடவுளைப் பற்றிக் கூறியிருப்பதாக எண்ணிய எண்ணமே தவறான பொருளைக் காண்பதற்கும், ''அப்பற்றைப் பற்றுக'' என்பதற்குப் பொருள்கூற முடியாமற் போனதற்குக் காரணமாயிற்று. ஆகவே ''பற்றற்ற துறவியைப் பற்று, பின் அவன் பற்றியிருக்கும் இறைப் பற்றைக் பற்று. அப்போது உலகப் பற்று எளிதில் விடும்'' என்ற பொருளே இதன் உண்மையான பொருள் எனக் கொள்ளலாம்.

குறளை மறுபடியும் படியுங்கள். இப்போது அதன் புதை பொருள் நன்கு விளங்கும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்
பற்றுக பற்று விடற்கு'' [பற்றைப்

2. உடுக்கை இழந்தவன்:

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்பது ஒரு குறள். இதன் பொருள்: ஆடை நழுவியபோது மனிதன் தன் கைகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ளுவதில்லை. அவன்

கேளாமலேயே அவனது கைகள் விரைந்து சென்று நழுவிய ஆடையைப் பிடித்து இடையில் கட்டி விடுகின்றன. அதுபோல, ''நண்பனுக்கு இடையூறு ஏற்பட்டபொழுது அவன் கேளா மலேயே வலியச் சென்று, அவனது இடரைப் போக்கி உதவி செய்ய வேண்டும்'' என்பதாம்.

பரிமேலழகரும் பிறரும் இவ்வாறே பொருள் கண்டிருக்கிறார்கள். கருத்தில் பெரும் பிழை இல்லை எனினும் பொருளிற் பெரும் பிழை காணப்படுகிறது. ''இழந்த ''என்ற சொல்லிற்கு ''நழுவிய'' என்று பொருள் கண்ட வர் எவ்வளவு பெரியவராயினும் அவர் தவறு செய்தவரேயாவர். உண்மையில் ''இழந்த '' என்பதற்குப் 'பறிகொடுத்த' என்பதேபொருள். இழவு, இழப்பு, இழத்தல் என்பனவும் இப் பொருளையே குறிப்பனவாகும்.

''ஆடையைப் பறி கொடுத்தவனுடைய கை அவன் கேளாமலேயே விரைந்து சென்று மூடி மறைத்து மானங் காப்பதுபோல, நண் பனது துன்பங்களையும் அவன் கேட்கும் முன்பே விரைந்து சென்று போக்குவதே சிறப்பு'' என் பதே இக்குறளின் உண்மையான பொருளா கும்.

பரிமேலழகரின் பொருளை வைத்துக் கொண்டால் மூலத்தில் உள்ள ''உடுக்கை இழந்த'' என்பதை ''உடுக்கை இழிந்த'' என்று திருத்தியாகவேண்டும். மூலத்தை அப்படியே வைத்துக் கொண்டால் பொருளை ''நழுவிய'' என்பதற்கு மாறாகப் ''பறிகொடுத்த'' என்று திருத்தியாக வேண்டும்.

''இழந்த'' என்று மூலத்தில் இருக்கும் பொழுது அதற்கு ''நழுவிய'' என்று பொருள் காண்பதும், ''இழந்த'' என்ற சொல்லிற்கும், ''இழிந்த'' என்ற சொல்லிற்கும் உள்ள வேற் றுமையை வள்ளுவர் அறியார் எனறு கருதுவ தும் பெரும் பிழையாகும்.

''நழுவிய'' என்பதனைக் குறிப்பிட நேர்ந்த பொழுதெல்லாம் வள்ளுவர் அதனை இழிந்த என்ற சொல்லினைக் கொண்டே விளக்கி இருப்பதைக் கண்டு மகிழுங்கள். அது

''தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்த கடை''

என்பதாம். ஆகவே இழந்த என்ற சொல்லிற்கு நழுவிய என்று பொருள்காணாமல் ''பறி கொடுத்த'' என்று பொருள் காண்பதே உண் மையான தாக இருக்கும்.

### 3. தினற் பொருட்டாற் கொல்லாது:

''தினற்பொருட்டாற் கொல்லாது உலகெனின்
விலைப்பொருட்டால் ஊன்தருவா ரில்'' [யாரும்

என்பது ஒரு குறள். இதன் பொருள்: தின்பது காரணமாக உலக மக்கள் கொல்லவில்லையா னால், பொருள் காரணமாக ஊனை விற்பவர் எவரும் இல்லை என்பது பரிமேலழகரின் கருத்து. மகாவித்துவான் மு.அருணாசலக் கவி ராயா அவர்களும், பேராசிரியர் கா.சுப்பிர மணியப்பிள்ளை அவர்களும், பிறரும் தாங்கள் பதிப்பித்த பதிப்புகளில் இவ்வுரையை அப்ப டியே பொழிப்புரையாக்கிப் பதிப்பித்திருக்கி றார்கள்.

மூலத்திற்கும் உரைக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? என்பதைத் தயவு செய்து அமைதியாக இருந்து எண்ணிப் பார்ப்பது நல் லது. ''தின்பதற்காக'' என்று உலக மக்கள் கொல்லாதிருந்தால் என மூலத்தில் இருக்கும் போது பரிமேலழகரும் பிறரும் தின்பதற்காக உலக மக்கள் வாங்காதிருந்தால் என்று கருதும் படி உரை எழுதுவானேன் என்பது,நமது ஐயப் பாடு.

குறளுக்கு உள்ள நேரான உரை இது: ''தின்பதற்காக என்று உலகமக்கள் கொல்லுவ தில்லையானால் விலைபெற்று ஊன்தருபவர் எவரும் இருக்கமாட்டார்கள் என்பதே இவ் வுரை நேரானதே எனினும் கருத்தில் பிழை''. காணப்படுவதைக் காணுங்கள். அதாவது தின் பதற்காகக் கொல்லுகின்ற எவனும் வேறு எவனுக்கும் விலை கொடுக்க வேண்டியிராது. அவனே கொன்று தின்பான். கொன்று தின்ப வனிடம் சும்மாவிருப்பவன் விலை கேட்க முடி யாது. கொடுப்பதற்கு அவனிடம் ஊனும் இராது. ஆகவே இவ்வுரையும், குறளும் குழப் பத்தை விளைவிக்கின்றன. ஆகவே உண்மை தான் என்ன? என ஆராய வேண்டியிருக்கிறது.

முதன் முதலில்,ஏடு எழுதியவரோ, அச்சுக் கோப்பவரோ, பதிப்பித்தவரோ செய்த சிறு பிழையே இக்குழப்பத்திற்கெல்லாம் காரண மாயிற்று. ''கொல்லா'' என்பது தவறு. ''கொள்ளா ''என்பதே சரியான பாடம் ஆகும். இப்போது கொல்லா என்பதைக் கொள்ளா எனத் திருத்தி மூலத்தைப் படித்துப்பாருங்கள். இக் குழப்படிகள் அனைத்தும் ஒழிந்து வெளிப் படையாகப் பொருளைக் காண்பீர்கள்.

''தின்பதற்காக வாங்குபவர்கள் இல்லை யானால் பொருளுக்காகக் கொன்று விற்பவர் எவரும் இரார்'' என்பதே வள்ளுவரின் குறளும் அவரது கருத்துமாகும். ''கொல்லுவதுதான் பாவம். கொன்றதைத் தின்பது பாவமில்லை'' என்பாரது கூற்றை வள்ளுவர் இக்குறளின் மூலம் மறுத்திருப்பதைக் கண்டு மகிழுங்கள்.

### 4. செயற்கரிய செய்வார் :

''செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்''

என்பது ஒரு குறள். பெரியவர்கள் பிறரால் செய்தற்கு அரிய காரியங்களைச் செய்வார்கள். சிறியவர்கள் அத்தகைய அரிய காரியங்களைச் செய்யமாட்டார்கள் என்பது, இதன் பொரு ளாகும். இதுவரை எல்லோராலும் இவ்வாறே

பொருள் கூறப்பெற்று வந்துள்ளது. அவ்வித மாயினும் இது மிகைபடக் கூறியதாகமுடியும்.

''செய்தற்கு அருமையான காரியங்களைச் செய்பவர்களே பெரியவர்கள்'' என்று கூறி விட்டபொழுதே ''சிறியவர்கள் அவ்வாறு செய்யமுடியாதவர்கள்'' என்று தோன்றுகிறது. மறுபடியும் ''சிறியர் செயற்கரிய செய்யார்'' என்று கூறியிருக்க வேண்டியதில்லை அல்லவா?

வள்ளுவர் அதனை மறுபடியும் வற்புறுத்திக் கூறவே அவ்வாறு கூறியுள்ளார் என்று கருதுவதும், கூறுவதும் வள்ளுவருக்குப் பெருமை அளிப்பதாக இல்லை. ஆகவே அதன் உண்மைப் பொருளை அறிய வேண்டியிருக்கிறது.

ஏடு எடுத்து எழுதியவர்களின் அவசரப் புத்தியும், கறையான்களின் வயிற்றுப் பசியும் ஒன்றாய்க் கலந்து தமிழ்ச் சுவடிகளில் பல பிழைகளை உண்டாக்கியிருக்கின்றன. அவற்றுள் ஒன்று இதுவும்.

இக்குறளில் ''கு'' என்ற எழுத்தை ''க'' என்று அச்சிட்டதே உண்மையை உணரவொட்டாமல் செய்துவிட்டது. ஈற்றடியில் உள்ள க-வை ''கு'' என்று திருத்தினால், குறள் முன் உள்ளது போன்று செயற்குரிய என்று சரியாகக் காணப்படும். அப்போது:

''பெரியவர்கள் பிறரால் செய்வதற்கு முடியாத அரும்பெருங் காரியங்களைச் செய்வார்கள். ஆனால், சிறியவர்களோ எளிதில் செய்யக்கூடிய சிறிய காரியங்களைக் கூடச் செய்யமாட்டார்கள்'' என்பதாகும். ''கு'' என்ற எழுத்து உடைந்து ''க'' வாகத் தோன்றியதன் விளைவே மேலேகண்ட பிழைக்குக் காரணமாயிற்று.

இதுவரையிற் பதிப்பித்த குறள்களை அடுத்த பதிப்பாகப் பதிப்பிக்கும்போது தமிழகப் பேரறிஞர்கள் ஒப்பினால், இத் திருத்தங்களைச் செய்யலாம். மாணவர்கள் திருக்குறளைப் படிக்கும் பொழுது கருத்தூன்றிப் படித்தால் அதன் அரும் பொருள்களை எளிதில் அறியலாம் என நம்புகிறேன்.

---

## தென்காசிக் கோயிற் கல்வெட்டுப் பாடல்கள்

''மனத்தால், வகுக்கவும் எட்டாத கோயில் வகுக்க முன்னின்று
எனைத்தான் பணிகொண்ட நாதன் தென்காசியை, என்றும்மண்மேல்
நினைத்தாதரஞ் செய்து தங்காவல் பூண்ட நிருபர் பதந்
தனைத்தாழ்ந் திறைஞ்சித் தலைமீதில் யானும் தரித்தனனே'' (1)

''ஆராயினும் இந்தத் தென்காசி மேவும் பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது அங்கு வந்ததனை
நேராகவே யொழித்துப் புரப் பார்களை நீதியுடன்
பாரார் அறியப் பணிந்தேன் பராக்கிரம பாண்டியனே'' (2)

''அரிகேசரிமன் பராக்கிரம மாறன் அரனருளால்
பரிசேர் பொழிலணி தென்காசிக் கோயில் வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத் தேன்; அன்பு பூண்டிதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம் என் சென்னியதே'' (3)

''சாத்திரம் பார்த்திங்குயான் கண்ட பூசைகள் தாம் நடாத்தி
ஏத்தி அன்பால் விசுவநாதன் பொற்கோயில் என்றும் புரக்கப்
பார்த்திபன் கொற்கைப் பராக்கிரம மாறன், பரிவுடன் நம்
கோத்திரந் தன்னிலுள் ளார்க்கும் அடைக்கலங் கூறினனே'' (4)

—அரிகேசரி பராக்கிரம பாண்டியன்
(கி.பி. 1411-1463)

# ஆகமத்தில் சொல்லப்பட்ட பொருள்

திரு. மு. அருணாசலம்

ஆகமங்கள், சாஸ்திர புத்தகங்கள் ஆகியவற்றைப் பயின்றால், முத்தி விருப்பன் உலகியல்பையும், படைக்கப்பட்ட பொருள்களின் இயல்பையும் அறிவான். தனது உண்மை நிலையையும் உணர்வான். உயிர் சடப்பொருளோடு பந்திக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருந்தாலும், பரம்பொருளோடு ஒன்றுவதற்காகப் பந்தங்களிலிருந்து விடுதலையடைந்து அந்த ஐக்கியம் பெற முயல முடியும். அப்பரம்பொருளின் அருளால், அதை உணர்ந்து அதனோடு ஐக்கியமடையவும் முடியும். ஆன்ம நெறியில் வளர்ச்சி பெற்ற, அதாவது ஞானத்தால் முதிர்ச்சிபெற்ற ஆன்மாக்களுக்குச் சதாசிவன் ஆகமங்களை அருளினார். மனிதப் பிறவியடைந்து பிறப்பு இறப்பு என்ற சம்சாரத்தில் உழன்று கொண்டிருக்கும் உயிர்கள் விடுதலை பெறுவதற்கான மார்க்கம், அவ்வாகமங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த மார்க்கத்தைத் தமிழில் சித்தாந்த சாத்திரம் செய்த ஆசாரியார்களும் ஆசிரியர்களும், சரியை கிரியை யோகம் ஞானம் என்ற முறையில் விளக்கியுரைத்திருக்கிறார்கள். இந்த நான்கு பாதங்களையும் ஆகமங்கள் விளக்கியிருக்கின்றன. அவைசொல்லும் முறை ஞானம் கிரியை யோகம் சரியை என்ற வரிசை. ஞான பாதம், வித்தியாபாதம் என்று இங்கு சொல்லப்படுகிறது. இவற்றுள் வித்தியாபாதம் என்பதே ஆகமம் கூறும் சைவசித்தாந்த மெய்ப்பொருளை உள்ளடக்கியது. மற்ற மூன்றும் இதற்கான சாதனை என்றே சொல்லலாம்.

ஆதியில் எல்லா ஆகமங்களும் நாற்பாதமும் உடையனவாய்ச்சொல்லப்பட்டிருப்பினும், இன்று அவை முழுவதும் நமக்குக் கிடைக்கவில்லை. காலந்தோறும் ஏற்பட்ட கொந்தளிப்புக்களால் பெரும்பகுதி அழிந்து போய்விட்டது என்று நாம் அஞ்ச வேண்டியயிருக்கிறது. இன்று முழுமையாக நமக்குக் கிடைப்பன (நான்கு பாதமும்) பின் வருவன.

மூலாகமங்களில்: மதங்க பாரமேச்வரம், சுப்ரபேதம், கிரணம். உபாகமங்களில்: மிருகேந்திரம் இவற்றின் பதிப்பு முதலான செய்திகள் பின்னே சொல்லப்பெறும். வெவ்வேறு பாதங்களிலுள்ள சுலோகங்களின் மொத்த எண்ணிக்கையை நோக்கும் போது, ஆகமங்கள் பொதுவாக முழுஞானத்தையும் கிரியையும் முதன்மையாகக் கருதின என்று திட்டமாய்த் தெரிகிறது.

மூலாகமங்கள் இருபத்தெட்டுக்கும் உரிய மொத்தச் சுலோகங்களின் தொகை பரார்த்தத்து, ஒருசங்க, ஒருபதும, எட்டற்புதத்து, பத்தொன்பது கோடியே 33 லட்சத்து 44 ஆயிரமாகும். அதாவது இது நாம் கனவிலும் நினைத்துப்பார்க்க ஒண்ணாத பெருந்தொகையாகும். ஆயினும் ,காரணாகமத்துக் கிரியா பாதம் பூர்வபாகம் மட்டும் இன்று கிடைத்துள்ளது. 16 ஆயிரத்துக்கும் அதிகம். ஆகவே எல்லா ஆகமங்கள் உபாகமங்கள் இவற்றின் தொகை முன்கூறியவாறு மிகப் பெரிய எண் என்றால், வியப்படைவதற்கு இடமில்லை. ஒரு வேளை இதனோடு வேறு மற்றுள்ள அகப்புறச் சைவ சமயங்களுக்குரிய ஆகமங்களையும் கூட்டினால் இத்தொகை இருந்திருக்கக்கூடும்.

ஒரு விபரீத நிலை: படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள்கூட, ஆகமமென்றால் அது வெறும் பூசைக்கு உரிய கிரியைகளை மட்டும் சொல்வது, அதில் மெய்ப்பொருள் பற்றிய செய்தி எதுவும் இல்லை என்று தப்பாக நினைக்கிறார்கள். இதை எல்லோரும் மாற்றிக் கொள்ளவேண்டும். டாக்டர் சுரேந்திரநாத் தாஸ்குப்தா என்ற கல்கத்தா தத்துவநூற் பேராசிரியர் ஒருவரே, ஆகமங்களை நன்கு ஆய்ந்து அவை கூறும் பொருளைத் திட்டமாக உணர முயன்றவர். அவர்கூட, ஆகமத்தில் எல்லாம் கிரியையே, மெய்ப்பொருட்செய்தி சுலோகமாக இல்லை என்ற தவறான முடிவுக்கு வருகிறார். அனைத்து ஆகமங்களையும்-ஆங்கில மொழி பெயர்ப்பிலுள்ள எல்லாவற்றையும் படித்திருக்கிறார். அவரே இப்படி என்றால் மற்றவர்களைப்பற்றி என்ன சொல்வது? அவர் கூறுவது வருமாறு:

''ஆகம சைவத்தை நாம் விளக்கப் புகுந்த இடத்தில், இப்போது கிடைக்கும் ஆகமம் முழு

மையாயிருந்தாலும் சரி, பகுதியாயிருந்தாலும் சரி, அனைத்தையும் பயன்படுத்த முயன்றிருக்கிறோம். ஆகமங்களின் பெரும்பகுதி, கிரியைகள், வழிபாட்டுச் சடங்குகள் கோயிலமைப்பு மந்திரங்கள் போன்றவற்றையே பேசுகிறது. இவற்றில் தத்துவப் பொருள் எதுவும் இல்லை. ஆகவே இவற்றைக் கொள்வதற்கில்லை.....ஆகம இலக்கியம் ஓரளவு விரிவாகவே உள்ளது. ஆனால் அதில் அமைந்துள்ள தத்துவப்பொருள் மிகவும் குறைவு. ஆகமங்களில் தத்துவப் பொருள்கள் சொற்ப அளவு உள்ளன என்பது உண்மை. ஆனால் அவற்றின் பொதுவான நோக்கு, சைவ சமயச் செய்திகள் பற்றியே அன்றிச் சைவசித்தாந்த தத்துவம் பற்றி அல்ல. ஆகவே அங்கு நாம் காண்பதெல்லாம் பெருவாரியான கிரியை முறைகள், கோயில் அமைப்பதற்கான கட்டிடச் சிற்ப முறைகள் பற்றிய விவாதம், மந்திரங்கள் இவற்றின் குறியான லிங்கப் பிரதிட்டை, பூசை முதலிய விவரங்களே. எனினும் ஆகமங்கள் பெரும்பாலானவற்றில் வித்தியாபாதம் என்ற பெயருடைய ஒரு தனிப் பகுதி இருக்கிறது. அதனுள் இச்சமயத்துக்கு அடிப்படையாயுள்ள பொதுத் தத்துவக் கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன'' (இவருடைய நூல் 5ஆம் தொகுதி, பக்கம் 20).

புதுச்சேரி பிரெஞ்ச்சு இந்தியக் கழகத்தால் மதங்காகமத்தில் ஞானபாதம், பட்டராமகண்டருடைய வியாக்கியானத்தோடு ஒரு பெரு நூலாக முன்னமே வெளியாகியுள்ளது. கருத்து ஏனைய மூன்று பாகங்களும் அதே முறையில் வியாக்கியானத்தோடு விரிவாக வெளியிடவும் பட்டுள்ளது.

ஆகமத்தின் முக்கியப் பொருளை இங்கு மூன்று பெயரில் சுருக்கிச் சொல்லி விடலாம். ஒன்று பரம்பொருளாகிய சிவம், மந்திரம், குருமுகமாய்ப் பெறத்தக்க பரஞானம்.

கீழ்க்கண்ட அட்டவணை, ஆகமங்கள் தங்கள் நான்கு பாதங்களையும் என்ன வரிசையில் அமைத்துத் தருகின்றன என்பதைக் காட்டும்.

**கிரணம்:** வித்தியா, கிரியா, சரியா, யோகம்
**மதங்கம்:** வித்தியா, கிரியா, சரியா, யோகம்
**மிருகேந்திரம்:** (உபாகமம்): வித்திய, யோகம், கிரியா, சரியா.
**ரௌரவம்:** வித்தியா, கிரியா

சுப்பிரபேதம்: கிரியை, சரியை, யோகம், வித்தியா.

ஒன்றுக்குப் பாதங்கள் வெளியாகியுள்ள ஆகமங்கள் இவ்வளவே.

(சித்தாந்த சாராவளி: வித்தியா, கிரியா, யோகம், சரியா.)

இது ஆகமங்களின் சாரமான ஒரு சாத்திர நூலாதலின் இதனையும் இங்குக் குறிப்பிட்டோம்.


## அல்லமாப் பிரபு

பசவேசுவரரின் சம காலத்தில் விளங்கியவர் அல்லமாப் பிரபு என்னும் வீர சைவச் சான்றோர். அவர் ஷிமோகா மாவட்டத்தில், பெல்காம் என்னும் இடத்தில் பிறந்தவர். மிருதங்கம் வாசிப்பதில் மிக்க தேர்ச்சி பெற்றவர். பெல்காவியில் உள்ள யோகேசுவரர் கோயிலில், கமலதேவி என்னும் அழகிய நங்கையினைச் சந்தித்துக் காதலித்து மணந்தார். எதிர்பாராத வகையில் அவள் சில ஆண்டுகளில் இறந்துவிடவே, வாழ்க்கையை வெறுத்துத் துறவு நெறி மேற்கொண்டார். குகேசுவரர் என்னும் இஷ்டலிங்கத்தை வழிபட்டார். சீவன் முத்தராகவும், நிர்விகல்ப சாதகராகவும் திகழ்ந்தார்.

## சித்தராமையர்

அல்லமாப் பிரபுவினால் ஆட்கொள்ளப்பெற்றவர், சித்தராமர் என்பவர். அவர் சாமளாதேவி என்னும் அரசியால் ஆளப்பெற்று வந்த சோலாப்பூர் என்னும் இடத்தில், சுக்கிவேமாதையன் என்பவரின் புதல்வராகப் பிறந்தவர். இரேவண சித்தரின் அருள் வாழ்த்துப் பெற்றவர். இளமையிலேயே துறவு நெறிமேற்கொண்டு, காவளர்த்தல் குளம்தொடுதல், போன்ற பல சமூகநலப் பணிகள் செய்து வந்தார். ஒருசமயம் அல்லமாப் பிரபு சோலாப்பூர் சென்றபோது, சித்தராமர் குளம் வெட்டிக் கொண்டிருத்தலைக் கண்டார். ''வழுக்கைத் தலை அழுக்கற்ற மனத்தைக் காட்டாது; உடலாகிய குளத்திற்கு மனமாகிய கரையைக்கட்டு. நல்லொழுக்கமாகிய படிக்கட்டுக்களை அமை. இறையருளின்பம் ஆகிய நீரை நிரப்பு; ஞானம் ஆகிய அருள் வெள்ளத்தின் பெருக்கமாக அந்த நீர் அமைவதாகும். புறத்தே செய்யப் பெறும் மூர்த்தி பூசை, பொதுமக்களுக்குரியது. நீ யோகியாக விளங்கி இறைவனை உள்ளத்திலே வழிபடுக'' என்று உபதேசித்துச் சித்தராமரை ஆட்கொண்டார்.

—ஆசிரியர்



# திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம்

திரு. டாக்டர் இரா. கலைக்கோவன், திருச்சி.

எழிலார்ந்த பல கோயில்களைத் தன்னகத்தே கொண்ட கும்பகோணம் மிகப் பழமையானதொரு நகரமாகும். சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும், இந்நகரம் தனிச் சிறப்புடன் குறிப்பிடப்படுகிறது. சோழரின் கருவூலம் இங்கிருந்ததை,

"கொற்றச் சோழர் குடந்தை
வைத்த நாடுதரு நிதியினும் செறிய
கருங்கட் படிக்குவன் அறநில் யாமே"

என்ற அகநானூற்று வரிகள் உணர்த்துகின்றன. சோழப் பேராட்சியில் திளைத்திருந்த இந்நகரம் இலக்கியத்தைப் போலவே வரலாற்றிலும் சிறப்பிடம் பெற்றுள்ளது. பல்லவப் பாண்டியப் போர்கள் பல இங்கு நடந்திருக்கின்றன. இரண்டாம் நந்திவர்ம பல்லவனுக்கும், முதலாம் வரகுணபாண்டியனுக்கும் இடையே நடந்த போர்களும், மூன்றாம் நந்திவர்மனுக்கும் சீமாற சீவல்லபனுக்கும் நடந்த போர்களும் குறிப்பிடத்தக்கவை.

மூன்று நூற்றாண்டுகளாய்ப் பல்லவர், பாண்டியர் பிடியிலிருந்த இக்குடந்தை மாநகரின் தலையெழுத்தை மாற்றியெழுதுவதுபோல் கி.பி. 880இல் கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து மைல் தொலைவில், மண்ணியாற்றின் வடகரையிலுள்ள திருப்புறம்பயத்தில் பெரும் போர் நடைபெற்றது. இப்போரில் சோழகுலத்தோன்றல் ஆதித்தன் உதவியுடன் அபராசிதப் பல்லவன் பெரு வெற்றி பெற்றான். பாண்டியப் பேரரசு ஒரு முடிவுக்கு வந்தது. ஆதித்தனின் எழுச்சி, பல்லவர்களையும் ஒடுக்கிக் குடந்தை மாநகரை மீண்டும் சோழர்களின் தன்னிகரற்ற பேராட்சியின் கீழ்க் கொணர்ந்து சேர்த்தது.

இத்தகு வரலாற்றுப் புகழ்வாய்ந்த குடந்தையைக் காவிரியும், அரிசிலாறும் இருபுறமும் மாலையிட்டது போல் தழுவிப் பாய்ந்து நீர் வளம்மிக்க நகரமாக்கியுள்ள பொன்னினி பாயும் இப்புனித பூமியில் எட்டுகிலோ மீட்டர் சுற்றளவுக்குள் நூற்றைம்பது கோயில்கள் அமைந்துள்ளன.

பழமைச் சிறப்பும் கலைச்சிறப்பும் வாய்ந்த குடந்தை மாநகர்க் கோயில்களுள் குறிப்பிடத் தக்கது, அப்பரடிகளால் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்று போற்றப்படும் அருள்மிகு நாகேசுவரர் திருக்கோயிலாகும். கும்பகோணத்தில், நகரின் மத்தியில் அமைந்திருக்கும் இக்கோயில், ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமைச் சிறப்புடையதாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் திருநாவுக்கரசர் பெருமான் இப்பதிவாழ் இறைவனைப் போற்றிப் பரவி, 'சொல் மலிந்த' என்று தொடங்கும் தாண்டகமொன்றைப் பாடியுள்ளார். அதில்,

"நீறலைத்த திருவுருவும் நெற்றிக்கண்ணும்
நிலா அலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன்தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்
ஏறலைத்த நிமிர்கொடியொன்று உடையார் போலும்
ஏழுலகும் தொழுகழலெம் ஈசர் போலும்
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலும்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே"

என்னும் வரிகள் நெஞ்சையள்ளும் சிறப்புடையவை. அப்பரைப் போலவே சம்பந்தரின் திருவடிகளும் இக்கோயில் மண்ணை மிதித்திருக்கின்றன.

எழுச்சிமிக்க ஐந்து நிலைக் கோபுரவாயில், கிழக்கு நோக்கியுள்ள இக்கோயிலை அணி செய்கிறது. சுதையுருவங்கள் நிறைந்த இக்கோபுரத்து மாடங்களில் இறைவனின் பல்வேறு திருவிளையாடல் தோற்றங்கள் அழகுற அமைக்கப்

பட்டுள்ளன. அடித்தள நிலையில் அமைந்துள்ள குடப்பஞ்சரங்களும், கோட்டப்பஞ்சரங்களும் இக்கோபுரத்தின் எழிலுக்கு எழில் சேர்க்கின்றன.

கோயிலின் உட்புறம், வெளிப்புறத்தை விடச் சற்றுத் தாழ்வாக அமைந்துள்ளது. இரண்டு திருச்சுற்றுக்களுடன் கூடிய இத்திருக் கோயிலின் இடதுபுறம் சிங்கதீர்த்தமும், பூந்தோட்டமும் அமைந்துள்ளன. வலப்புறத்தில் தெற்கு நோக்கிய அம்மன் திருமுன் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவியின் பெயர் பெரியநாயகி அம்மன்.

இக்கோயிலின் கட்டடக்கலைச் சிறப்புக்குச் சான்றாகக் காட்சியளிக்கிறது, வடபுறத்தே யுள்ள ஆடவல்லானின் அழகு மண்டபம். இம்மண்டபக் கோயிலை மூன்றாம் இராசராசன் காலத்தில், கூத்தாடும் திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம் என்பவர் எழுப்பினர். இக்கோயிலுக்கு அவர் நிலக்கொடையளியளித்தமைக்குக் கல்வெட்டுச் சான்று உள்ளது. கட்டப்பட்ட காலத்தில் இந்த ஆடவல்லான் திருமுன் கூத்தாடும் திருஞானசம்பந்தேசுர முடையார் கோயில் என்று வழங்கப்பட்டது. இம்மண்டபம் ஒரு தேர்போல வடிக்கப்பட்டுள்ளது. இதன் இருபுறங்களிலும் பெரிய கல்சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சக்கரத்திலும் பன்னிரண்டு ராசிகள் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. முன்பக்கம் இரண்டு குதிரைகளும் நான்கு பெரிய யானைகளும் இத்தேரை இழுப்பவைபோல் சிற்ப வடிவில் அமைக்கப்பட்டுள்ளன. யானைகளின் அருகே பாகர்களின் வடிவங்களும் காட்டப்பட்டுள்ளன. இதன் அடித்தளத்தில் பல ஆடல் தோற்றங்களை விளக்கும் அழகுச் சிற்பங்களைக் காணலாம். இம் மண்டபத்தின் உள்ளே உயரமானதொரு மேடையில் ஆடவல்லானின் திருவடிவம் அமைந்துள்ளது.

வலக்கால் குறள்வடிவ அரக்கனின் முதுகில் ஊன்றியிருக்க இடக்கால் தூக்கிய திருவடியாக வலப்புறம் அமைய, விரிந்த சடைமுடிகள் இருபுறமும் பரவ, புன்னகை பொலிந்த முகத்தினராய்க் காட்சிதரும் ஆடவல்லானின் கருணை பொலிந்த ஆடல்தோற்றம் அழகுமயமானது. இறைவனின் அருகே அந்த ஆனந்த நடனத்தைக்கண்டு மயங்கி மகிழ்பவராய் இறைவனின் செப்புத்திருமேனி முவ்வளைவுக் கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆடவல்லான் அம்பலத்தின், முன் மண்டபத்தில் வலப்புறம் 'உச்சிஷ்ட கணபதி' என்ற திருப்பெயருடன் பிள்ளையார் தானும் தன் தேவியுமாய் எழுந்தருளியுள்ளார். இது ஒரு அபூர்வமான தோற்றமாகும். இதில் பிள்ளையார் வடிவம் பிறப்புறுப்புடன் அமைந்துள்ளது. அதைத் தேவி தன் வலக்கரத்தால் பற்றியிருப்பது போல் சிறபம் செதுக்கபபட்டுள்ளது. துதிக்கை பொருந்தியுள்ளது. பிள்ளையாரின் வலது முன்கரத்தில் மோதகம்; பின் கரத்தில் அங்குசம். இடது முன்கரம் தேவியை அணைத்தவாறு உள்ளது.[1]பின்கரத்தில் பாசம் இறைவியின் இடக்கரம் அலவன் முத்திரையில் அமைந்துள்ளது. பிள்ளையாரின் இடது தொடையில் அமர்ந்த நிலையில் தேவி காணப்படுகிறார்.

இச்சிற்பத்தின் அமைப்பும்கருத்தும் இதை நாயக்கர் காலத்துச் சிற்பமாய்க் காட்டுகிறது. நாயக்கர்கள் காலத்தில்தான் பாலுணர்வுச் சிற்பங்கள் பெருமளவில் கோயில்களில் இடம் பெற்றன. இதுபோன்றே பிள்ளையார் தேவி சிற்பம் முழையூர் பரசுநாதர் கோயிலில் உள்ளது. பிள்ளையார் தேவியை வருடுவது போன்ற சிற்பம், திருநல்லூர்க் கலியாணசுந்தரர் கோயிலில் உள்ளது.

இக்கோயிலின் திருச்சுற்றில், முன்புறம் மாரியம்மன் திருமுன்னும், தெற்குப் புறத்தில் பிரளயகால ருத்திரர் திருமுன்னும் அமைந்துள்ளன. மேற்கில் முருகன் வடிவமும், வராகி, நாராயணி, கௌமாரி, இந்திராணி, அபிராமி, மயேச்சுவரி, காளி முதலிய அன்னையர் எழுவர் வடிவங்களும் காணப்படுகின்றன.

மையக் கோயிலின் இறைவன் நாகேசுவர மூர்த்தியாய், லிங்க வடிவில் எழுந்தருளியுள்ளார். ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் பதினொன்று, பன்னிரண்டு, பதின்மூன்றாம் தேதிகளில் கதிரவனின் ஒளி மூல லிங்கத்தில் படியும் படியாகக் கோயிலை அமைத்திருக்கிறார்கள். கருவறைக்கு முன்னுள்ள மண்டபத்தில் கங்கை விநாயகர் காணப்படுகிறார். நின்ற கோலம். வலது முன்கரத்தில் உடைந்த தந்தம். வலது பின்கரம் தொங்கும் கரமாய் அக்கமாலையுடன் காட்சி தருகிறது. இடது முன்கரம் மோதகம் நிறைந்த கிண்ணத்தை ஏந்தியுள்ளது. பின் கரம் கதையின்மீது ஊன்றியுள்ளது. துதிக்கை இடப்புறமாய் வளைந்து மோதகத்தின்மீது சுருண்டுள்ளது. இடப்புறம் சாய்ந்த இருவளைவுக் கோலத்தில் காட்சிதரும் இக்கங்கை விநாயகரின் முப்புரிநூல் பாம்பாகவே அமைந்துள்ளது. ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிற்பத்தின் மேற்பகுதியில் வானவர்கள் கைகளில் மாலைகளுடன் காட்சி தருகிறார்கள். மிகஅழகாக வடிக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம் கண்ணையும் கருத்தையும் ஒருசேரக் கவர்கிறது. இதில் அழகுடன் புதுமையும் உள்ளது. இது நம்முடைய சிற்பிகளின் கைவண்ணமா அல்லது நம் தமிழகத்து வேந்தர்கள் தம் பிறநாட்டுப் படையெடுப்புகளின்போது வெளிநாடுகளிலிருந்து கொணர்ந்த வேறுநாட்டுச் சிற்பமா என்பது ஆய்வுக்குரியது.

மையக் கோயிலின் கட்டட அமைப்பு கண்ணைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின் புறச்சுவர்களில் தென்

புறத்தில் தென்திசைக் கடவுளும், மேற்குப் புறத்தில் அம்மையப்பரும், வடபுறத்தில் நான் முகனும் காட்சி தருகின்றனர். இக்கோயிலில் உள்ள மூன்று கரங்களுடன் கூடிய அம்மையப்பர் சிற்பம் முற்காலச் சோழர்களின் சிற்பக் கலைக் கோர் சாதனைப்பட்டயமாகும். வலப்புறமுள்ள இரண்டு கரங்களில், பின்கரம் பரசுவைத் தாங் கியுள்ளது. முன்கரம் அம்மையப்பர் வடிவத் தின் பின்னால் நிற்கும் காளையின் தலையில் பொருந்தியுள்ளது. இடக்கரத்தில் கண்ணாடி காட்டப்பட்டுள்ளது. இடப்பாகம் பெண் வடி வமல்லவா. அம்மையின் முகம் கண்ணாடியை நோக்கிச் சற்றே திரும்பிய நிலையில் உடல மைப்பு முறையும் வலப்புறம் ஆணுக்குரிய விதத்திலும், இடப்புறம் பெண்ணுக்குரிய விதத்திலும் சற்றும் உடற்கூறியல் மாறாத வகையில், மிகச் செம்மையாகச் செதுக்கப்பட் டுள்ளது. எடுப்பான நாசியும், இலேசான புன் முறுவல் அரும்பிய இதழ்களும், அழகும் கருணை யும் இணைந்து பொலியும் முகத்தோற்றமும், இந்த அம்மையப்பர் வடிவத்தை உயிரோட்ட முள்ள மானுட வடிவமாகவே காட்டுகின்றன.

உள்மண்டபத்துக்கோட்டங்களில் பிச்சையுகக் கும் பெம்மானும், கொற்றவையும் காணப்படு கின்றனர். கருவறைப் புறச்சுவர்களின் தாங்கு தளத்தில் வரிமானச் சிற்பங்கள் மிக அழகுபடச் சிற்றுருவச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள் ளன். புள்ளமங்கை திருஆலந்துறை மகாதேவர் கோயில், கண்டியூர் வீரட்டானேசுவரர் கோயில் போன்ற கோயில்களில் காணப்படும் சிற்றுருவச் சிற்பங்களையொத்த செதுக்குத் திறனும், பேரெழிலும் வாய்ந்தவை இவை. சிவதாண்டவக்கோலங்களும், இராமாயணக் காட்சிகளும்; இச்சிற்பத் தொகுதிகளில் வடித் துக் காட்டப்பட்டுள்ளன.

புறச்சுவர் கோட்டங்களுக்கு இடையே மனித வடிவங்கள் நின்ற நிலையில் சிற்பங்க ளாய்க் காட்டப்பட்டுள்ளன. இவ்வடிவங்களைச் சோழ அரசர்களென்றும் அரசிகளென்றும் சிலர் கருதுகிறார்கள். மேற்குப்புறக் கோட்டத் திலிருக்கும் அம்மையப்பர் வடிவத்துக்கு இரு புறமும் இரண்டு ஆடவர் வடிவங்கள் உள்ளன. ஒன்று மேற்குப்புறம் நோக்கிய நிலையிலும், இன்னொன்று வடபுறம் நோக்கிய நிலையிலும் காணப்படுகின்றன. இவை நல்ல முடியலங் காரங்களுடன் கம்பீரமானதோற்றத்தில்காட்சி தருகின்றன. இவற்றை அரசர்களின் வடிவங் கள் என்றாலும் தவறில்லை.

ஆனால் மழித்த தலையுடன், காக்கும் கரம் காட்டிய நிலையில், அரையாடையுடன் தோற்றமளிக்கும் வடிவங்களைக்கூடச் சோழ அரசர்கள் என்று திரு.எஸ்.ஆர். பாலசுப்பிர மணியம் குறித்திருப்பதுதான் வேதனையைத் தருகிறது. தெய்வவடிவங்கள், முனிவர்கள் முதலியோரின் திருவுருவங்களில்தான் கரம் காப்புமுத்திரையில் காட்டப்படும். அரசர்களின் கரங்கள் ஒருபோதும் காப்பு முத்திரையில் அமைக்கப்படுவதில்லை. இது பொதுவான விதி யாகும். மேலும் தலையை முண்டிதமாக்கிக் கொண்டு, துறவிக் கோலத்தில்சோழ அரசர்கள் இருந்ததாக வரலாற்றின் எந்தப் பக்கத்திலும் காணமுடிவதில்லை. இந்நிலையில் இவ்வடிவங் களைச் சோழ அரசர்களாய்க் குறித்திருப்பதை என்னென்பது!

ஆடவர் வடிவங்களைப் போலவே அழகி யர் வடிவங்களும் காணப்படுகின்றன. இங்குக் காணப்படும் நான்கு அழகியரில் யார் பேரழகி என்பதில் தான் போட்டி. ஒவ்வொரு சிற்பமும் ஒரு ஒய்யாரக் கோலத்தில் ஒல்காப் பேரழகு குடன் காட்சியளிக்கின்றது. வலக்காலில் அரை யாடையுடன், இடக்காலில் முழு அடையும் உடுத்தி, புதியதொரு நாகரிகத்துக்கே அடி கோலும் முதல் அழகியின் வலக்கரம் தொங் கும் கரமாகக் காட்டப்பட்டுள்ளது. இடக்கரத் தில் நீலோத்பல மொட்டு; கரங்களில் அடுக்கிய வளையல்கள்; தலையலங்காரமோ அவள் அழ குக்கு அழகு சேர்க்கிறது; கழுத்தணிகள் இக் கால மகளிர்க்கு புதிய டிசைன்களைக் கற்றுத் தரவல்லவை. எடுப்பான மார்பகங்களும், காதலைத் தேக்கிய விழிகளும், அந்த விழிகளி லிருந்து விடுதலையாகும் பார்வைகளில் பொதிந்த ஏக்கமும், இச்சிற்பப் பேரழகி யாருக்காகவோ தவித்துக் காத்திருப்பதைப் போலல்லவா தோன்றுகிறது.

இன்னொரு அழகி பனைச்சுருள் குண்ட லங்களுடன் சற்றே சரிந்து, சற்றே தளர்ந்த அழகு மார்பகங்களுடன், புதுவகைப் பதக்கங் கள், கழுத்துப் பகுதியை அழகிட, சிரித்துக் களித்துச் சிருங்காரப் புன்னகை சிறிதேமலர்ந்த இதழ்களில் துடிக்கும் நெஞ்சின் தவிக்கும் எண் ணங்களைத் தேக்கிப் பார்க்கும் அழகை என் னென்பது:

இன்னொரு அழகியின் உதடுகளுக்கு யாரோ ஒரு குறும்புக்காரர் உதட்டுச் சாயம் பூசியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள் ளுங்கள். எத்தனைத் தொலைவு இச்சிற்பத் தின் அழகு' அந்தக் குறும்புக்காரரைக் கவர்ந் திருந்தால், கிளுகிளுப்பூட்டியிருந்தால், இப்படி யொரு இனிய குறும்பை அவர் மனம் நினைத் திருக்கும், கரம் செய்திருக்கும்! முதல் பார் வைக்கு,

''அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ
கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு''

என்னும் வள்ளுவர் குறளையே நினைவூட்டும் அழகியராய்த்தோன்றி- பிறகே சிற்பவடிவங்கள் என்ற மெய்யை உணர்த்தும் இந்தச் சிற்ப இமயங்களை வடித்த சிற்பாசிரியர்கள்தான்

எத்தனைப் பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியவர்கள். சோழர்காலத்துச் சிற்பங்கலை சாதனைகளுக்கு இவ்வடிவங்கள் எடுப்பான சான்றுகளாகும்.

இக்கோயிலின் விமானம் அழகிய அமைப்புடையது. கருவறைக்கு மேலுள்ள இரண்டாம் தளத்தில் முதல்நிலையில் சாலைகளும் கர்ண கூடுகளும் உள்ளன. தென்புறத்துச் சாலையில் வீணை ஏந்திய தென்திசைக் கடவுளின் அழகு வடிவம் காணப்படுகிறது. இடக்காலைக் குத்திட்டு, வலக்காலை நீட்டிய நிலையில் அழகுச் செல்வராய், இருகரங்களிலும் நீண்டு மெலிந்த வீணையை ஏந்திய நிலையில் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. கிழக்குப் பார்த்த கீர்த்தி முகத்தில் இறைவனும் இறைவியும் வீற்றிருக்கும் கயிலைக் காட்சி காட்டப்பட்டுள்ளது. இதன் கீழே வாயிற்காப்போர் காணப்படுகின்றார். இவ்விறைவனை இங்குள்ள கல்வெட்டுகள் 'ஸ்ரீவிமானத்து செல்வப்பிரான்' என்று குறிக்கின்றன. இக்கல்வெட்டு முதலாம் இராசேந்திர சோழதேவனின் ஆளும் ஆட்சியாண்டில் வெட்டப்பட்டுள்ளது. உய்யக்கொண்டார் வள நாட்டைச் சேர்ந்த பாம்பூர் நாட்டிலுள்ள திருக்குடமூக்கு ஊரவையார், திருக்கீழ்க்கோட்டம் கோயில் திருவிமானத்திலுள்ள செல்வப் பிரானுக்குக் காணிக்கைகள் படைக்க நிலக்கொடை தந்த செய்தி இக்கல்வெட்டால் தெரியவருகிறது.

வெளித் திருச்சுற்றின் வடகிழக்கு மூலையில் கதிரவனுக்கென்று தனிக்கோயில் உள்ளது. இதன் வெளிப்புறச் சுவரில் ஜ்வரஹர விநாயகர் என்று அழைக்கப்படும் பிள்ளையாரின் புடைப்புச்சிற்பம் காணப்படுகிறது. இக் கதிரவன் கோயில் இங்குள்ள கல்வெட்டொன்றில் குறிக்கப்பட்டுள்ளது. மதுரையும், ஈழமும், கொண்ட கோப்பரகேசரிவர்மனான முதல் பராந்தகனின் நாற்பதாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டின் மூலம் கதிரவன் கோயிலில் இரண்டு விளக்குகள் எரிப்பதற்காக நிலக்கொடை தரப்பட்ட தகவலை அறிய முடிகிறது.

இக்கோயிலில் இருந்து நாற்பத்தோரு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பாண்டிய மன்னன் மாறன் சடையனுடையது. மற்றொன்று விஜயநகரப் பேரரசருடையது. ஏனைய முப்பத்தொன்பது கல்வெட்டுகளும் சோழர்களுடையவை. சோழ மன்னர்கள் இக்கோயிலின் வளர்ச்சியிலும்எழுச்சியிலும் எத்தனை ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பது அவர்களின் கல்வெட்டு எண்ணிக்கையில் இருந்தே விளங்கும். இங்கிருந்து படியெடுக்கப்பட்ட கல்வெட்டுகளின் பட்டியல்;

| | |
|---|---|
| 1. முதற் பராந்தகனின் கல்வெட்டுகள் | 7 |
| 2. கண்டராதித்தன் கல்வெட்டுகள் | 2 |
| 3. இரண்டாம் ஆதித்த கரிகாலனின் கல்வெட்டுகள் | 6 |
| 4. உத்தம சோழனின் கல்வெட்டுகள் | 4 |
| 5. முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டுகள் | 2 |
| 6. முதலாம் இராசாதிராசன் | 1 |
| 7. மூன்றாம் குலோத்துங்கன் | 1 |
| 8. மூன்றாம் இராசராசன் | 2 |
| 9. மன்னன்பெயர் தெரியாத இராச கேசரியின் கல்வெட்டுகள் | 4 |
| 10. மன்னன் பெயர் தெரியாத பர கேசரியின் கல்வெட்டுகள் | 8 |
| 11. மன்னன் பெயரோ அடை மொழியோ ஏதுமற்ற கல்வெட்டுகள் | 2 |

இக் கல்வெட்டுகளிலிருந்து பெறப்படும் செய்திகளை, விளக்கு எரிப்பதற்காக செய்யப் பெற்ற அறக்கொடைகள், எளியோரையும் அறிஞர்களையும் உண்பிக்கத் தரப்பட்ட கொடைகள், பலவேறுவகையான அறக்கட்டளைகள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள் என்று நான்கு தலைப்புகளின்கீழ் எளிதாகப் பிரிக்கலாம்.

விளக்கு எரிப்பதற்காகச் செய்யப் பெற்ற அறக்கொடைகள்:

பாண்டியப் பெருவேந்தர் மாறன் சடையன் இக்கோயிலில் இரண்டு விளக்குகள் எரிப்பதற்காக நூறு பொற்காசுகள் அளித்தார்.

இங்கல் நாட்டைச் சேர்ந்த இங்கள மாதேவன் என்ற கோடைமாறன் திருக்கீழ்க் கோட்டத்துப் பரமசாமி கோயிலில் விளக்கெரிக்க ஆடுகள் அளித்தார்.

ஊரவையாரிடம் இருபத்தைந்து கழஞ்சு பொன் கொடுத்துத் தான்வாங்கிய நிலத்தைக் காடன் அச்சன் என்பார் கோயிலுக்குக் கொடுத்தார். அந்நிலத்தை வைப்புநிதியாகக் கொண்டு, அதில் வரும் வருமானத்திலிருந்து கோயிலில் ஒரு நந்தாவிளக்கெரிக்க அப்பெருமகன் ஏற்பாடு செய்தார்.

பாண்டியன் முடித்தலை கொண்ட கோப்பரகேசரி இரண்டாம் ஆதித்தனின் நான்காம் ஆட்சியாண்டின்போது பெண்டாட்டிதேவயன் புலாலக்கன் என்னும் அவனிசிகாமணி ஒரு விளக்கெரிக்கத் தொண்ணூறு ஆடுகளைத் தந்துள்ளார். பெண்டாட்டி என்ற சொல் அக்காலத்தில் அரண்மனைப் பணிப்பெண்களைக் குறிக்கப் பயன்பட்டது. 'திருஅமுதிடும் பெண்டாட்டி' என்றெல்லாம், செய்யும் பணிக்கேற்ப

இப்பணிப்பெண்கள் பெயர் கொண்டிருந்தனர். பணிப்பெண்கள் கூட விளக்கெரிக்கும் திருப்பணிக்குக் கொடை தரக்கூடிய நிலையில் அப்போதைய சமுதாயநிலை வளமுற்று இருந்ததை இக்கல்வெட்டு நமக்கு நினைவூட்டுகிறது. பணிப்பெண்ணைக் குறிக்கப் பயன்படுத்திய 'பெண்டாட்டி' என்ற சொல் இப்போது மனைவியைக் குறிக்கப் பயன்படுத்துவது, சொல்லும் பொருளும் காலச்சுழற்சியில் எப்படியெல்லாம் மாறக்கூடும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது.

கண்டராதித்த சோழர் காலத்தில் தஞ்சையைச் சேர்ந்த, வீரசோழத் தெரிஞ்ச கைக்கோளப் பிரிவைச் சேர்ந்த குமரன் தூதுவன் என்பார், இக் கோயிலில் விளக்கெரிக்கத் தொண்ணூறு ஆடுகளை அளித்துள்ளார். இக் கல்வெட்டினால் 'தெரிஞ்ச கைக்கோளப்பிரிவு' என்றொரு படைப்பிரிவு இருந்த செய்தி நமக்குத் தெரியவருகிறது.

உத்தமசோழன் காலத்தில் ஒரு விளக்கெரிக்க தொண்ணூற்றாறு ஆடுகள் வீதம் இரண்டு விளக்குகள் எரிக்க இருவர் கொடையளித்துள்ளனர்.

முதற் பராந்தகன் காலத்தில் இக்கோயிலில் விளக்கெரிக்க ஒருவர் நிலக்கொடையும், ஒருவர் தொண்ணூறுஆடுகளும் அளித்துள்ளனர். காரி விழுப்பரையன் என்பவர் திருக்கீழ்க்கோட்டத்து மகாதேவர் கோயிலில் விளக்கெரிக்க 96 ஆடுகளை அளித்துள்ளார். இராசகேசரிக் கல்வெட்டொன்று இக்கோயிலில் ஒரு விளக்கெரிக்கத் தொண்ணூற்றாறு ஆடுகள் தரப்பட்ட செய்தியைத் தருகிறது.

பரகேசரிவர்மனின் இரண்டாம்ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்று கைக்கோளர் பிரிவைச் சேர்ந்த தேவன் இராசாதித்யன் என்பார் ஒரு விளக்கெரிக்கத் தொண்ணூறு ஆடுகளைத் தந்ததாகக் குறிப்பிடுகிறது. பரகேசரிவர்மனின் ஐந்தாம் ஆட்சியாண்டில் தேவன் நக்கன் என்பவரால் இக்கோயிலில் விளக்கொன்று எரிப்பதற்காகத் தொண்ணூற்றேழு ஆடுகள் கொடையாக தரப்பட்டுள்ளன.

திருநறையூர் நாட்டைச் சேர்ந்த, ஐயாற்றிலுள்ள மைந்தன் காவ்யன், திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானடிகள் கோயிலில் முதற்பராந்தகன் காலத்தில் தொண்ணூற்றாறு ஆடுகள் கொடையளித்து இக்கோயிலில் விளக்கொன்று எரிய வழி செய்தார்.

இப்படிப் பல பேராளர்கள் கொடையளித்த இந்த ஆடுகளை விற்றுவரும்வருமானத்திலும், அல்லது இவற்றின் பால் விற்பனையில், இனப்பெருக்கம் செய்வித்து, குட்டிகளை விற்றுவரும் வருவாயில், விளக்கெரிக்க ஆகும் செலவுகள் சரிக்கட்டப்பட்டிருக்கவேண்டும். இப்போதுகூட ஆலயங்களுக்குக்கால்நடைகளையும், கோழி, சேவல் போன்ற பறவைகளையும் காணிக்கையாகத் தரும் பழக்கம் இருப்பதை நாமறிவோம்.

இக்கோயிலில் விளக்கெரிக்கப்பதற்கு ஆடுகள் மட்டுமின்றி, பொருட்கொடையும், நிலக்கொடையும் கூடத் தரப்பட்டிருக்கிறது. மிழலைக்கூற்றத்துக் கருவூரைச் சேர்ந்த தனவதி அரங்கன் என்னும் பஞ்சவன், பரகேசரிவர்மன் இருபத்தெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டொன்றில், இக்கோயிலில் விளக்கெரிக்கப் பொருட்கொடை அளித்தவராகக் குறிப்பிடப் படுகிறார். மலையூர் நாட்டு நெடும்புரையூர் பூவன் கண்ணன் இருபத்தைந்து கழஞ்சுபொன் தந்து விளக்கெரிக்க உதவியிருக்கிறார்.

**உணவளிக்கக் கொடையளித்தவர்கள்:**

தஞ்சாவூரைச் சேர்ந்த பெரியன் திரிபுவன சுந்தரி என்னும் பெண்மணி திருக்குடமூக்கு ஊரவையாரிடம் எண்பத்தைந்து கழஞ்சுக்குத் தான்பெற்றநிலவருவாயைக்கோயிலில்வைத்து, அதன் வருவாயில் ஒரு சிவநெறியோகியை உண்பிக்கும் அறத்தைச் செய்தாள். இது பாண்டியன் முடித்தலை கொண்டவனான இரண்டாம் ஆதித்தன் காலத்தில் செய்யப்பட்டது.

பாண்டியன் முடித்தலைகொண்ட கோப்பரகேசரியான இரண்டாம் ஆதித்தன் காலத்தில், இங்கா நாட்டைச் சேர்ந்த கோயில் மயிலை என்னும் பராந்தகமூவேந்தர் வேளாண் பெரிய அறச்சிந்தனையாளராகத் திகழ்ந்ததை மூன்று கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஐம்பது அந்தணர்களை உண்பிக்கும்பொருட்டு அதற்குரிய தொகையை வருவாயாகத் தரவல்ல நிலத்தை இப்பெருமகன் இக்கோயிலுக்குக் கொடையாகத் தந்துள்ளார். கோயிலில் பிரபாகரம் கற்பித்த அறிஞர்களுக்குப் பட்ட விருத்தியாக நிலக்கொடையளித்த செய்தியை இன்னொரு கல்வெட்டு தருகிறது. வேதம்வல்ல இருபது அபூர்விகளையும் ஐந்து சிவயோகியரையும் உண்பிக்க வாய்ப்பாக ஊரவையாரிடம் நிலத்தை வாங்கிக் கோயிலுக்குக் கொடையாகத் தந்த இப்பெருமகனின் போற்றற்குரிய வள்ளன்மையை ஆதித்தனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு படம்பிடித்துக் காட்டுகின்றது. இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் அபூர்விகளைப்பற்றி மானம்பாடி நாகநாதசாமி கோயிலிலும் ஒரு கல்வெட்டு காணப்படுகிறது. இந்த அபூர்விகள் வேதம் வல்ல அறிஞர்கள் என்றும் வேதங்களைப் பிறர்க்குக் கூறிவழிப்

படுத்தவும், கோயில்களில் வேதவிளக்கவுரைகள் நிகழ்த்தவும் இவர்கள் அடிக்கடி பயணம் மேற்கொண்டனரென்றும், அப்பயணங்களின் போது அவர்களைத் தக்கமுறையில் கவனித்து அவர்தம் உணவுத் தேவைகளை நிறைவேற்றப் பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து பல அறக்கட்டளைகளை நிறுவினர் என்பதும் கல்வெட்டுகள் வழி உணரப்படும் செய்திகளாகும். இக்கோயிலில் இத்தகு பெருமக்கள் பெரும்பான்மையராக, அடிக்கடி வந்திருந்து வேதவிளக்கங்கள் செய்திருக்கக்கூடும். அதனால்தான் கோயில் மயிலை என்னும் பண்பாளர் இக்கோயிலில் மட்டும் இருபது அபூர்விகளை உண்பிக்கும் அறத்துக்கு வழிகோலியுள்ளார்.

தென்கரை வளநாடு, கிழார்க் கூற்றத்தைச் சேர்ந்த ஆயிரத்தளியில் உள்ள நிலங்களைக் குடந்தை ஊரவையார் விற்பனை செய்து, இரு வேதியர்க்கு உணவளிக்க வழிவகை செய்ததை முதற்பராந்தகனின் கல்வெட்டொன்று எடுத்தோதுகிறது. அரையன் கலங்காமலை என்பார் ஊரவையார் தனக்கு விற்ற நிலத்தின் வருவாயில் சிவயோகிக்கு உணவளிக்க ஏற்பாடு செய்தார்.

**பல்வேறு வகையான அறக்கட்டளைகள்:**

பாண்டியப் பெருவேந்தனான மாறன் சடையன் இக்கோயில் இறைவனைப் பாலில் திருமுழுக்காட்டுவதற்காக நூற்றுமுப்பத்தெட்டு பசுக்களைக் கொடையாகத் தந்துள்ளார். இராசகேசரிவர்மன் காலத்தில் கோயில் வழிபாட்டிற்காக எழுபது ஈழக்காசுகள் வழங்கப்பட்டன. இக்கோயில் இறைவனுக்குப் பூமாலை சார்த்துவதற்காக உத்தமசோழனின் தேவி நாராயணியார் நிலக்கொடையளித்துள்ளார். முதலாம் இராசேந்திர சோழன் காலத்தில் இக்கோயிலில் இருந்த சந்திரசேகரதேவர் உட்கோயிலுக்குக் காணிக்கை தரப்பட்டுள்ளது. இச்செய்தி, முதலாம் இராசேந்திரன் காலத்தில் சிவபெருமானின் பல்வேறு கோலங்களில் ஒன்றான சந்திரசேகர வடிவம் இக்கோயிலில் இருந்து வந்ததையும், மக்கள் அக்கோலத்திலுள்ள இறைவனை அன்போடு போற்றி வணங்கிவந்தனர் என்பதையும் மிகத் தெளிவாக உணர்த்துகின்றது.

இக்கோயிலில் விழா நடத்த, தென்கரை நாட்டுக் கிழார்க் கூற்றத்து ஆயிரத்தளி, காவலூர்வாசி வில்லவன் பேரரையன் நூற்றுஐந்து துளைப்பொன் கொடுத்தமையை மதுரை கொண்ட கோப்பரகேசரியின் கல்வெட்டொன்று உணர்த்துகிறது.

மூன்றாம் இராசராசனின் இரண்டு கல்வெட்டுக்கள் இக்கோயிலில் உள்ள அம்மையப்பர் கோட்டத்தைப் பற்றிப் பேசுகின்றன. அம்மையப்பர் கோட்டத்தை இக்கல்வெட்டுகள் 'மடந்தைபாக நாயனார் கோயில்' என்றுகுறிக்கின்றன. ஒரு கல்வெட்டு, மடந்தைபாக நாயனார் கோயிலைப் பழுது பார்க்கவும், இக்கோயிலுக்குத் தேவையான நகைகளுக்காகவும் கூத்தாடும் திருஞானசம்பந்தன் மடந்தைபாகன் என்பவர் நிலக்கொடையளித்ததைக் கூறுகிறது. இன்னொரு கல்வெட்டு, இக்கோயில் விழாவுக்கு அந்தணப் பெண்ணொருத்தி நிலக்கொடை அளித்ததைக் குறிப்பிடுகிறது. 'இம் மடந்தைபாக நாயனார்' என்ற திருப்பெயர் மையக்கோயில் இறைவனுக்கு அதாவது அருள்மிகு நாகேசுவரர்க்கே வழங்கிய இன்னொரு பெயரென்று தலவரலாறு தவறாகக் குறிப்பிடுகிறது. கல்வெட்டில் மிகத் தெளிவாக, 'திருக்குடமூக்கிலுள்ள திருக்கீழ்க்கோட்டம் உடையார் கோயிலில் அமைந்திருக்கும் மடந்தைபாக நாயனார் திருமுன்' என்ற பொருள் தோன்றும்படி குறித்திருந்தும், தலவரலாறு தவறான செய்தியையே தருகிறது. இப்போது கூட, தேவகோட்டத்துக் கொள்ளவைக்கு எத்தனையோ கோயில்களில் வழிபாடுகளும் பாவாடை சார்த்தலும் நடந்தவாறுள்ளன. எனவே மூன்றாம் இராசராசன் காலத்தில் அம்மையப்பர் கோட்ட வழிபாடு நடந்தமை குறித்து வியப்படைய ஏதுமில்லை.

**வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள்:**

இக்கோயில் கல்வெட்டுகளில் இருந்து பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை அறியமுடிகிறது. அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றை இங்குக் காண்போம்.

மதுரை கொண்ட உடையாரான பராந்தகசோழர் தன்னுடைய முப்பத்தெட்டாவது ஆட்சியாண்டில் குடமூக்கு ஊரவைக்கு மூவாயிரம் கழஞ்சு பொன் தண்டம் விதித்தார். ஊரவையார் அரிசிலாற்றங் கரையில் தங்களுக்குச் சொந்தமான உள்ள நிலத்தைத் திருக்கீழ்க்கோட்டத்துப் பரசாமியிடம் விற்று தண்டத்தில் ஒரு பகுதியாக ஐந்நூறு கழஞ்சு பொன்னைச் செலுத்தினார். இச்செய்தியைத் தரும் கண்டராதித்தரின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் பாண்டியப்படை பற்றிய குறிப்பும் ஜலசயனப்பெருமாள் கோயிலைப் பற்றிய குறிப்பும் காணப்படுகின்றன.

காஞ்சியை ஆண்ட மகாமண்டலேசுவர கோனேரிதேவ மகாராயர் காலத்தில் சேதிராய மாணிக்கத்தின் மகன் திம்மணன் மடந்தை

பாகக் கொங்கராயன் என்பாருக்கு, அவர் கோயிலில் செய்த வேலையைப் பாராட்டி அவ ருக்குக் கோயிலாட்சியார் வீடு, நிலம், உணவு முதலியன அளித்ததை விசயநகரக் கல்வெட் டுக்கள் உரைக்கிறது.

வேலூர் ஆழ்வார் திருப்புறம்பயம் உடை யான் என்னும் செம்பியன் பல்லவராயன், மூன் றாம் குலோத்துங்கன் காலத்தில் கோயிலில் திருப்புறம்பயம் உடையார் என்னும் மூர்த் தியை நிறுவி அதன் வழிபாட்டிற்கும், திருக் கீழ்க்கோட்டம் உடையாருக்கு மகரதோரணம் அமைக்கவும் பதினேழாயிரம் பொற்காசுகள் வழங்கினார்.

இக்கல்வெட்டுச் செய்திகள் நானூறு ஆண் டுக்காலத்துச் சமுதாய அமைப்பு முறையை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகின்றன. அப்பர் அடிகள் காலத்தில் அழைக்கப்பட்டாற் போலவே, கல்வெட்டுகளிலும் இக் கோயில் இறைவன், திருக்கீழ்க்கோட்டத்துப் பெருமானடிகள் என்று துவக்கக் காலத்திலும், பின்னர் திருக்கீழ்க்கோட்டத்துப் பரமசாமிஎன் றும், பிற்காலச் சோழர்கள் காலத்தில் திருக் கீழ்க்கோட்டத்துப் பட்டாரகர், திருக்கீழ்க் கோட்டத்து மகாதேவர் என்றும் அழைக்கப் பட்டு வந்தமை கல்வெட்டுகளால் அறியப்படு கிறது. இத்தலமிருக்கும் பகுதி சோழர்கள் காலத்தில், உய்யக்கொண்டார் வளநாட்டின் உட்பகுதியான வடகரை பாம்பூர் நாட்டைச் சேர்ந்த தேவதானமாக இருந்தது. கோயில் களில் மீமாம்சம், பிரபாகரம் போன்றவை கற்றுத்தரப்பட்டன என்பதும் இக்கல்வெட் டுக்களால் அறியப்படும் உண்மைகளாம்.

---

## சீக்கியரின் பஞ்ச ககாரங்கள்

சாக்த மதத்தில் வழங்கப்படும் 'பஞ்ச மகாரங்கள்' போல, குரு கோவிந்தசிங் சீக்கிய மதத்திற்குரியனவாக 'பஞ்ச ககாரங்கள்' என்பவற்றை விதித்தார். ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளர வேண்டிய பண்பு நலன்களுக்குரிய வெளியடையாளங்களாகச் சிலவற்றைச் சீக்கியர்கள் அனைவரும் தரிக்க வேண்டும் என, இவர் பணித்தருளி னார். அவற்றின் பெயர்கள் ''க'' என்னும் எழுத்தின் இனத்தில் தொடங்குவ தாலும், ஐந்து என்னும் எண்ணிக்கையின் அளவில் அமைந்ததனாலும், அவை ''பஞ்ச ககாரங்கள்'' எனப்படும். சீக்கியர் ஒவ்வொருவரும், தூய்மையைக் குறிப்ப தாகிய கங்கம் (சீப்பு), நேர்மையைச் சுட்டுகிற கரம் (கைவளையம்), புலனடக் கத்தை உணர்த்தும் கச்சம் (இடுப்புத் துணி), ஆன்மிக ஆற்றலை அறிவிக்கும் கிர் பான் (கத்தி), தியாகவுணர்வைத் தெரிவிக்கும் கேசம் (நீண்ட தலைமுடி) என்னும் ஐந்தையும், தமக்குரிய அணிகலன்களாகக் கொண்டு, சிங்கத்தைப் போல அஞ்சா நெஞ்சுடன், கடவுளின் ஊழியராக வாழவேண்டும் என்று, குரு கோவிந்தசிங் விதித்தார். கலியுகத்தில் இறையருளையும் வீடுபேற்றையும், எய்துவதற்குரிய எளிய இனிய வழி, இறைவனின் திருப்பெயர்களை இடையறாது ஓதும் திருநாம செபமேயாகும். என்பதுதான், குருநானக் அவர்கள் நிறுவிய சீக்கிய மதத்தின் சிறந்த சாரமான போதனையாகும்.

## பசவேசுவரர் (கி.பி. 1131-1167)

இவர், இலிங்காயதம் என்னும் வீர சைவ மதத்தைப் பரப்பியருளிய சான்றோர். கன்னட நாட்டில் பீஜப்பூர் மாவட்டத்தில் இங்குளாபுரம் பாகே வாடி என்னும் ஊரில், பிராம்மண குலத்தில் பிறந்தவர். தந்தை மாடிராசன், தாய் மாடாம்பாள். மேலைச் சாளுக்கிய மரபைச் சார்ந்த மூன்றாம் சோமேசுவர மன்னரின் பின்வந்த இரண்டாம் சகதேவ மல்லர், மூன்றாம் தைலபன் ஆகியோரின் கீழ் இருந்த சிற்றரசனும், கலாசூரி மரபைச் சேர்ந்தவனும், கல்யாணபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவனுமான, விச்சலன் (கி.பி.1156-1167) என்னும் சமண அரசனுக்கு அமைச்சராகவும், தலைமைக் கணக்கராகவும் விளங்கி யவர். அவ்வரசனின் படைத் தலைவராகப் பணியாற்றியவரும், தமது தாய் மாம னாரும் ஆன, பலதேவர் என்பவரின் மகள் கங்காம்பிகையை மணந்து கொண்டார். பீசப்பூர் மாவட்டத்தில் உள்ள கூடலசங்கமம் எனும் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபட்டு அவரால் இலிங்க தீட்சை பெற்றார். கல்யாணபுரத்தில், 'அனுபூதி மண்டபம்' என்னும் சமய சங்கம் நிறுவினார். இதனால் இலிங்காயத இயக்கம் பெரிதும் பரவத் தலைக்கப்பட்டது. பசவேசுவரரைத் திருநந்தி தேவரின் அவதாரமாக இலிங்காயத மதத்தைப் பின்பற்றும் வீரசைவ மக்கள் போற்றுகின்ற னர்.

—ஆசிரியர்

---

# பால்வரை தெய்வம்


" திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் "

பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார்,

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம்.


ஆசிரியர் தொல்காப்பியனார், பெயர்களின் இறுதியில் அமைந்த எழுத்துக்களைக் கொண்டே இப்பெயர் உயர்திணை அஃறிணைகளுள் இன்ன திணையைச் சார்ந்த தென்றும் ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் பால்களுள் இன்ன பாலைச் சார்ந்ததென்றும்அறிந்து கொள்ளும் சொல்லமைப்பினைத் தொல்காப்பியம் சொல்லதிகாரம் கிளவியாக்கத்தின் தொடக்கத்தில் விளக்கியுள்ளார். இங்ஙனம் இருதிணை ஐம்பால்களுள் இன்னதிணை இன்ன பால் என விளங்கிக் கொள்ளும் விகுதிகளைப் பெறாத பெயர்கள் சிலவற்றை எடுத்துக்கூறி அவற்றை உயர்திணையுள் அடக்குவதாக அமைந்தது

''காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரைதெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல் எனவரூஉம்
ஆயீரைந்தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங்கிளவி யெல்லாம்
பால்பிரிந் திசையா உயர்திணைமேனே''

(தொல்-கிளவியாக்கம்)

எனவரும் தொல்காப்பியச் சூத்திரமாகும். ''காலத்தத்துவமும், உலகப்பகுதியும், உயிரும், உடம்பும், பால்வரைதெய்வமும், வினையும், பூதமும், ஞாயிறும், திங்களும், சொல்லும் ஆகிய இப்பத்துடனே இவைபோன்று வருவனவாகிய சொற்களெல்லாம் ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்னும் ஐம்பால்களுள் இன்னபால் என்று பகுத்துரைத்தற்கு இயலாதனவாய் (மன்னுணர்வுடைய)உயர்திணைப் பொருள் மேல் நிகழ்வன'' என்பது இந்நூற்பாவின் பொருளாகும்.

இங்கு எடுத்துக்காட்டிய பெயர்களுள் உலகம், உயிர், உடம்பு என்னும் மூன்றும் நீங்கலாக எஞ்சியுள்ள ஏழுபெயர்களும் தெய்வத்தையே உணர்த்தினவாதலின் தெய்வஞ்சுட்டிய பெயர்நிலைக்கிளவியும் என்பதனால் உயர்திணையாகக் கொள்ளப்படும். இவையெல்லாம் தெய்வம் என்னும் உயர்திணைப் பொருளையுணர்த்தினவாயினும், தெய்வம் என்பது அஃறிணைச் சொல்லாதலின் அதற்கேற்ப அஃறிணைச் சொல் முடிபே பெறும் என்றார். இச்சொற்கள் கூறுகின்ற பொழுதே உயர்திணைப்பொருளைத் தோற்றுவித்து நிற்றலால் இவற்றை ஆகுபெயர் என்னாது இயற்பெயரெனவே கொள்ளுதல் வேண்டும். இச்சூத்திரத்திற் ''காலம்'' என்றது காலக்கடவுளை. உலகம் என்றது உலகத்தாரை. சாத்தன் அறஞ்செய்து விண்ணுலகுபுக்கான் எனவும், கொற்றன் உயிர் துறந்து போர்களத்தில் வீழ்ந்து கிடந்தான் எனவும் முறையே மக்களது உயிரும் உடம்பும் அவராகவே உணரப்பட்டு உயர்திணைக்குரிய சொல் முடிபு கொள்ளுதலால் மக்களேயாயின. இன்பதுன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுத்தலின் தெய்வத்தினைப் பால்வரை தெய்வம் என்றார். வினை என்பது இருவினை என்னும் தெய்வம். சொல் என்பது' நாமகளாகிய தெய்வம்' என இச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் தந்துள்ளார். இச்சூத்திரத்தில் 'வினை' என்பது அறத்தெய்வம் என விளக்கம் தருவர் சேனாவரையர்.

இனி இச்சூத்திரத்திற்குத் தெய்வச்சிலையார் கூறும் விளக்கம் பின்வருமாறு:

''காலம் என்பது முன்னும் பின்னும் நடுவுமாகி என்றும் உள்ளதோர் பொருள். உலகம் என்பது, மேலும் கீழும் நடுவும் ஆகி எல்லாவுயிரும் தோற்றுதற்கு இடமாகிய பொருள். உயிர் என்பது சீவன், உடம்பு என்பது மனம் புத்தி ஆங்காரமும் பூத தன்மாத்திரையுமாகி வினையினாற் கட்டுப்பட்டு எல்லாப் பிறப்பிற்கும் உள்ளாகி நிற்பதோர் நுண்ணிய உடம்பு. இதனை மூலப்பகுதி எனினும் ஆம். பால்வரை தெய்வம் என்பது ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய தன்மையை வரைந்து (நீங்கி) நிற்கும் பரம்பொருள். வினையென்பது ஊழ். பூதம் என்பது நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் ஆகிய ஐம்பெரும்பூதம். ஞாயிறு என்பது தீத்திரளாய் உலகு விளங்குவது. திங்கள் என்பது நீர்த்திரளாய் உலகிற்கு அருள் செய்வது. சொல் என்பது எழுத்தினால் இயன்று இயன்ற மந்திரம்.

விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வப் ஆயிற்று''.

எனத் தெய்வச்சிலையார் கூறும் விளக்கம் காலம் முதலாக இச்சூத்திரத்தில் எண்ணப்பட்ட எல்லாச் சொற்களும் தெய்வத் தொடர்பினையே யுணர்த்தி நின்றமையால் உயர்திணைப் பொருண்மையவாயின என்னும் நுட்பத்தினை நன்கு புலப்படுத்தும் நிலையில் அமைந்துள்ளமை காணலாம். ஐம்பெரும்பூதம், ஞாயிறு, திங்கள் என்பது தெய்வ ஆற்றலைப் புலப்படுத்துவனவாக உலக மக்களால் மதித்து வழிபடத்தக்கது என்பது, 'வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள், ஐந்தும் அகத்தே நகும்' எனத் திருவள்ளுவரும், 'ஞாயிறு போற்றுதும்; திங்களைப் போற்றுதும்' என இளங்கோவடிகளும் கூறுதலால் இனிது விளங்கும்.

இனி, இத்தொல்காப்பிய நூற்பாவில் 'பால்வரை தெய்வம்' எனவும் 'வினை' எனவும் அடுத்தடுத்துக் கூறப்பட்டன யாவை? என ஆராய்ந்து முடிவு காணுதலே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

''பால்வரை தெய்வம் என்பது, ஆணும் பெண்ணும் அலியும் ஆகிய நிலைமையை வரைந்து நிற்கும் பரம்பொருள்'' என்பர் தெய்வச் சிலையார். 'பால்வரைதெய்வம்' என்பது, எல்லோருக்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமான இருவினையையும் வகுப்பது எனச் சேனாவரையரும் நச்சியார்க்கினியரும் விளக்கம் தந்துள்ளார்கள். எனவே 'பால்வரை தெய்வம்' என்னும் இத்தொல்காப்பியத் தொடர், இறைவனாகிய முழுமுதற் பொருளையே குறித்து வழங்கப் பெற்றது என்பது, சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகிய எல்லா உரையாசிரியர் கட்கும் உடன்பாடாதல் பெறப்படும். இனி, இதனையடுத்து 'வினை' எனக் குறிக்கப்பெற்றது ஊழ்வினையே என்பதும் உரையாசிரியர் எல்லார்க்கும் ஒத்த கருத்தாகும். ஆகவே 'வினை' என்பதன் முன்னுள்ள 'பால்வரைதெய்வம்' என்னும் இத்தொடர்க்கும் ஊழ்வினையெனவே பொருள் கூறுதல் சிறிதும் பொருத்தமுடையதன்று என்பது நன்கு துணியப்பெறும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் 'பால்வரை தெய்வம்' என்னும் இத்தொடரில் 'பால்' என்னும் சொல்லை 'ஊழ்' என்ற பொருளிலேயே வழங்கியுள்ளார். என்பது,

''ஒன்றே வேறே யென்றிரு பால்வயின்
ஒன்றி யுயர்ந்த பால தாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோன் ஆயினுங் கடிவரையின்றே''

எனவரும் களவியற் சூத்திரத்தால் இனிது புலனாகும். ஒன்றுவிப்பதும் வேறு பிரிப்பதும் எனப் பால் (ஊழ்) இருவகைப்படும் என்றும், அவற்றுள் ஒன்றுவித்தலால் உயர்ந்த ஊழின் வழி நிகழும் இறைவனது ஆணையால் ஒத்த அன்பினராகிய தலைவனும் தலைவியும் பிறர் துணையின்றி ஓரிடத்து எதிர்ப்பட்டுக் கண்டு அளவளாவி மகிழ்வர் என்பது மேற்குறித்த சூத்திரத்தின் முதல் மூன்றடிகளின் பொருளாகும். இங்குப் 'பாலது ஆணை' என்றது உயிர்களது ஊழ்வினையினை இடமாகக் கொண்டு நிகழும் இறைவனது ஆணையினை. இந்நூற்பாவிற் கூறப்பட்ட இருவகைப் பால்களுள் ஒன்றுவிக்கும் பாலினை ஆகூழ் எனவும், வேறுபடுத்தும் பாலினைப் போகூழ் எனவும் ஊழ் எனனும் அதிகாரத்தில் திருவள்ளுவர் குறித்துள்ளார். இக்குறிப்பினை ஒப்பிட்டு நோக்குங்கால் இந்நூற்பாவில் 'ஒன்றே வேறே என்று இருபால்' என்றது, ஆகூழ் போகூழ் என்னும் இருவகை ஊழினையேயென்பது இனிது விளங்கும். எனவே பால்வரைதெய்வம் என்ற இத்தொடர்க்கு 'எல்லார்க்கும் இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையையும் வகுப்பது' எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறிய பொருளே தொல்காப்பியனார் சொல்லக் கருதிய பொருள் என்பது நன்கு துணியப்படும்.

ஒருவர் செய்த வினையாகிய ஊழ்தானே வந்து வினைசெய்தோர்க்குப் பயன்தரும்என்பது சமண சமயக் கொள்கையாகும். இக்கொள்கை தொல்காப்பியனார் காலத்தில் தமிழகத்தில் இடம்பெறவில்லையெனத் தெரிகிறது. ஊழ்வினை தானேவந்து வினை செய்த உயிர்களைப் பற்றுத் தன்மையதன்று என்பதும், உயிர்கள் செய்யும் நலந்தீங்குகளாகிய இருவினைக்கேற்ப அவற்றின் பயன்களை வினை செய்த உயிர்களே நுகரும்படி வகுத்து நுகர்விக்கும் முழுமுதற்பொருளாகிய தெய்வம் ஒன்று உண்டென்பதும் தொல்காப்பியனார் துணிபாகும்.

இங்ஙனம் உயிர்கள் செய்த நல்வினை தீவினை கட்கேற்ப அவற்றுக்குரிய இன்ப துன்பங்களாகிய வினைப் பயன்களை வினைசெய்த உயிர்களே நுகரும்படி வரையறை செய்து தெய்வத்தால் வகுக்கப்படும் முறைமையே பால், ஊழ், வகை என்ற சொற்களால் வழங்கப்படுகின்றது. இந்நுட்பத்தினை,

'வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது'

எனவரும் திருக்குறளில் தெய்வப்புலவர் தெளிவாக அறிவுறுத்தியுள்ளார். ஊழ்வினை தானே உருவெடுத்து வந்து வினை செய்தானைப் பற்றி நுகர்விக்கும் ஆற்றலுடையதன்று எனவும், எல்லாப் பொருள்களையும் ஒழுங்குபெற வகுத்து இயக்கி நிற்கும் இறைவன் வகுத்த முறைமையே ஊழ் எனவும் தெளிவுபடுத்த எண்ணிய திருவள்ளுவர், 'வகுத்தான வகுத்த வகை' என்ற தொடரால் ஊழ் வினையானது இத்தன்மையது என விளக்கியுள்ளார். இத்தொடரில் 'வகுத்தான்' என்னும் சொல், உலகியற்றியானாகிய இறைவனைக் குறிப்பதாகும். 'வகுத்தவகை'

என்றது அவ்விறைவனால் வகுக்கப்பட்ட நியதியாகிய ஊழினைக் குறிப்பதாகும். பகுத்தது 'பால்' என வழங்கினாற் போல, வகுத்தது 'வகை' என வழங்குவதாயிற்று.

தெய்வத்தின் இயல்பினை விளக்கக் கருதிய தொல்காப்பியர் 'பால்வரை தெய்வம்' எனத் தெய்வத்தைக் குறிப்பிட்டார். அவ்வாசிரியர் கருத்தின்படி ஊழ்வினையின் இயல்பினை விளக்க வந்த திருவள்ளுவர் 'வகுத்தான் வகுத்த வகை' என ஊழினைக் குறிப்பிட்டார். எனவே 'பால்வரை தெய்வம்' எனத் தொல்காப்பியனார் கூறியதும், 'வகுத்தான்' எனத் திருவள்ளுவர் கூறியதும் இறைவனது இலக்கணமே என்பது நன்கு புலனாதல் காணலாம். ஓருயிர் செய்த வினையின் பயன் பிறிதோருயிரின்கண் செல்லாதவாறு வினை செய்தவுயிரையே வினைப் பயன் சேரும்படி வகுத்து நுகர்வித்தல், வேண்டுதல் வேண்டாமையிலானாகிய இறைவனது ஆணையாதலின் அம் முதல்வனை 'வகுத்தான்' என்ற பெயராற் குறித்தார். திருவள்ளுவர். இங்கு வகை என்றது, இறைவனால் வகுக்கப்பட்ட முறைமையாகிய ஊழ்வினையே.

இவ்வாறு பன்னெடுங்காலத்திற்கு முன்னரே ஆசிரியர் தொல்காப்பியனாரும் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் முறையே முழுமுதற் பொருளாகிய தெய்வத்தைக் குறித்தும் ஊழ்வினையைக் குறித்தும் அறிவுறுத்திய தத்துவ உண்மைகளை நால்வகையாக விரித்து விளக்கும் நிலையில் அமைந்தது,

''செய்வினையுஞ் செய்வானும்
அதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையால் நான்காகும்
விதித்தபொருள் எனக்கொண்டே
இவ்வியல்பு சைவநெறி
யல்லவற்றுக் கில்லையென
உய்வகையால் பொருள்
சிவனென்றருளாலே உணர்ந்தறிந்தார்''

(பெரிய - சாக்கியநாயனார் - 5)

எனவரும் திருத்தொண்டர் புராணச் செய்யுளாகும். இச்செய்யுட் பொருளைக் கூர்ந்து நோக்குங்கால், உயிர்களாற் செய்யப்படும் நன்றும் தீதுமாகிய வினைகளும் அவற்றுக்கு வினைமுதலாகிய ஆன்மாக்களும், ஆன்மாக்கள் செய்யும் இருவினைப் பயன்களாகிய இன்பதுன்பங்களும் அப்பயன்களை வினைசெய்த ஆன்மாக்களே நுகரும்படி வகுத்து நுகர்விக்கும் இறைவனும்என இந்நால்வகைப் பொருள்களையும் உள்ளவாறு அறிந்து, அதற்கேற்ப வாழக்கையினை அமைத்துக் கொள்ளுதலே சிவநெறியாளர் கடமை என்பதும், சைவசமயத்திற்கே சிறந்தனவாகச் சாக்கியநாயனார் கண்டுணர்ந்த இந் நாற்பொருள்களும், ஆசிரியர் தொல்காப்பியனாரும், தெய்வப்புலவர் திருவள்ளுவரும் பன்னெடுங்காலத்திற்கு முன் அறிவுறுத்திய பழந்தமிழ்க் கொள்கைகளே என்பது இனிது புலனாதல் காணலாம். தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார் நாயனார் தொல்காப்பியம் திருக்குறள் முதலிய முன்னைத் தமிழ்நூல்களை நுண்ணிதின் உணர்ந்து சைவ சமயத்திற்கே உரியனவாகத் தேர்ந்து வெளியிட்ட நால்வகை யுண்மைகளையுட,

செய்வானுஞ் செய்வினையுஞ்
சேர்பயனுஞ் சேர்ப்பவனும்
உய்வா னுளனென் றுணர்

(திருவருட்பயன் - 53)

என உமாபதி சிவாசாரியர் தொகுத்துக் கூறிய திறம் இங்கு ஒப்புநோக்கி உணரற் பாலதாகும்.

விருப்பம், அறிவு, செயல் என்னும் மூவகையாற்றல்களும் விளங்கப்பெற்று உலக வாழ்க்கையில் ஈடுபடும் மக்கட்குலத்தார் இன்ப நுகர்ச்சியில் வேட்கையும் துன்பநுகர்ச்சியில் வெறுப்பும் உடையராதல் இயல்பு. இத்தகையோர் பிறரால் ஈட்டப்பெறும் நல்வினைப்பயன்களைத் தாமே வஞ்சனையாற் கவர்ந்துகொள்ளவும் தாம் செய்த தீவினைப்பயன்கள் தம்மைச் சார்ந்து வருத்தாதபடி தந்திரத்தால் தப்பியோடவும் முயலுதலை இவ்வுலகியலிற் காண்கிறோம். இவ்வாறு மக்கட்குலத்தாருள் ஒருவர் ஈட்டிய நல்வினைப்பயன்களை மற்றொருவர் வஞ்சனையாற் கவர்ந்து கொள்ளாதவாறும் தாமே நுகர்தற்குரிய தீவினைப்பயன்களை நெகிழவிட்டு ஓடாதவாறும், அவரவர் செய்த வினைக்குரிய பயன்களை அவரவரே நுகர்ந்து கழிக்கும்படி அரசனது ஆணைபோல் வரையறுத்துச் செலுத்துவது இறைவனது அருளாகிய ஆணையாகும். ஞாயிறும் அதனிற் பிரிவிலாத கதிரும்போன்று இறைவனின்றும் பிரிவிலாத அருளாற்றலாகிய ஆணையானது ஆன்மாக்கள் செய்த இருவினைகட்கு ஈடாக நுகர்தற்குரிய வினைப் பயனாகிய இன்ப துன்பங்களை அவ்வவ் வான்மாக்களே நுகரும்படி செய்வதாகலின், அங்ஙனம் செய்யும் இறைவனது ஆற்றலாகிய சத்தியினைப் 'பாலது ஆணை' (தொல்களவியல்) என்றார் தொல்காப்பியனார்.

ஒருபாற்கோடாது நடுநின்று செங்கோல் செலுத்தும் வேந்தனது ஆணை நிகழாக்கால் எளியோர் பொருளை வலியோர் கவர்ந்து கொள்வர். அதுபோலவே உலக முதல்வனாகிய இறைவனது ஆணையாகிய முறைமை இவ்வுலகில் நிகழாதாயின் ஓருயிர் செய்த வினைப் பயனைப் பிறிதோருயிர் நுகரவேண்டிய குழப்ப நிலையேற்படும். ஆன்மாக்களின் செயல்களாகிய வினைகளோ உணர்வில்லாதன. எனவே அவை வினை செய்த ஆன்மாவை நாடிச் சேர்ந்து தம் பயன்களை நுகரும்படி செய்யும் ஆற்றல் அவற்றுக்கு இல்லை. ஆகவே இருவினைப் பயன் இறைவன் ஆணையினாலேயே உயிர்களுக்கு அருத்தப்படும் எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும். நாடாளும் வேந்தன் தனது ஆணையை அதிகாரிகள்மேல் வைத்து அவர்களைக் கொண்டு ஆட்சி புரியுமாறு போலவே உலக முதல்வனாகிய இறைவனும் தனது ஆணையாகிய சிற்சத்தியை ஆன்மாக்

களது இருவினைமேல் வைத்து முறை செய்கின்றான் என்னும் மெய்ம்மையினை அறிவுறுத்துவன பால்வரை தெய்வம், பாலது ஆணை எனவரும் தொல்காப்பியத் தொடர்களாகும். இத்தொடர்களின் பொருளையுளங்கொண்டு இறைவனது பொதுவிலக்கணம் உணர்த்துவதாக அமைந்தது,

''அவையே தானேயாய் இருவினையிற்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கமின்றி நிற்குமன்றே''

எனவரும் சிவஞானபோத இரண்டாஞ் சூத்திரமாகும்.

''முதற் சூத்திரத்திற் குறித்த வண்ணம் அந்தம் ஆதியாக இறைவன் ஆணையென்னும் பெயருடைய தனது சிற்சத்தியானது உயிர்கள் செய்த இருவினைகட்கு ஏற்ப அவ்வுயிர்கள் இறத்தலையும் பிறத்தலையும் மேற்கொள்ளும்படி செய்யத் தனது ஆணையாகிய சத்தியுடன் பிரிவின்றி நிலைபெற்றுள்ளான்'' என்பது இதன் பொருளாகும்.

உழவர் செய்யுந்தொழிலுக்குத் தக்கபயனை விளைநிலம் விளைவிக்குமே தவிர உழவுத் தொழில் தானே விளைவிக்கமாட்டாது. அது போலவே விதையும் உணவும் போன்று காரண காரியத் தொடர்ச்சியாய்த் தொடர்ந்து வரும் வினைப்பயன்களை ஆன்மாவுக்குக் கூட்டுவிப்பவன் இறைவன் ஒருவனே யன்றிஇருவினைதானே கூட்டுவிக்க மாட்டாது என்பதே 'பால்வரை தெய்வம்' 'பாலது ஆணை' என மேற்காட்டிய தொடர்களால் அறியப்படும் தத்துவ உண்மையாகும்.



## பசவேசுவரர் வகுத்த சமய சாதனங்கள்

பசவேசுவரர், இலிங்காசாரம், சதாசாரம், சிவாசாரம், பிருத்தியாசாரம், ஞானாசாரம் என்னும் பஞ்ச ஆசாரங்களை வகுத்தார். பக்தன் மாகேசுவரன் பிரசாதி பிராணலிங்கி சரணன் ஐக்கியன் என்னும் ஷட்ஸ்தலங்களையும், குரு லிங்கம் சங்கமம் பாதோதகம் பிரசாதம் விபூதி உருத்திராக்கம் மகாமந்திரம் என்னும் அஷ்டாவரணங்களையும் அமைத்துக் கொடுத்தார். இவற்றிற் பஞ்சாசாரங்கள் என்பன, ஒரு தனி மனிதன், உலகியலில் சீலம் மிக்க உயரிய சிறந்த வாழ்க்கை நடத்துவதற்குப் பெரிதும் துணை புரிகின்றன. அஷ்டாவரணங்கள் என்பன, ஒருவன் ஆன்மிக நெறியில் சென்று உறுதி பெறுவதற்கு நற்பெரும் துணையாக அமைந்து நலம் விளைவிக்கின்றன. ஒருவனின் ஆன்மிக நலத்தில் ஷ்ட்ஸ்தலங்கள் அமைகின்றன. இவை மூன்றும் சமய வாழ்வில் தலைசிறந்த பெரும் சாதனங்களாகும். இவற்றை வகுத்து உருவாக்கித் தந்த பெருமை பசுவேசுவரருக்கே உரியதாகும்.

—ஆசிரியர்

பதிவு எண். எம் 7039



வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600 034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ,எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.